448

R.144
31112

வளர்

தமிழ்ப் பாடப் புத்தகம்

எட்டாம் வகுப்பு

ஏ.வி.டி. பாக்கியம் பிள்ளை,
தூத்துக்குடி — திருநெல்வேலி.

TB
-,6(8)
N36
5927

வளனூர் தமிழ்ப் பாடப் புத்தகம்

எட்டாம் வகுப்பு

1965 ஆம் ஆண்டுப் புதிய பாடத் திட்டத்தைத்
தழுவி எழுதப்பட்டது.

ஆசிரியர்:
புலவர் வை. குப்புசாமி முதலியார்,
தலைமைத் தமிழாசிரியர்,
பி. எம். ஓர்னலாஸ் உயர்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

A. V. D. பாக்கியம் பிள்ளை,
கல்வி நூற் பதிப்பாளர்
தூத்துக்குடி :: திருநெல்வேலி

உரிமையுள்ளது] 1966 [விலை ரூ. 1-50

முதற் பதிப்பு ... 1966

[இந்நூல் 10·9 கி. கிராம் வெள்ளைத் தாளில்
அச்சிடப்பட்டது]

145947
சென்னை-600 008

TB
0-,6(8)
N66

அர்ச். சூசையப்பர் அச்சகம், தூத்துக்குடி.

முன்னுரை

வளனர் தமிழ்ப் பாடப் புத்தகம் என்னும் இந் நூல் அரசியலார் 1965ஆம் ஆண்டில் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்தைத் தழுவி எட்டாம் வகுப்பிற்காக எழுதப்பெற்றது. இதன்கண் சுவை மிகுந்த செய்யுட் களும் பாரத நாட்டுப் பண்பு உலகியலறிவு முதலிய வற்றை வளர்க்கும் உரைநடைப் பாடங்களும் இடம் பெற்றுள்ளன. இன்றியமையா இலக்கணக் குறிப்புக் களும் வினக்களும் இணைக்கப் பெற்றுள்ளன. எனவே எட்டாம் வகுப்பு மாணவர்க்கு இந்நூல் சிறந்த தமிழறி வையும் பரந்த மனப்பான்மையையும் ஏற்படுத்தும் என்னும் நம்பிக்கையை யுடையேன்.

இந்நூலைக் கண்ணுறும் கலாசாலைத் தலைவர் களும் தண்டமிழ்ப் புலவர்களும் தத்தம் பள்ளிகளில் பாடமாக்கி, எளியேனை மேலும் இப்பணியில் ஊக்கு மாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

தமிழ் வெல்க!

ஆசிரியன்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

பக்கம்

I. வாழ்த்துப் பகுதி 1

(அ) தேவாரம்
(ஆ) திருவாசகம்
(இ) தேம்பாவணி
(ஈ) திவ்யப் பிரபந்தம்
(உ) சீருப் புராணம்

II. அறவுரைப் பகுதி 6

(அ) திருக்குறள்
(ஆ) நாலடியார்
(இ) பழமொழி
(ஈ) நீதிநெறி விளக்கம்
(உ) ஏலாதி
(ஊ) சிறுபஞ்சமூலம்

III. கதைப் பகுதி 23

(அ) கம்பராமாயணம் — குகப்படலம்
(ஆ) பெரிய புராணம் — மெய்ப்பொருள் நாயனுர் புராணம்
(இ) திருவிளையாடல் புராணம் — கான்மாறியாடிய படலம்
(ஈ) சீருப் புராணம் — கரம் பொருத்து படலம்
(உ) தேம்பாவணி — இயேசுநாதர் பிறப்பு

IV. பல்சுவைப் பகுதி 58

வருணனைப் பாடல்கள்

1. இயற்கை எழில்
2. சீட்டுக்கவி
3. சிலேடைப் பாடல்கள்
4. சிறு நூல்கள் — குற்ருலக் குறவஞ்சி, நந்திக்கலம்பகம், முக்கூடற்பள்ளு
5. வழிபாட்டுப் பாடல்கள்

உரைநடைப் பகுதி

1	ஜவஹர்லால் நேரு	... 77
2	நகைச்சுவை	... 82
3	வீரத்தாய்மார்	... 86
4	மாமல்லபுரத்துச் சிற்பங்கள்	... 90
5	கண்ணகி வழக்குரைத்தது	... 95
6	உண்டி கொடுத்த உதியன்	... 100
7	இசை இன்பம்	... 105
8	ஒற்றுமை உயர்வளிக்கும்	... 107
9	தேசீயக் கவிஞர் பாரதியார்	... 111
10	இரப்பர்த் தொழில்	... 116
11	இன்பச் செலவு	... 120
12	ஜேம்ஸ் குக்	... 125
13	செய்ந்நன்றி மறவாச் செம்மல்	... 131
14	தைரியநாதரும் தமிழ்த் தொண்டும்	... 136
15	ஆதிரை	... 142
16	வானொலி	... 145
17	ஔவையார் தூது — (சிறு நாடகம்)	... 149

மனப்பாடம் செய்தற்குரிய பகுதிகள்

			வரிகள்
I.	வாழ்த்துப் பகுதி		
	தேவாரம்	...	4
	திருவாசகம்	...	4
II.	அறவுரைப் பகுதி		
	திருக்குறள் 1, 2, 5, 6, 10, 15, 16. 17, 19, 22, 23, 24, 30, 32, 34, 35	...	32
	நாலடியார் — செய்யுட்கள் 1, 3; பழமொழி — ,, 1, 5; நீதிநெறி விளக்கம் செய்யுள் 3; சிறுபஞ்சமூலம் செய்யுள் 1	...	24
III.	கதைப் பகுதி		
	இராமாயணம்—செய்யுட்கள் 3, 4, 14, 16, 17	...	20
	பெ. புராணம்—செய்யுட்கள் 7, 22	...	8
	திருவிளையாடல்—செய்யுள் 12	...	4
	தேம்பாவணி—செய்யுள் 3	...	4
IV.	பல்சுவைப் பகுதி		
	இயற்கை எழில் (மாலைப் பொழுது)	...	4
	சிலேடை (நெல்லிக்காய் மேன்மையுறும்)	...	4
	வழிபாட்டுப் பாடல்கள் (திருமால்)	...	4
	(முருகன்)	...	4
	(கலைமகள்)	...	4
			120

தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல ஜமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

— மகாகவி இரவீந்திரநாத தாகூர்

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும்
ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது.
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

செய்யுட் பகுதி

I வாழ்த்துப் பகுதி

(அ) தேவாரம்

தே + ஆரம் = தேவாரம். தெய்வத்திற்கு அணிந்த பூமாலை போன்ற பாமாலை. தே + வாரம் = தேவாரம்; தெய்வத்தைப் பற்றிய இசைப்பாட்டு. தேவாரம் பாடினோர் மூவர். ஆதலின் 'மூவர் தமிழ்' என்றே தேவாரம் கூறப்பெறும். அவர்கள் திரு ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி என்பார். கீழ்க் காணும் பாடல் திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது.

ஆசிரியர் குறிப்பு:– ஊர் – திருவாமூர். பெற்றோர் – புகழனார், மாதினியார். தமக்கையார் – திலகவதியார் இயற் பெயர் – மருள் நீக்கியார். மரபு – சைவவேளாளர். சிறப்புப் பெயர்கள் – சமண்சமயத் தலைவராக விளங்கியபோது தரும சேனர்; மீண்டும் சைவம் சார்ந்தபோது சிவபிரான் அருளிய திருப்பெயர் திருநாவுக்கரசர். சம்பந்தரால் வழங்கப்பெற்ற பெயர் அப்பர் என்பது. பாடியன – சைவத் திருமுறைகள் பன் னிரண்டுள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகள். காலம் – ஏழாம் நூற்றாண்டு.

தில்லைக்கூத்தன் திருக்காட்சி

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

—திருநாவுக்கரசர்

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும்
ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது.
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

செய்யுட் பகுதி

I வாழ்த்துப் பகுதி

(அ) தேவாரம்

தே + ஆரம் = தேவாரம். தெய்வத்திற்கு அணிந்த பூமாலை போன்ற பாமாலை. தே + வாரம் = தேவாரம்; தெய்வத்தைப் பற்றிய இசைப்பாட்டு. தேவாரம் பாடினோர் மூவர். ஆதலின் 'மூவர் தமிழ்' என்றே தேவாரம் கூறப்பெறும். அவர்கள் திரு ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி என்பார். கீழ்க் காணும் பாடல் திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது.

ஆசிரியர் குறிப்பு:- ஊர் – திருவாமூர். பெற்றோர் – புகழனார், மாதினியார். தமக்கையார் – திலகவதியார் இயற் பெயர் – மருள் நீக்கியார். மரபு - சைவவேளாளர். சிறப்புப் பெயர்கள் - சமண்சமயத் தலைவராக விளங்கியபோது தரும சேனர்; மீண்டும் சைவம் சார்ந்தபோது சிவபிரான் அருளிய திருப்பெயர் திருநாவுக்கரசர். சம்பந்தரால் வழங்கப்பெற்ற பெயர் அப்பர் என்பது. பாடியன – சைவத் திருமுறைகள் பன் னிரண்டுள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகள். காலம் – ஏழாம் நூற்றாண்டு.

தில்லைக்கூத்தன் திருக்காட்சி

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

—திருநாவுக்கரசர்

அருஞ்சொற்பொருள்:

குனித்த–வளைந்த. கொவ்வைச் செவ்வாய்-கொவ்வைப் பழம்போல் சிவந்த வாய். குமிழ்சிரிப்பு–புன்சிரிப்பு. பனித்த–குளிர்ந்த. இனித்தம்–இனிமை.

இலக்கணக் குறிப்பு:— செம்மை + வாய் = செவ்வாய்–பண்புத்தொகை. பொற்பாதம் – உவமைத்தொகை.

(ஆ) திரு வாசகம்

திரு + வாசகம் என்னும் சொற்றொடருக்கு அழகிய சொற்கள் என்பது பொருள். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று சிறப்பிக்கப்படும் பக்திச் சுவை நிறைந்தது. சைவ சமயக் குரவர் நால்வருள் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது.

ஆசிரியர் குறிப்பு:—

இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். தந்தையார் சம்புபாதாசிருதர்; தாயார் ஞானவதியார். திருப்பெருந்துறையில் சிவபிரானை ஆசிரியராகக் கொண்டார். பாண்டியனிடம் அமைச்சராக இருந்தார். இவரது காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு. இவர் இயற்றிய வேறு நூல் திருக் கோவையார்.

ஐம்பூதங்களாவான்.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

அருஞ்சொற்பொருள் :

வளி–காற்று. ஊன்–ஊனாலாய உடம்பு. கோன்–தலைவன்.

இறைவன் ஐம்பெரும் பூதங்களாய், யாவருக்கும் தலைவனாய் உயிர்களில் கலந்து, அவற்றைத் தன் விருப்பப்படியே ஆட்டுவிக்கிறானென்பது பொருள்.

(இ) தேம்பாவணி

தேன் + பா + அணி — தேன் போன்ற இனிய பாக்களின் வரிசை. தேம்பா + அணி = தேம்பவாணி — வாடாதமாலே. இது கிருஸ்தவ சமயக்காவியம். சூசையப்பர் வரலாற்றைச் சொல்லுவது.

இதனைப் பாடியவர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப்பெஸ்கி என்பது. இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்; கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காக தமிழ்நாட்டிற்கு வந்தவர். இவர் திருச்சியிலிருந்த சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ்மொழியைப் பயின்று சிறந்த புலமை பெற்ருர். இவர் தேம்பாவணியை அரங்கேற்றியபோது புலவர்கள் இவர்க்கு 'வீரமாமுனிவர்' என்ற பட்டம் வழங்கினர். இவர் இயற்றிய பிற நூல்கள்: திருக்காவலூர்க் கலம்பகம், சதுரகராதி, வேதியரொழுக்கம், பரமார்த்த குருகதை முதலியன. இவரது காலம் பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதி ஆகும்.

எங்கும் நிறைந்தவன்

தேறுந் தயையின் முனிவோய் நீ
    சினத்திற் கருள்செய் கனிவோய் நீ
கூறுங் கலையற் றுணர்வோய் நீ
    கூறுந் தொனியற் றுரைப்போய் நீ
மா றும் பொருள்யா விலும் நின்றே
    மாரு நிலைகொள் மரபோய் நீ
ஈறுந் தவிர்ந்துன் புகழ்க் கடலாழ்ந்
    தெனக்கே கரைகாட் டருளாயோ.

அருஞ்சொற் பொருள்:

முனிவோய்–துறவி. கனிவோய்–கனிந்தமனமுடையோய். தொனி–ஓசை. மரபு–தன்மை. ஈறு–முடிவு. கரை–மோட்ச வீட்டின் கரை.

(ஈ) திவ்யப் பிரபந்தம்

இது 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்று சொல்லப்படும். இது வைணவர்களின் தோத்திர நூல், நாலாயிரம் பாடல்களைக் கொண்டது; திருமாலின் சிறப்பை விளக்குவது, வைணவப் பெரியார்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப்பெற்ற பாக்களைக் கொண்டது.

ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவரான திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது இப்பாடல். இவர் சோழ மண்டலத்தில் திருமங்கை என்னும் பகுதியில் கள்ளர் குடியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் நீலனர். வழிப்பறிசெய்து திருமால் பணி செய்தவர். இவர் இயற்றிய பாடல்கள் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் முதலியன. இவரது காலம் கி. பி. எட்டாம் நூற்ருண்டு.

திருவேங்கடவன்

தெரியேன் பாலக ஞய்ப்பல
    தீமைகள் செய்து மிட்டேன்
பெரியே ஞயின பின்பிறர்க்
    கேயுழைத் தேழை யானேன்
கரிசேர் பூம்பொழில் சூழ்கன
    மாமலே வேங்கடவா
அரியே வந்தடைந் தேனடி
    யேனையாட் கொண்டருளே.

அருஞ்சொற்பொருள் :

கரி — யானே. பொழில் — சோலே. கனம் — மேகம். வேங்கடவன் — திருப்பதி மலேயில் விளங்கும் திருமால். அரி— திருமால். பூ + பொழில் = பூம்பொழில்.

(உ) சீருப்புராணம்

'சீரு' என்பது அரபு மொழிச் சொல். இதற்குப் 'பெரியோர் புகழ்' என்பது பொருள். முகம்மதிய மதத்தை உண்டு பண்ணிய பெரியாராகிய முகம்மது நபியின் புகழ்மிக்க வரலாற்றைக் கூறுவது சீருப்புராணம். புராணம்—பழைய வரலாறு.

இதனைப் பாடியவர் உமறுப் புலவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டையபுர சமஸ்தான வித்துவானுக விளங்கியவர். இவர் தந்தையார் சேகு முதலியார். இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்ருண்டு.

மனத்தகத்தான்

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத் திருந்தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே

அருஞ்சொற் பொருள்:

மெய்ப் பொருள் – உண்மைப் பொருளாகிய இறைவன். முக்காலம்–மூன்று + காலம்; இறப்பு, நிகழ்வு, எதிர்வு. இதயம் + ஆசனம் = இதயாசனம்–உள்ளமாகிய இருக்கை. மதி–அறிவு. பிறப்பு + இறப்பு = பிறப்பிறப்பு

வினாக்கள்

1. தேவாரம் — தொடரைப் பிரித்துப் பொருள் கூறுக.
2. தேவாரம் பாடினோர் யாவர்?
3. திருநாவுக்கரசர் தில்லைக் கூத்தன் திருக்கோலத்தை வருணிப்பது எங்ஙனம்?
4. மனிதப்பிறவி வேண்டுவதே என்று கூறியது எதனால்?
5. திருவாசகத்தின் பெருமையைக் குறிப்பிடும் பழமொழி என்ன?
6. மாணிக்க வாசகர் இறைவனை நோக்கி யாது கூறுகின்றார்?
7. தேம்பாவணி நூலாசிரியரைப்பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.
8. வீரமாமுனிவர் கூறும் இறைவன் இயல்புகள் யாவை?
9. திருமங்கையாழ்வார் பாடிய பிரபந்தங்கள் எவை?
10. ஆழ்வார் தமது நிலையைக் குறித்துக் கூறுவதென்ன?
11. உமறுப்புலவர் உரைக்கும் இறைவன் இயல்புகள் யாவை?
12. இறைவனை மறந்தவர் அடையும் நிலை யாது?

II. அறவுரைப் பகுதி

(அ) திருக்குறள்

திருக்குறள் – அழகிய சிறிய பாடல். திருக்குறட் பாக்களால் ஆகிய நூல் திருக்குறள் என்று பெயர் பெற்றது. இது தமிழ் நூல்களில் தலையாயது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

திருக்குறளின் பிறபெயர்கள்: பொதுமறை, தமிழ்மறை, முப்பால், திருவள்ளுவர், பொருளுரை, திருவள்ளுவப்பயன் முதலாயின.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. 133 அதிகாரங்களைக் கொண்டது. அதிகாரத்திற்குப் பத்துப் பாக்களாக 1330 பாக்களைக் கொண்டது.

திருக்குறளைப்பற்றி வழங்கும் பழமொழிகள்: "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு.'

இந்நூலாசிரியர், தெய்வப்புலமைத் திருவள்ளுவர். இவரது காலம் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

அறத்துப்பால்

கடவுள் வாழ்த்து

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 1

அறன்வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற 2

இல்வாழ்க்கை

அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழக்கைப்
பண்பும் பயனு மது 3

அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணே. 4

விருந்தோம்பல்

மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து 5

இனியவை கூறல்

இனிய வுளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று 6

செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது 7

நடுவு நிலைமை

நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே ஒழிய விடல் 8

ஒழுக்கமுடைமை

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார் 9

பொறையுடைமை

பொறுத்த லிறப்பினே என்று மதனே
மறத்த லதனினும் நன்று 10

வெஃகாமை

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர் 11

புறங்கூருமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னேக்காச் சொல் 12

பயனில சொல்லாமை

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் 13

தீவினையச்சம்

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால் 14

ஒப்புரவறிதல்

இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர் 15

ஈகை

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின் 16

புகழ்

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன் 17

பொருட்பால்

கூடா ஒழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின் 18

வாய்மை

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தனனெஞ்சே தன்னைச் சுடும் 19

வெகுளாமை

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்தின்
பகையு முளவோ பிற 20

இறைமாட்சி

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 21

கல்வி

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை 22

கல்லாமை

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூற்
கற்றாரோ டேனை யவர் 23

கேள்வி

கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை 24

அறிவுடைமை

சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு 25

குற்றங் கடிதல்

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார் 26

பெரியாரைத் துணைக்கோடல்

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர் 27

சிற்றினஞ்சேராமை

மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து 28

வலியறிதல்

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர் 29

காலமறிதல்

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின் 30

இடனறிதல்

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின் 31

தெரிந்துதெளிதல்

குணநாடிக் குற்றமு நாடி அவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல் 32

தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு 33

சுற்றந்தழால்

சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன் 34

பொச்சாவாமை

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு 35

அருஞ்சொற்பொருள்

1 மாண் அடி – சிறப்புப் பொருந்திய அடிகள்; நிலமிசை – உலகத்தில்
2 மாசு – குற்றம்; அறன் அனைத்து – தருமமானது அவ்வளவே; ஆகுல நீர – ஆரவாரத்தன்மைய
3 பண்பு – குணம்
4 மறம் – பகை, தீமை
5 அனிச்சம் – அனிச்சப்பூ; மோப்ப – மோந்தால்
6 கவர்ந்தற்று – பறித்துத் தின்பதனோடு ஒக்கும்
7 வையகம் – மண்ணுலகம். வானகம் – விண்ணுலகம்
8 நடுவு இகந்து – நடுவு நிலைமை நீங்குவதால்
9 ஒட்ட – பொருந்த
10 பொறுத்தல் இறப்பினை – பிறர் செய்த மிகையைப் பொறுக்க
11 வெஃகுதல் செய்யார் – விரும்பமாட்டார்; புன்மை இல் காட்சியவர் – குற்றமில்லாத அறிவையுடையவர்; புலம் – ஐம்புலம்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

12 பின் நோக்காச் சொல் – பின் வருங்குற்றத்தை நோக்காத சொல்
13 பயனிலாச் சொல் – பயனற்ற சொல்
14 துன்னற்க (பிறரிடத்தே) செய்யாதிருக்கக்கடவன்
15 இடன் இல் பருத்தும் – செல்வம் சுருங்கிய காலத்தும்; ஒப்புரவிற்கு ஒல்கார் – உபகாரம் செய்வதற்குத் தளரார்
18 மழித்தல் – மயிரை மொட்டை அடித்தல்
21 இறை – கடவுள்
22 கேடு இல் – கெடுதல் இல்லாத; விழுச்செல்வம் – சிறப்பாகிய செல்வம்; மாடு அல்ல – செல்வம் அல்ல
23 விலங்கு – மிருகம்; இலங்கு – விளங்கிய
24 ஒற்கம் – தளர்ச்சி
25 தீது ஓரீஇ – தீமையிலிருந்து நீக்கி
27 இடிக்கும் – கடிந்து அறிவுரை கூறும்
28 ஏமாப்பு – வலிமை
29 இடைக்கண் – நடுவிலே; முரிந்தார் – கெட்டார்
30 ஞாலம் – பூமி
31 அஞ்சாமை – தைரியம்; எஞ்சாமை – குறையாமல்
32 மிகைநாடி – மிகுந்தவைகளை ஆராய்ந்து
33 தேற்றம் – மனங்கலங்காமை
35 பொச்சாப்பு – மறதி

வினாக்கள்

1. எவர் நிலமிசை நீடு வாழ்வார்?
2. அறமாவது யாது?
3. அன்பு மறத்திற்கும் துணையாவது எப்படி?
4. விருந்தினர் இயல்பு யாது?
5. "கனி இருப்பக் காய் கவர்ந்தற்று"— எது?
6. பல கற்றும் அறிவிலாதார் யார்?
7. "இலமென்று வெஃகுதல் செய்யார்"— யார்?
8. எவர் ஒப்புரவிற்கு ஒல்கார்?
9. மழித்தலும் நீட்டலும் வேண்டா — எப்போது?
10. கோபத்தினும் கொடியதொன்றில்லை என்பது எவ்வாறு விளக்கப்படுகிறது?
11. மக்கட் கிறையாவான் யார்?

12. கல்வியின் மேன்மை குறித்தும் கல்லாமையின் இழிவு குறித்தும் வள்ளுவர் கூறுவதென்ன?
13. 'அறிவு' என்பதன் இலக்கணம் யாது?
14. 'ஞாலங் கருதினும் கை கூடும்'— எப்போது?
15. 'இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு'— எந் நான்கும்?
16. செல்வம் பெற்றதன் பயன் யாது?

(ஆ) நாலடியார்

இது நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆகியமைபற்றி 'நாலடி' எனப் பெயர் பெற்று, உயர்வினுல் 'ஆர்' விகுதிகொண்டு 'நாலடியார்' என வழங்கப் பெற்றது.

இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கில் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது;

'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'
'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'

எனச் சிறப்பிக்கப்படும் பெருமையினை உடையது; திருக்குறளைப் போன்றே பால், இயல், அதிகார அடைவு பொருந்தியது; 400 வெண்பாக்களை உடையது. இது 'நாலடி நானூறு' என்றும் 'வேளாண் வேதம்' என்றும் வழங்கப்படும்.

இந்நூலின் ஆசிரியர் சமண முனிவர்கள் என்பர். காலம் கடைச்சங்க காலம்.

பெரியவர், சிறியவர் தொடர்பு

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு 1

நட்பிற் பிழைபொறுத்தல்

நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு 2

அறிவே உயர்வுக்குக் காரணம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான் 3

மானம்

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின் 4

புல்லறிவாளர் தன்மை

தாமேயு மின்புறார் தக்கார்க்கும் நன்றாற்றார்
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துட் டூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார் 5

— சமணமுனிவர்

அருஞ்சொற்பொருள்

1 கேண்மை – நட்பு; பிறை – வளர்பிறைச் சந்திரன்; வரிசை வரிசையா – முறையாக; நந்தும் – வளரும்; வான் – வான் வெளி; மதியம் – முழுமதி; வைகலும் – நாள்தோறும்.

2 நனி – மிகவும்; அல்லார் – நல்லவர் அல்லாதவர்; புன்மை + இதழ் = புல்லிதழ்: பண்புத்தொகை.

3 நிறுப்பான்–நிலை நாட்டுபவன்; நன்மை + நிலை = நன்னிலை: நன்னிலை: பண்புத்தொகை; கீழிடுவான் – கீழான நிலைக்குக் கொண்டு போகின்றவன்.

4 கடம் – கானகம்; கடமா – காட்டுப் பன்றி, காட்டுப் பசு என்றும் கூறுவர்; தொலைச்சிய – அழித்த; கான் – காடு; வேங்கை – வேங்கைப் புலி; இடம் வீழ்ந்தது – இடப்புறமாக விழுந்ததை; இடமுடைய–பரந்த; வானகம்–வானுலக வாழ்க்கை; விழுமியோர் – மேலானவர்; அழுங்கவரின் – கேடு உண்டாகப் பெறின்.

5 தக்கார் – உதவி பெறத் தகுதியுடையவர்; நன்றாற்றார் – நல்லது செய்ய மாட்டார்; ஏமம் – பாதுகாவல்; ஆக்கம் – செல்வம்; ஆக்கத்துள் + தூங்கி = ஆக்கத்துட்டூங்கி; தூங்குதல் – செயலற்றிருத்தல்; அவத்தமே – வீணாக.

வினுக்கள்

1. பெரியோர் நட்பும் சிறியோர் தொடர்பும்பற்றி நாலடியார் நவில்வது என்ன ?
2. நட்பிற் பிழை பொறுக்க வேண்டும் என்பதற்கு நாலடியா சிரியர் காட்டும் உதாரணங்கள் யாவை ?
3. ஒருவனுக்கு உயர்வும் தாழ்வும் எதனுல் ஏற்படுகின்றது ?
4. ‘கடமா தொலேச்சிய கானுறை வேங்கை
இடம் வீழ்ந்த துண்ணுது இறக்கும்’
இதனுல் அறியப்படும் உண்மை யாது ?
5. புல்லறிவினுர் தன்மையினைப் புலப்படுத்துக.

(இ) பழமொழி

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இது, தொன்றுதொட்டு வழங்கிவரும் பழமொழிகளேத் தம்முட் கொண்டுள்ள நானூறு வெண்பாக்களால் ஆகிய நூலாகும். ஆதலால், இதற்குப் பழமொழி என்றும், பழமொழி நானூறு என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இதனே இயற்றியவர் முன்றுறையரையனுர். இவரது காலம், கி. பி. 5ஆம் நூற்ருண்டு என்பர்.

இளமையிற் கற்றல்

ஆற்று மிளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்று மெனவும் புணருமோ — ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டா ரில்லேயே யில்லே
மரம்போக்கிக் கூலிகொண் டார். 1

பெரியரோடு சேர்ந்தாலும் பெரியராகாமை

தக்காரோ டொன்றித் தமரா யொழுகினுர்
மிக்கார்ா லென்று சிறியாரைத் தாந்தேருர்
கொக்கார் வளவய லூர தினலாமோ
அக்காரஞ் சேர்ந்த மணல். 2

கெட்டார்க்கு நட்டார் இல்லாமை

முட்டின் றொருவ ருடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவ ராயிரவ ராபவே
கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல் 3

பொருள் உடையாரைக் கருமமுள்ளவர் தேடி வருவர்

அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கரும முடையாரை நாடார் — எருமைமேல்
நாரை துயில்வதியு மூர குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்று ரில் 4

உலோபியின் செல்வம்

வழங்கலுந் துய்த்தலுந் தேற்றுதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் — தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப அதுவன்றே
நாய்பெற்ற தெங்கம் பழம். 5

— முன்றுறையரையனூர்

அருஞ்சொற்பொருள்

1 ஆற்றும் - கற்றலைச் செய்தற்குரிய. போற்றும் — கல்வியைக் கற்றுப்போற்றுவான்; செய்யுமென்முற்று. ஆற்ற — மிகவும். சுரம் போக்கி — வழியைக் கடக்க விட்டு. உல்கு — சுங்கம். மரம் போக்கி — ஓரிடத்திலிருந்து போக விட்டு. மரம் - ஓடம்; கருவிஆகு பெயர். கூலி கொண்டார் எனக்கூட்டுக.

'இப்பாடலில், 'சுங்கம் மாறினல் சுண்ணம்பு கிடையாது' 'ஓடம் விட்டு இறங்கினல் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு' என்னும் பழமொழிகள் அமைந்துள்ளன.

2 தமர் — உறவினர். மிக்கார் — மேலான குணத்தை உடையவர். ஆல் — அசை. தேறார் — தெளிந்து நட்புக் கொள்ளார். அக்காரம் — சர்க்கரை. இப்பாடலில், 'சர்க்கரையும் மணலும் சரியாமா?' என்னும் பழமொழி அமைந்துள்ளது.

3 முட்டு இன்று — குறைவில்லாமல். உடைய — செல்வமுடைய. அட்டிற்று — சமையல் அறையில் உள்ளதாகிய உணவை; குறிப்பு வினையாலணையும் பெயர். அட்டில் — சமையல் அறை. ஆப — ஆவார்கள். தார் — மாலை.

இப்பாடலில், 'கெட்டார்க்கு நட்டார் இல்லை' என்னும் பழமொழி அமைந்துள்ளது.

"கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சே நீ
பெட்டாங் கவர்பின் செலல்."

என்னும் குறள் இங்கே நினைக்கத் தக்கது.

4 அருமை உடைய – பெறுதற்கரிய. தங்கண் கருமம் – தம்மிடம் முடித்துக் கொள்ளும் காரியம். தொட்டு – தோண்டி. தேரை வழிச் சென்றூர் - தவளை உள்ள இடத்தைத் தேடிச் சென்றவர். இப்பாடலில், 'குளத்தைத் தோண்டித் தவளையைக் கூப்பிட வேண்டுமா?" என்னும் பழமொழி அமைந்துள்ளது.

5 வழங்கல் – பிறர்க்குக் கொடுத்தல். துய்த்தல்–தான் அநுபவித்தல். தேற்ரு தான் – தெளிந்து செய்ய மாட்டாதவன். தழங்கு – ஒலிக்கின்ற. வேய் – மூங்கில்.

இப்பாடலில், "நாய்க்குத் தேங்காய் தக்குமா?" என்ற பழமொழி அமைந்துள்ளது.

வினுக்கள்

1. நாம் இளமையில் கற்க வேண்டும் என்பதை விளக்க வந்த உவமை யாது?
2. 'அக்காரம் சேர்ந்த மணல் தின்னலாமோ?"— இக் கேள்வி எழக் காரணம் யாது?
3. 'கெட்டார்க்கு நட்டார் இல்லை' — பழமொழியை விளக்குக.
4. 'குளந்தொட்டுத்தேரை வழிச்சென்றூர் இல்'–விளக்குக.
5. நாய் பெற்ற தேங்காயை ஒப்பது எது? எப்படி?
6. சேர்த்து எழுதுக:– இளமை + கண், ஊழி + காலம், குளம் + தொட்டு, வழி + சென்றூர், முத்து + உதிரும், அது + அன்று + ஓ.
7. இங்குக் கூறப்பட்டுள்ள பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
8. இவ்வைந்து பழமொழிகளிலும் ஆசிரியர் நமக்குக் கூற விரும்பியவற்றைத் தொகுத்து பதினைந்து வரிகளில் எழுதுக.

(ஈ) நீதி நெறி விளக்கம்

நீதி நெறி விளக்கம் — நேர்மையான வழியை விளக்கும் நூல். இதனை இயற்றியவர் குமரகுருபரர். இவர் பாண்டிய நாட்டில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரில் சைவ வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமசுந்தரி அம்மையார். தருமபுரம் ஆதீனத் தலைவராகிய மாசிலாமணி தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றுத் துறவு பூண்டார். காசியில் குமாரசாமி மடம் என்ற அறநிலையம் ஒன்றை அமைத்துள்ளார். இவரது காலம் 350 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

நிலையாமை

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. 1

கல்விச் சிறப்பு

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. 2

சொல்வன்மை

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு — முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. 3

செருக் கொழிதலும் கொள்ளுதலும்

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. 4

பெரியார் சிறியார் செயல்

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப — தூக்கின்
மெலியது மென்மே லெழச்செல் லச்செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. 5

அருஞ்சொற்பொருள்

1 குமிழி—கொப்புளம்; திரை—அலை; யாக்கை-உடல்; நமரங்காள்—நம்மவர்களே; எம்பிரான்—எங்கள் நடராசப்பெருமான்; மன்று—பொன்னம்பலம்; வழுத்தாதது—துதியாதிருப்பது.

2 வீடு-மோட்சம்; புறங்கடை-இறந்த பின்; பயக்கும்-கொடுக்கும்; இசை-புகழ்; ஊங்கு-மேலானது; உற்ற + உழி = உற்றுழி.

3 இடமறிந்து—நல்லாசிரியனைத் தெரிந்து; அஃது—சொல்வன்மை; நாற்றம்-வாசனை.

4 அகம்-மனம்; உடைமை-பொருள்; கருத்தழிக-மனம்வருந்துக; எற்றே என்று-எத்தன்மையதென்று.

5 ஆக்கம்—செல்வம்; மீச்செலவு—வரம்பு கடந்த நடக்கை; நனி-மிகவும்; தூக்கின்—உயர்த்திப் பிடித்தால்; மெலியது – இலேசான பொருளுள்ள தட்டு; வலிது – கனமான பொருளுள்ள தட்டு; துலை-தராசு.

வினாக்கள்

1. ‘நீதி நெறி விளக்கம்’ நூலாசிரியரைப் பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.

2. குமரகுருபரர் நிலையாமையை விளக்குவது எங்ஙனம்?

3. ‘சிற்றுயிர்க்கு உற்ற துணை’ — எது? அதன் சிறப்புக்கள் யாவை?

4. பொன் மலர் நாற்ற முடைத்து — இந்த உவமையால் விளக்கப்படும் உவமேயம் யாது?

5. இடம் சுட்டி விளக்கு :—

அம்மா பெரிதென் றகமகிழ்க

(உ) ஏலாதி

இதுவும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மருந்துச் சரக்குகள் ஆறும் கூடியதோர் மருந்து ஏலாதிச் சூரணம் எனப்படும். இம்மருந்து உடற்குற்ற நோயைப் போக்குவது போல ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஆறு கருத்துக்கள் உள்ளத்தின் பிணியாகிய அறியாமையைப் போக்கி, அறிவைப் புகட்டுதலின் இந்நூல் இப்பெயரினைப் பெற்றது. ஏலாதி போன்று இருத்தலின் ஏலாதி என்றாயிற்று. உவமவாகுபெயர்.

இதன் ஆசிரியர் கணிமேதையார் ஆவார். காலம் கடைச் சங்க காலம் என்பர்.

எவ்வுயிர்க்கும் தாயாவான்

நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமை பொய்மை புலாற்கண்—மறையுடைமை
வேயன்ன தோளாய் இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும். 1

பெரியார்க்கு உரியவை

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருள்மேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிவை. 2

தேவராலும் விரும்பப்படுவர்

சிதையுரையான் செற்ற முரையான் சீறில்லான்
இயல்புரையான் ஈன முரையான்—நசையவர்க்குக்
கூடுவ தீவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து. 3

மாறுமல் மண்ணாள்பவன்

பெரியார்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா அடியார்ப் பறியான்—கரியார் சொல்
தேறான் இயையான் தெளிந்தடிசி லீத்துண்பான்
மாறான்மண் ஆளுமாம் மற்று. 4

அன்புடையார்க்குள்ள ஆறு குணங்கள்

சாதல் பொருள்கொடுத்த லின்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவிற் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

— கணிமேதையார்

அருஞ்சொற் பொருள் :

1 நிறை – மனவடக்கம்; நீர்மை – நல்லியல்பு; மறையுடமை– மறுத்தல் உடைமை; வேய்–மூங்கில்; வேயன்ன தோளாய்– மகடூஉ முன்னிலை, பல + உயிர் — பல்லுயிர்.

2 கொலைபுரியான்–கொலையை விரும்பான்; மறை–இரகசியம்; மூங்கை — ஊமை; இறை — பெருந்தன்மை.

3 சிதை — கீழ்மைச்சொல்; செற்றம் – பகைமை; சீறு–பிறர் மேல் கோபம்; இயல்பு-தன் நல்லியல்பு; நசையவர்–விரும்பி வந்தவர்; கொவ்வை — கொவ்வைக்கனி.

4 பரியா–விருப்பங் காட்டாமல்; பறியான்–வெறுத்து நீக்கான்; கரியார் — வஞ்சகர்; இயையான் — நட்புக் கொள்ளான்; அடிசில் — உணவு.

5 புணர்வுவத்தல் — கூடியிருத்தலை விரும்புதல்; கவறல்– வருந்துதல்; மென்புடையார்–மென்மைத் தன்மை வாய்ந்த புலவர்.

வினாக்கள்

1. பல்லுயிர்க்கும் தாய் போன்றான் யாவன்?

2. பெரியார்களுக்கு இயைந்த ஆறு நல்ல குணங்கள் எவை?

3. தேவர்களாலும் விரும்பத்தக்கவன் யாவன்?

4. தவறாமல் மண்ணாள்பவன் எனக் குறிக்கப்படுபவன் யாவன்?

5. அன்புடையார்க்குள்ள ஆறு சிறந்த குணங்கள் யாவை?

(ஊ) சிறுபஞ்சமூலம்

மருத்துவ நூலிற் கூறப்பட்ட கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லி வேர் ஆகிய பஞ்சமூலங்கள் (ஐந்துவேர்கள்) சேர்ந்த மருந்து மக்கள் உடற்பிணிகளைத் தீர்ப்பன போல, இந்நூல் தன்பால் அமைந்த ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கிய ஐந்தைந்து பொருள்களால் மக்களின் உளப்பிணியாகிய அறியாமையைப் போக்கி நல்ல நெறிகளைக் காட்டவல்ல தாதலின் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. உவமவாகுபெயர். இதுவும் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று.

இந்நூலாசிரியர் காரியாசன் என்பவராவர். காலம் கடைச்சங்க காலம் என்பர்.

பெருமையும் சிறுமையும்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல் — இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 1

மேதையின் சிறப்பு

பூவாது காய்க்கும் மரமுமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார் — தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்கு
உரையாமை செல்லும் உயர்வு. 2

இறைமாட்சி

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் — சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கு முலகு. 3

வாழும் முறை

தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ரால்கருதற் பாடுணர்ந்து — தான்பிறரால்
சாவ எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
வாழ எனவாழ்தல் நன்று. 4

தேவராலும் போற்றப்படுபவன்

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை இன்புறான் இல்லார் — மொழிந்தவை
மென்மொழியால் உண்ணெகிழ்ந் தீவானேல்விண்ணோரால்
இன்மொழியா லேத்தப் படும். 5

— காரியாசான்

அருஞ்சொற்பொருள் :

1 பிழைத்தல் - பிறர் செய்த பிழை; பகை - பகைமை; நல்லார்— பெரியோர்; நகை—பிறர் கூறும் பழிப்பு.

2 மூவாது—ஆண்டுகளால் மூத்தல் ஆகாது; தாவா—கெடாதிருக்க; நாறுவ—முளைப்பன; மேதை—அறிவுடையான்.

3 வார்–நீட்சி; வரம்பு–வயல்களின் வரப்பு; ஓவாது -ஓயாமல்; உலகு — இடவாகு பெயராய் உலகத்து அறிஞரை உணர்த்திற்று.

4 பிறந்த இல்—பிறந்த குடி; கடைப்பிடித்தல்—நல்லொழுக்கங்களில் தவறாது நிற்றல்; பாடு—பெருமை.

5 கழிந்தவை — சென்றவை; நச்சான் — விரும்பான்; உள் நெகிழ்ந்து—மனமுருகி; ஏத்தப்படும்—துதிக்கப்படுவான்.

வினாக்கள்

1. பெருமையும் சிறுமையும் தரக்கூடியன யாவை?

2. மேதையின் தன்மையை விளக்குக.

3. உலகம் உரைப்பது யாது?

4. ஒருவன் வாழும் முறையாகச் சிறுபஞ்சமூல ஆசிரியர் கூறுவதென்ன?

5. தேவராலும் போற்றப்படுபவன் யாவன்?

III. கதைப்பகுதி

(அ) கம்பராமாயணம்—குகப்படலம்

கம்பராமாயணம்—கம்பரது இராமாயணம் எனப் பொருள் படும். ஆரும் வேற்றுமைத் தொகை. கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் எனப்பொருள் கொண்டு மூன்ரும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனவுங் கொள்ளலாம்.

இராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறுகாண்டங்களைக் கொண்டது.

முதலில் வான்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தை இயற்றினுர். கம்பர் அதனை முதல் நூலாகக்கொண்டு தமிழில் இயற்றினுர். இராமாவதாரம் என்றே பெயரிட்டார்.

ஆசிரியர் வரலாறு :— கம்பர் என்பது 'ஏகம்பர்' என்ற பெயரின் மரூஉ என்பர் சிலர். தந்தை—ஆதித்தன் பிறப்பிடம் சோழநாட்டுத் திருவழுந்தூர். குலம்-உவச்சர் குலம்; வேளாளர் என்றும் சிலர் கூறுவர். சமயம்—வைணவம். ஆதரித்தோர்—திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளல், மூன்ரும் குலோத்துங்கன். காலம்: கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதி என்பர்.

குகப்படலம் :— இராமனைத் தேடிச் சென்ற பரதன் குகனைச் சந்தித்து அவன் உதவியால் கங்கையாற்றைக் கடந்ததைக் கூறும் பகுதி.

பரதன் வந்த காரணத்தைக் குகன் வினவப் பரதன் கூறுதல்

தழுவிய புளிஞர் வேந்தன்
    தாமரைச் செங்க ணனை
எழுவினு முயர்ந்த தோளாய்
    எய்திய தென்னை என்ன
முழுதுல களித்த தந்தை
    முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
    மன்னனைக் கொணர்வான் என்ருன். 1

பரதனது பெருந்தன்மையை உணர்ந்த குகன் அவனைப் பணிதல்

கேட்டனன் கிராதர் வேந்தன்
    கிளர்ந்தெழு முயிர்ப்ப னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
    விம்மினன் உவகை பொங்கத்
தீட்டரும் மேனி மைந்தன்
    சேவடிக் கமலப் பூவில
பூட்டிய கையன் பொய்யில்
    உள்ளத்தன் புகல லுற்றான். 2

'நீ ஆயிரம் இராமருக்கும் மேலானவன்' என்று குகன் பரதனைப் புகழ்தல்

தாயுரை கொண்டு தாதை
    உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச்
    சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து
    புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
    ஆவரோ தெரியி னம்மா! 3

'உன் குலத்தவர் புகழை யெல்லாம் உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்' என்று குகன் பரதனைப் புகழ்தல்

என்புகழ் கின்ற தேழை
    எயினனே னிரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
    ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள்
    மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்
    உயர்குணத் துரவுத் தோளாய். 4

பரதனது வினாவும் குகனது விடையும்

அவ்வழி அவனை நோக்கி
அருள்தரு வாரி யன்ன
செவ்வழி உள்ளத் தண்ணல்
தென்திசைச் செங்கை கூப்பி
எவ்வழி உறைந்தான் நம்முன்
என்றலும் எயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே
காட்டுவ லெழுக என்றான். 5

இராமபிரான் பள்ளிகொண்ட இடத்தைக் கண்டு பரதன் இரங்குதல்

காரெனக் கடிது சென்றான்
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்
பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணான். 6

இலக்குவன் இராப்பொழுதைக் கழித்த நிலையைப் பரதன் வினவுதல்

தூண்தர நிவந்த தோளான்
பின்னரும் சொல்லு வானந்
நீண்டவன் துயின்ற சூழல்
இதுவெனில் நிமிர்ந்த நேயம்
பூண்டவன் தொடர்ந்து பின்னே
போந்தவன் பொழுது நீத்த
தியாண்டென இனிது கேட்டான்
எயினர்கோன் இதனைச் சொன்னான். 7

குகன் இலக்குவன் நிலை கூறல்

அல்லையாண் டமைந்த மேனி
அழகனும் அவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்

கல்லையாண் டுயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்
இமைப்பிலன் நயன மென்றான். 8

இலக்குவன் நிலையறிந்த பரதன் தன்னை நோதல்

என்பத்தைக் கேட்ட மைந்தன்
இராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில்
யானென்றும் முடிவி லாத
துன்பத்துக் கேது வானேன்
அவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டோ
அழகிதென் அடிமை என்றான். 9

பரதன் கங்கையின் மறுகரையில் தன்னைச் சேர்க்கும்படி குகனை வேண்டுதல்

அவ்விடை அண்ணல் தானும்
அன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரநின் றார்க்கும்
செறிகழற் புளிஞர் கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றின்
ஏற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடல்நின் றேற்றி
வேந்தன்பால் விடுத்த தென்றான். 10

பரதன் சுமந்திரனை நோக்கி படைகளை ஏற்றச் சொல்லுதல்

வந்தன வரம்பில் நாவாய்
வரிசிலைக் குரிசில் மைந்த
சிந்தனை யாவ தென்று
சிருங்கிபே ரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவி லானும்
சுமந்திரன் தன்னை நோக்கி
எந்தைஇத் தானை தன்னை
ஏற்றுதி விரைவி னென்றான். 11

படைகள் கங்கையைக் கடத்தல்

குரிசில தேவ லாலக்
குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வழாமை நோக்கி
மரபுளி வகையி னேற்ற
கரி பரி இரதம் காலாள்
கணக்கரு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசும்
கங்கையா றேறிற் றன்றே 12

பரதன் ஏறிய படகு செல்லுதல்

தன்னன தம்பியுந் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனும் தூய தோழனுந்
துன்னினர் ஏறலுந் துழாது டுப்பெனும்
நன்னயக் காலினல் நடத்தல் மேயினன். 13

பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகப் படுத்துதல்

சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குரிசில் இவர்யா ரென்று
குகன்வினவக் கோக்கள் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகும்
ஈன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெரும்செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியா ளென்றான். 14

கோசலை குகனை அறிதல்

என்றலுமே அடியின்மிசை நெடிதுவிழுந்
தழுவானை இவன்யா ரென்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்துணைவன் இராகவனுக் கிலக்குவற்கும்
இளையவற்கு மெனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோள் குகனென்பான்
இந்நின்ற குரிசில் என்றான். 15

பரதனையும் குகனையும் கோசலை தேற்றுதல்

நைவீரலீர் மைந்தீர் இனித்துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்
றுமன்றே விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறனைய காளை இவன்
தன்னோடுங் கலந்து நீவிர்
ஐவீரு மொருவீராய் அகலிடத்தை
நெடுங்கால மளித்திர் என்றாள். 16

சுமித்திரையை அறிமுகப்படுத்துதல்

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி ஐய அன்பின்
நிறைந்தாளை உரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்த னிளந்தேவி யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
தனைப்பயந்த பெரியாள் என்றான். 17

குகன் கைகேயியைக் குறித்துப் பரதனிடம் 'இவர் யார்?' என வினவுதல்

சுடுமயா னத்திடைத்தன் துணைஏகத்
தோன்றல்துயர்க் கடலின் ஏகக்
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேகக் கழற்கால் மாயன்
நெடுமையா லன்றளந்த உலகெல்லாந்
தன்மனத்தே நினைந்து செய்யுங்
கொடுமையால் அளந்தாளை யாரிவரென்
றுரையென்னக் குரிசில் கூறும். 18

கைகேயியை அறிமுகஞ் செய்தல்

படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய

உடரெலா முயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலேயேல்
இந்நின்ருள் என்னை ஈன்ருள். 19

நாவாய் கங்கையின் வடகரை அடைதல்

என்னக் கேட்டவ் விரக்க மிலாளையுந்
தன்னற் கையின் வணங்கினன் தாயென
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே 20

அருஞ்சொற் பொருள்:

1 புளினர்–வேடர்; எழு–கணையமரம்: கல்தூணுமாம். உம்மை உயர்வு சிறப்பு. நீக்க—'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கொணர்வான்...'வான்' ஈற்று வினையெச்சம்.

2 கிராதர்–வேடர்; உயிர்ப்பனுகி-பெருமூச்சை உடையவனுகி; விம்மினன்-உடம்பு பூரித்தான்; தீட்ட + அரும்–தீட்டரும்: 'அ'கரம் தொகுத்தல் விகாரம். சித்திரத்திலும் வரைய முடியாத. பூட்டிய–சேர்த்த; சேவடி–பண்புத்தொகை.

3 சிந்தனை-கவலை; புகழினேய்-புகழையுடைய பரதனே; நின் கேழ் ஆவரோ-உனக்கு ஒப்பாவாரோ: 'ஓ'காரம் எதிர்மறை; அம்மா–வியப்பிடைச் சொல்.

4 ஏழை எயினனேன்–எளிய வேடனுகிய நான்; புகழ்க்கற்றை-ஒளித்தொகுதியால்; மற்றை ஒளிகளை–மற்றைய நாண்மீன்களின் ஒளிகளை; தவிர்க்குமாபோல் – நீக்கித் தன்னுள் அடக்குவது போல; மன்—நிலைத்த; உரவுத் தோளாய்—வலிய தோள்களையுடையவனே.

5 அருள் தருவாரி அன்ன — கருணையால் நிறைந்த கடல் போன்ற; செவ்வழி–நேரிய வழி; அண்ணல்-பரதன்; நம்முன்-நமது தமையன்; எவ்வழி–எவ்விடத்தில்; தருவாரி—வினைத்தொகை; காட்டுவல்–தன்மையொருமை வினைமுற்று; எழுக–வியங்கோள் வினைமுற்று.

6 கார்—மேகம்; பருத்த—பரப்பிய; வார்சிலே... நீண்ட வில்; தடக்கை-பெரிய கை; பருவரல் பரவை-துன்பக்கடல்; உருவகம். வார் மணிப் புனலான்—பெருகுகின்ற மணிபோலும் கண்ணீரால்; மண்ணே—நிலத்தை; மண்ணு நீராட்டும்—நீரால் தூய்மைப் படுத்தும்.

7 தூண் தர—கல் தூணைப் போல: தர என்பது உவம உருபு. நிவந்த-உயர்ந்த; நீண்டவன்–இராமன்; நிமிர்ந்த நேயம்–மிக்க அன்பு; போந்தவன் — வந்தவனுய இலக்குமணன்; வினையாலணையும் பெயர்.

8 அல்லே ஆண்டு—இருளை ஒத்து; கல்லே ஆண்டு—மலையை ஒத்து; நயனம்—கண்கள்: அ ழ க னு ம் அவளும்...எண்ணும்மை.

9 என்பத்தை, அன்பத்துக்கு-இவை அத்துக் சாரியை பெற்று வந்தன; ஒத்த தோற்றத்தேமில்–ஒன்றுபட்ட பிறப்புடைய எங்களுள்; துடைக்க–நீக்க.

10 அவ்விடை—அவ்விடத்தில்; அண்ணல் தானும்—பரதனும்; முன்பு இராமன் உறங்கிய தரையிலேயே பரதனும் உறங்கினுன் என்பதால் உம்மை இறந்தது தழுவிய எச்சப்பொருள் தந்தது. தெவ்-பகைவர்; இடை தர—பின் வாங்க; செறி கழல்—வினைத்தொகை; இடர்க் கடல்—துன்பமாகிய கடல்; உருவகம்.

11 வரம்பு இல்—எண்ணற்ற; வரிசிலேக்குரிசில் மைந்த—கட்டமைந்த வில்லேயுடைய குரிசிலாகிய மகனே. குரிசில்—ஆடவரில் சிறந்தவன்; சிந்தனே யாவது?– உன் கருத்து என்ன? சிருங்கிபேரியர் கோன்—சிருங்கிபேரம் என்னும் ஊரிலுள்ளார்க்குத் தலேவனுகிய குகன்; சுந்தரவரி விலான்-அழகிய கட்டமைந்த வில்லேயுடைய பரதன்; எந்தை—எம் தந்தை என்பதன் மரூஉ; அண்மை விளி.

12 குரிசில்–ஆண்பால் சிறப்புப் பெயர். ஈண்டு பரதனேக் குறித்தது; மரபுளி—முறையை ஆராய்ந்து; வகையின் ஏற்ற—இனம் வகுத்து ஏறச்செய்ய.

13 தேர்வலான்—தேர்ப்பாகனுன சுமந்திரன்; துன்னினர் ஏறலும்–நெருங்கி ஏறினவுடன்; துழா துடுப்பு எனும்—துழாவுகிற துடுப்புக் கோல்கள் என்கிற.

14 கொற்றத்தார்—வெற்றிமாலே; மூன்று உலகும் ஈன்ருனை முன் ஈன்ருனை — மூவகைப்பட்ட உலகங்களேயும் படைத்த பிரமனை முன்பு படைத்த திருமாலாகிய இராமனை; பெற்றத்தால்-பெற்றதால்; எதுகை நோக்கி, விரித்தல் விகாரம் பெற்றது. பெரியள் — பெருமையை உடையவள்; மூன்று உலகும்-முற்றும்மை; ஈன்ருனை-வினையாலணையும் பெயர்.

15 அழுவானை — அழுகின்றவனை குகனை; வினையாலணையும் பெயர். கொடி-கோசலை; உவமவாகு பெயர். நெடுந் தோள்-பண்புத் தொகை.

16 நைவீர் அலீர்-எதிர்மறை ஏவற்பன்மை வினைமுற்று. விலங்கல் தோள் ... உவமைத் தொகை. திண்தோள் ... பண்புத் தொகை. ஐவீரும்...முற்றும்மை. அகல்இடம்-பரந்தஉலகம்.

17 அறம் தானே என்கிற-தானே அறம் என்று சொல்லத்தக்க. அயல் நின்ருள் — கோசலைக்கு அருகில் நின்ற சுமித்திரை. மெய்யை—உண்மையை; தொழுகுலமாம்—வணங்கத்தக்க குலதெய்வமாகிய; பிரியாதான்தனை — நீங்காத இலக்குமணனை. திறம்பா...ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

18 துயர்க்கடலின் - உருவகம்; துணை—கணவனுன தசரதன்; கருணை ஆர்கலி-கருணைக்கடல் போன்ற இராமன்; ஆர்கலி-நிறைந்த ஓசையையுடையதாகிய கடல்; வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. குரிசில்-பரதன்.

19 படர்-துன்பம்; உயிர்ப்பாரம்-உயிராகிய சுமை; இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. உடர்-ஈற்றுப்போலி. இடர்-துன்பம்.

20 "அன்னப்பேடை சிறையிலதாய்க்கரைதுன்னிற்று என்ன"-பெண் அன்னம் சிறகு இல்லாததாய்க் கரை அடைந்தது போல; தோணிக்கு உவமை. நற்கை-பண்புத்தொகை.

கதைச் சுருக்கம்:—

பரதன் வந்த காரணத்தைக் கேட்ட குகனுக்கு, தந்தை தசரதன் மூத்த மகனுக்கே பட்டம் சூட்டுதல் என்னும் முன்னோர் முறையினின்றும் தவறினன். ஆதலின், இராமனை அழைத்துச் செல்ல வந்தேன் என்ருன். குகன் உடனே ஆயிரம் இராமர்

கூடினும் உனக்கு ஒப்பாகார் என்றும் முன்னோர் புகழ் அனைத்தையும் உன் புகழாக்கிக் கொண்டாய் என்றும் புகழ்ந்தான். இராமன் தங்கிய இடம் முதலியவற்றையும் இலக்குவன் இராமபிரானிடம் நடந்து கொண்ட முறையையும் குகன் வாயிலாக அறிந்த பரதன் தன்னால் இராமனுக்கு இத்தகைய தொல்லை நேர்ந்ததெனச் சொல்லி வருந்தினான். பிறகு கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகிய தாயர் மூவரையும் குகனுக்கு அறிமுகப்படுத்தினான். பரதனது வேண்டுகோளின்படி குகன் கொண்டு வந்த நாவாயிலேறி கங்கையின் மறு கரையை அடைந்தான்.

வினாக்கள்

1. குகன், பரதன் வந்த காரணத்தைக் கேட்டதற்குப் பரதன் கூறிய பதில் என்ன?

2. பரதனுடைய பதிலைக் கேட்ட குகன் இராமனை எவ்வாறு புகழ்ந்தான்?

3. பரதன் குகனை நோக்கி "நம் முன் எவ்வழி உறைந்தான்" என்று கேட்டதற்குக் குகன் கூறிய விடை என்ன?

4. இராம பிரான் பள்ளி கொண்ட இடத்தைக் கண்ட பரதன் நிலையை விவரி.

5. இலக்குவன் நிலை குறித்துக் கேட்ட பரதனுக்குக் குகன் கூறியதென்ன?

6. இலக்குவன் நிலையறிந்த பரதன் தன்னை எவ்வாறு நொந்து கொண்டான்?

7. பரதன் குகனிடம் கோசலையை அறிமுகப்படுத்தியது எங்ஙனம்?

8. வருந்திய பரதனையும் குகனையும் கோசலை எவ்வாறு தேற்றினாள்?

9. சுமித்திரையைக் குறித்து இவர் யார் என்று கேட்ட குகனுக்குப் பரதன் கூறியதென்ன?

10. பரதன் தன் தாய் கைகேயியை குகனுக்கு எவ்வாறு அறிமுகம் செய்தான்?

(ஆ) பெரிய புராணம்

பெரியர் + புராணம்—பெரியபுராணம். செயற்கரிய செயலாற்றிய பெரியார்களின் வரலாற்றைப் பேசும் நூல். அறுபத்து மூன்று தனியடியார்கள், ஒன்பது தொகையடியார்கள் ஆகிய எழுபத்திரண்டு நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவது.

இந்நூல் அநபாய சோழன் கொண்ட சிந்தாமணியார்வத்தை மாற்றுவதற்காக இயற்றப் பெற்றது. பக்திச்சுவை ததும்புவதோடு பல்வகைச் சுவைகளையும் கொண்டு விளங்குவது.

இந்நூலாசிரியர் சேக்கிழார். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். பிறப்பிடம் தொண்டை நாட்டுக் குன்றத்தூர். இரண்டாம் குலோத்துங்கனுய அநபாய சோழரின் முதலமைச்சராகப் பணி புரிந்தவர். இவர் தந்தையார் வெள்ளியங்கிரி முதலியார்; தாயார் அழகாம்பிகையார்; தம்பியார் பாலருவாயர். காலம் கி. பி. 12-ஆம் நூற்ருண்டின் முற்பகுதி என்பர்.

மெய்ப்பொருள் நாயனுரின் பெருமை

சேதிநன் னட்டு நீடு
திருக்கோவ லூரில் மன்னி
மாதொரு பாக ரன்பின்
வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசர்க் கன்பர்
கருத்தறிந் தேவல் செய்வார். 1

நாயனுரின் அரசியல் மாண்பு

அரசியல் நெறியில் வந்த
அறநெறி வழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி
ஓங்குநீர் மையினில் மிக்கார்
திரைசெய் நீர்ச் சடையா னன்பர்
வேடமே சிந்தை செய்வார். 2

நாயனாரின் சிவபக்தி

மங்கையைப் பாக மாக
உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாட லாடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக் கன்பர்
தாளலால் சார்பொன் றில்லார். 3

அடியார்களிடத்து அன்பு செய்தல்

தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமா னன்பர்க்
காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு
நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்க
குறைவறக் கொடுத்து வந்தார். 4

பகையரசனது தோல்வி

இன்னவா றொழுகும் நாளில்
இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானை
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனான். 5

முத்தநாதன் நாயனாரை வெல்லக் கருதி வருதல்

இப்படி யிழந்த மாற்றான்
இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்துவெண் ணீறு சாத்தும்

அப்பெரு வேடங் கொண்டே
அற்றத்தில் வெல்வா ஞகச்
செப்பரு நிலேமை யெண்ணித்
திருக்கோவ லூரிற் சேர்வான். 6

முத்தநாதன் சிவவேடம் தாங்கி நகரில் புகுதல்

மெய்யெலா நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைக ரந்த
புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன். 7

முத்தநாதன் அரண்மனே அடைதல்

மாதவ வேடங் கொண்ட
வன்கணுன் மாடந் தோறும்
கோதைசூ ழளக பாரக்
குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிக ளாடும்
சுடர்நெடு மறுகில் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் சேர்ந்தான். 8

முத்தநாதனேத் தத்தன் தடை செய்தல்

கடையுடைக் காவ லாளர்
கைதொழு தேற நின்றே
உடையவர் தாமே வந்தார்
உள்ளெழுந் தருளு மென்னத்
தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்
இடைதெரிந் தருள வேண்டும்
துயில்கொளும் இறைவன் என்ருன். 9

முத்தநாதன் நாயனார் துயிலும் அந்தப்புரம் சேர்தல்

என்றவன் கூறக் கேட்டே
யானவற் குறுதி கூற
நின்றிடு நீயு மென்றே
அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்திகழ் பள்ளிக் கட்டில்
புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல்
மாதேவி இருப்பக் கண்டான். 10

நாயனார் துயில் நீத்துச் சிவவேடந் தாங்கிய
முத்தநாதனை வணங்குதல்

கண்டுசென் றணையும் போது
கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யானை
எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்டர்
ஆமெனக் குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று. 11

நாயனார் முகமன் மொழியும் முத்தநாதன் வஞ்சக மொழியும்

மங்கலம் பெருக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற
தென்கொலோ வென்று கூற
உங்கள்நா யகனார் முன்னம்
உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தே னியம்ப வென்றான் 12

முத்தநாதன் தனிமையில் உபதேசிக்க வேண்டும் எனல்

பேறெனக் கிதன்மே லுண்டோ
பிரான்அருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித்
தருள்செய வேண்டு மென்ன

நாறுபூங் கோதை மாது
தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்
என்றவன் விளம்ப வேந்தன். 13

நாயனர் தேவியை அந்தப்புரம் போகச்செய்து ஆகம நூல் கேட்க விரும்புதல்

திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மே லிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி
இனியருள் செய்யு மென்ருர். 14

முத்தநாதன் நாயனுரைக் கத்தியால் குத்துதல்

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போழ்தில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருளெனத் தொழுது வென்ருர். 15

தத்தன் முத்தநாதனைக் கொல்ல நினைத்தலும் நாயனர் தடுத்தலும்

மறைத்தவன் புகுந்த போதே
மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி
வாளினு லெறிய லுற்ருன்
நிறைத்தசெங் குருதி சோர
வீழ்கின்ருர் நீண்ட கையால்
தறைப்படு மளவில் தத்தா
நமரெனத் தடுத்து வீழ்ந்தார் 16

அடியவரை இடையூறின்றிக் கொண்டுபோய் விடுக என்று நாயனுர் கூறுதல்

வேதனை யெய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப்பட்ட
தாதனுந் தத்தன் தானும்
தலையினல் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கேன் என்ன
எம்பிரா னடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ என்ருர். 17

முத்தநாதனுக்குண்டான இடையூறுகளைத் தத்தன் தடுத்தல்

அத்திற மறிந்தா ரெல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்
எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும் அவரை யெல்லாம்
தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்ற
திறைவன தாணை யென்ருன். 18

முத்தநாதனை இடையூறில்லா இடத்தில்விட்டுத் தத்தன் திரும்புதல்

அவ்வழி அவர்க ளெல்லாம்
அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவா ளேந்தி
ஆளுருக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை
விட்டபின் மீண்டு போந்தான் 19

தத்தன் ஆவி சோர்ந்திருக்கும் நாயனுரை அடைதல்

மற்றவன் கொண்டு போன
வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித்
தீதிலா நெறியில் விட்ட

சொற்றிறங் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்ருன்
கோமகன் குறிப்பில் நின்ருன். 20

முத்தநாதனை இடையூறின்றி அனுப்பினேன் என்று தத்தன் கூற, நாயனுர் மகிழ்தல்

சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டன னென்று கூற
இன்றெனக் கையன் செய்த
தியார்செய்ய வல்ல ரென்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தார். 21

நாயனுர் போதனை

அரசிய லாயத் தார்க்கும்
அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம்
விளம்புவார் விதியி னலே
பரவிய திருநீற் றன்பு
பாதுகாத் துய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும்
பூங்கழல் சிந்தை செய்தார். 22

நாயனுர் சிவனடி சேர்தல்

தொண்டனுர்க் கிமையப் பாவை
துணைவனுர் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று
காட்சிதந் தருளி, மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா
அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவ ரிடைய ருமல்
கும்பிடும் கொள்கை ஈந்தார். 23

அருஞ்சொற்பொருள் :

1 மன்னி — நிலைபெற்று; மலாடர் — மலையமான் நாட்டார்; மரூஉ. நன்மை + நெறி—நன்னெறி—பண்புத்தொகை.

2 வழாமல் — தவருமல்; வரை — மலை; மாற்றலர் – பகைவர்; மாற்றி – வென்று; வரை நெடுந்தோள் — உவமத் தொகை.

3 ஏழிசை — குரல், துத்தம், உழை, இளி, விளரி, தாரம், கைக்கிளை என்ற ஏழு இசைகள்; பாடல் ஆடல்—உம்மைத் தொகை.

4 மாடு—செல்வம்; நாடிய—விரும்பிய; நாயன்மார் – சிவ னடியார்.

5 இகல்—பகை; அமர்—போர்; ஓடை—முகபடாம்; பரிபவம் — துன்பம்; பொருபரி — வினைத்தொகை; யானை பரி — உம்மைத் தொகை.

6 மாற்ருன் — பகைவன்; சீலம் — ஒழுக்கம் — செப்பரு நிலைமை (செப்ப + அருமை + நிலைமை)

7 வேணி – சடை; கரந்த — மறைந்த; கவளி — சுவடிக் கட்டு; கறுப்பு—வஞ்சகம்; மைபொதி விளக்கு—உவமை.

8 மாதவம் — பெருந்தவம்; வன்கணன் -- கொடியவன்; கோதை—பூமாலை; அளகபாரம்—கூந்தல் கற்றை; மறுகு— வீதி; கோயில், வாயில்—இலக்கணப்போலி; கொடி — உவமவாகு பெயர்.

9 கடையுடை — வாயிலிலுள்ள; துயில் கொள்ளும்—உறங்கு கின்ருன்; தடை — காவல்.

10 உறுதி—நன்மை; பொன்திகழ் – அழகு விளங்கும்; மாடு —பக்கத்தில்; மன்றல் – மணம்; சாயல் – அழகு.

11 கதுமென–விரைவாக; அண்டர்–தேவர்; இழிந்து–இறங்கி; கொள்கையின்—முறைப்படி

12 மங்கலம் -நன்மை; மண்மேல் - உலகில்; கொடு வந்தேன் – கொண்டு வந்தேன்; இடைக்குறை; ஆகம நூல்: இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

13 பேறு–பெறுதற்குரியது; மாறுஇல்–ஒப்பற்ற; பூங்கோதை– அழகிய பூமாலை. பேறு – முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

14 பரிவு – அன்பு; தவிசு – ஆசனம்

15 வஞ்சகக் கவளிகை – போலி புத்தக மூட்டை; பத்திரம் – கத்தி; அப்பரிசே–அவ்வண்ணமே அவன் நினைத்த செயலே; அவிழ்ப்பான் – வினையாலணையும் பெயர்.

16 இறைப் பொழுதின் கண் – நொடிப் பொழுதில்; குருதி சோர – இரத்தம் வழிய; தறை – தரை

17 தாதன் – அடியான்; மீது – மேலும்; விலக்கா வண்ணம் – தடுக்காதவாறு: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

18 அத்திறம்–அந்நிகழ்ச்சி; புடை சூழ்ந்த–பக்கத்தில் சுற்றிய; ஆணை– கட்டளை; கொல்வோம் - தன்மைப் பன்மை வினை முற்று.

19 வடி – கூர்மை; ஆள் உரு-மனிதர் போகாத; கானம்–காடு; உருக்கானம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

20 செற்றவர் — சீற்றம் கொண்டவர்; சொல்திறம் – சொல் வகை; தீதில்லா நெறி – ஈறு கெட்ட எதிர் மறைப் பெய ரெச்சம்.

21 இடையூறு இன்றி – துன்பமில்லாமல்; இடையூறு–முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

22 ஆயம் – கூட்டம்; அழிவுறும் – வருந்துகின்ற; விரவிய – நிகழ்ந்த; புரவலர் — அரசர்; மன்றுள் — அம்பலத்தில்; கழல் — தனியாகு பெயர்.

23 இமையப்பாவை-பார்வதி; அண்ட வானவர்–தேவர்; பாவை; உவமை யாகு பெயர்; நீழல்-நீட்டல் விகாரம்.

கதைச் சுருக்கம்.

மெய்ப்பொருள் நாயனாருடன் முத்தநாதன் பல முறை போர்செய்து தோற்றான். பின் முத்தநாதன் நாயனாரை வஞ்சனையால் வெல்லக் கருதி முழு நீறு பூசிய மேனியனாக வந்தான். திருநீறு பூசிய எவரையும் தடுத்தல் ஆகாது என்பது மெய்ப்பொருள் நாயனாரின் உத்தரவு. ஆகவே எவ்விதத் தடையு மின்றி நாயனாரின் அரண்மனையினுள் சென்றான். மெய்க்காப் பாளனான தத்தன் "காலமறிந்து இடமறிந்து தாங்கள் எழுந் தருள வேண்டும், எம் அரசர் தூங்குகின்றார்" என்று கூறினான். அரசனுக்கு ஞானப்பொருள் கூற வந்துள்ளேன். தடை செய் யற்க எனக் கூறிவிட்டு முத்தநாதன் உள்ளே சென்றான். அரசியார் முத்தநாதனைக் கண்டதும் உறங்கிக்கொண்டிருந்த அரசனை எழுப்பிவிட்டு அவரது கட்டளைப்படி அப்புறம் சென்றார்.

நாயனருக்கு ஞானப்பொருளைக் கூறுவதற்குரிய புத்தகத்தை அவிழ்ப்பான் போன்று அதனுள் மறைத்து வைத்திருந்த ஆயுதத்தை எடுத்து நாயனரைக் குத்தினன். அதனை அறிந்த தத்தன் முத்தநாதனைக் கொல்ல முயன்ருன். "தத்தா அவர் நம்மவர்" என்று தடுத்து கீழே விழுந்தார். நாயனரது கட்டளையின்படி முத்தநாதனுக்கு எவ்விதத் தீங்குமின்றிக்கொண்டு போய்விட்ட செய்தியைத் தத்தன் கூறினன். "திருநீற்றினிடத்து அன்பு செலுத்துங்கள்" என்று தேவியார், இளவரசர், அமைச்சர் சுற்றத்தார் முதலியோர்க்கு மெய்ப்பொருள்நாயனர் கூறி இறைவனேடிரண்டறக் கலந்தார்.

வினக்கள்

1. மெய்ப்பொருள் நாயனரது இயல்புகள் யாவை?
2. நாயனர் வாழ்ந்த முறையினை எழுதுக.
3. முத்தநாதன் துன்புற்றது ஏன்?
4. போரில் வெல்ல முடியாத முத்தநாதன் எண்ணிய சூழ்ச்சி யாது?
5. முத்தநாதன் பூண்டு வந்த அடியார் கோலத்தை விளக்குக.
6. முத்தநாதன் நாயனரிடம் தான் வந்ததன் நோக்கம் யாது என்று கூறினன்?
7. முத்தநாதன் தன் கருத்தை நிறைவேற்றியது எவ்வாறு?
8. நாயனர் தத்தனை நோக்கிக் கூறியன யாவை?
9. தத்தன் முத்தநாதனை எவ்வாறு காப்பாற்றிச் சென்ருன்?
10. நாயனர் முடிவில் எல்லோர்க்கும் கூறிய அறவுரை என்ன?
11. நிகழிடங் கூறி விளக்குக :—
    (அ) "இன்றெனக்கையன் செய்தது யார் செய வல்லார்"
    (ஆ) "இத்தவன் போகப் பெற்றது இறைவனது ஆணை"
    (இ) "இடைதெரிந்தருள வேண்டும் துயில் கொளும் இறைவன்"

(இ) திருவிளையாடல் புராணம்

கான்மாறியாடிய படலம்

புராணம்—பழைய வரலாறு. திருவிளையாடல் புராணம்—இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டுச் செய்தருளிய திருவிளையாடல்களைப் பற்றிய பழைய வரலாற்றைக் கூறும் நூல். பாண்டி நாட்டு மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் ஆடிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுவது. தமிழில் உள்ள சைவப்புராணங்கள் மூன்றைச் சிவபெருமானின் முக்கட்சுடர் என்று போற்றி மொழிவர். அவற்றுள் பெரிய புராணம் சிவனது வலக்கண். திருவிளையாடல் புராணம் இடக்கண், கந்த புராணம் நெற்றிக்கண் என்பர்.

இந்நூல் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. பாயிரம் முதல்பதிகம் ஈறாகவுள்ள ஒன்பது படலங்களை முதலிலும், அறுபத்து நான்கு அருள் விளையாட்டுக்களைக் கூறும் அறுபத்துநான்கு படலங்களை இடையிலும், அருச்சனைப் படலம் என்பதை இறுதியிலுமாக எழுபத்துநான்கு படலங்களைக் கொண்டுள்ளது. 3363 பாடல்களையுடையது.

ஆசிரியர் - பரஞ்சோதியார். ஊர் - வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காடு. தந்தை - மீனாட்சிசுந்தர தேசிகர். மரபு - சைவ வேளாளர். இயற்றியன - வேதாரணிய புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி நூற்சிறப்பு - சைவத்திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், சங்க இலக்கியங்கள் முதலியவற்றின் அரிய கருத்துக்களைத் தன்பால் கொண்டது; பக்திச்சுவை மிக்கது. இவரது காலம் 17-ம் நூற்றாண்டு.

இராசசேகரன் ஆட்சியும் கலைத்திறனும்

கண்ண கன்புவி இராசசே கரன்பொதுக்
    கடிந்துசெங் கோலோச்சி
வண்ண வெண்குடை நிழற்றுவான் ஆனந்த
    வடிவமாய்த் தனிமன்றுள்
அண்ண லாடிய திருநடத் தன்பினால்
    ஆடனூல் ஒழித்தேனை
எண்ணி மூவிரு பத்துமுக் கலையுங்கற்(று)
    இறைமுறை செயுநாளில் 1

கரிகாலன் கலைத்திறன்

சிலம்பி வாயினூல் இழைத்திடு பந்தரில்
செங்கண்மால் தொழவைகும்
அலம்பு தெண்டிரைப் பொன்னியந் தண்டுறை
யானைக்கா விறைக்கன்பு
கலந்த சிந்தையான் மூவிரு பத்துநாற்
கலைகளும் பயின்றுள்ளம்
மலர்ந்த வன்கரி காற்பெரு வளத்தவன்
வையகம் புரக்கின்ருன் 2

சோழநாட்டுப் புலவன்
பாண்டியனுக்குப் பரதநூல் தெரியாதெனல்

பொன்னி நாடவன் வாயிலுள் ளாெரு
புலவன்வந் தலர்வேம்பின்
கன்னி நாடனைக் கண்டுமுன் பரவுவான்
கனைகழற் கரிகாலெம்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும்
வரும்வரா துனக்கொன்று
தென்ன ரேறனை யாய் அது பரதநூல்
தெரிந்திலை யெனச்சொன்னன். 3

பரதக்கலை பயிலத் தொடங்குதல்

கேட்ட மீனவன் மறுபுல விஞ்சையன்
கிளத்துசொல் லிகன்மானம்
மூட்ட வாகுலம் மூழ்கிய மனத்தனய்
முதுமறைச் சிரமன்றுள்
நாட்டம் மூன்றுடை நாயக னடலை
நானுமா டுதற்குள்ளம்
வேட்ட தேகொலா மிதுவுமெம் பிரானருள்
விதியென வதுகற்பான். 4

பாண்டியன் பரதநூல் பயிற்சி

ஆடனூல் வரம்பு கண்டவ ராகி
அவ்வழி யாடலும் பயின்ற
நாடக நடைதேர் புலவரைத் துருவி
நண்ணிய வவர்க்கெலா மகிழ்ச்சி

வீடருஞ் சிறப்பால் அறுவையும் பூணும்
வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்துப்
பாடல்வண் டரற்றும் தாரினன் பரதப்
பனுவலும் கசடறப் பயில்வான். 5

ஆடல் வருத்தம் நினைத்தல்

உரைத்தவிக் கூத்துக் கற்கும்
போதுதன் னுடம்பிற் சால
வருத்தநோ யெய்தி யிந்த
வருத்தநான் மறையுந் தேரு
அருத்தமாய் அறிவாய் வெள்ளி
யம்பலத் தாடி நின்ற
நிருத்தனார் தமக்கு முண்டே
யென்பது நினைவிற் கொண்டான். 6

திருக்கூத்தைத் தடுக்க நினைத்தல்

வடுப்படு பிறவிப் பௌவ
வரம்புகாண் கின்ற நாள்வந்
தடுப்பவர் யாவ ரேனு
மவர்க்கெலாம் போகம் வீடு
கொடுப்பவர் செய்யு மிந்தக்
கூத்தையெப் படிநாம் சென்று
தடுப்பது தகாதன் றேனும்
வருந்துமே சரணம் என்னு 7

சிவராத்திரி வழிபாடு

இதற்கிது துணிவென் றுன்னி
எழுந்துபோய்ச் சிவனி ராவில்
கதக்களிற் றுருத்த லேந்தும்
கதிர்மணிக் குடுமிக் கோயில்
மதக்கரி யுரியி னாற்கு
வரம்பறச் சிறந்த பூசை
விதிப்பட யாம நான்கும்
விதிவழி யியற்றல் செய்யா 8

பாண்டியன் பணிந்து வேண்டுதல்

விண்டக மலர்த்தா ளேத்தி
வெள்ளியம் பலத்து ளன்பர்
தொண்டக மலர நின்ற
சோதிமெய்ஞ் ஞானக் கூத்தைக்
கண்டக மகிழ்ந்து தாழ்ந்து
கட்புனல் சோரச் செங்கை
முண்டக முடிமே லேற்றி
முகிழ்த்துநின் றிதனை வேண்டும். 9

நின்றதா ளெடுத்து வீசி
யெடுத்ததாள் நிலமீ தூன்றி
இன்றுநான் காண மாறி
யாடியென் வருத்த மெல்லாம்
பொன்றுமா செய்தி யன்றேல்
பொன்றுவ லென்னா வன்பின்
குன்றனான் சுரிகை வாண்மேல்
குப்புற வீழ்வேன் என்னா 10

இறைவன் கால்மாறி ஆடுதல்

நாட்டினான் குறித்துப் பாய
நண்ணுமுன் னிடத்தா ளூன்றி
நீட்டினான் வலத்தாள் வீசி
நிருமலன் மாறி யாடிக்
காட்டினான் கன்னி நாடன்
கவலையும் பாச மூன்றும்
வீட்டினான் பரமா னந்த
வேலையுள் வீட்டி னானே. 11

பாண்டியன் பரவசமாதல்

விளைகள்வாய் வீழ்ந்த வண்டின்
மெய்யறி வின்ப மென்னும்
அளவிலா முந்நீர் வெள்ளத்
தாழ்ந்தவன் எழுந்து பின்னும்

உளமும்வா சகமும் மெய்யும்
உடையவ னதுவே யாகப்
பளகிலா வன்பு தானே
படிவமாய்ப் பழிச்ச லுற்ருன். 12

பாண்டியன் வரம் வேண்டுதல்

என்றுமிப் படியே யிந்தத்
திருநடம் யாருங் காண
நின்றருள் செய்ய வேண்டும்
நிருமல மான வெள்ளி
மன்றவ அடியேன் வேண்டும்
வரமிது வென்று தாழ்ந்தான்
அன்றுதொட் டின்றும் எங்கோன்
அந்நட நிலையாய் நின்ருன். 13

— பரஞ்சோதி முனிவர்.

அருஞ்சொற்பொருள் :

1 கண் அகல் புவி - இடம் அகன்ற பாண்டிய நாட்டை. தனி மன்றுள் - ஒப்பற்ற வெள்ளியம்பலத்தில். அண்ணல் - கூத்தப்பெருமான். ஆடல் நூல் - நாட்டியக்கலை. மூவிருபத்து முக்கலை - அறுபத்து மூன்று கலைகள். இறைமுறை - நீதியான அரசாட்சி.

2 சிலம்பி - சிலந்திப் பூச்சி. செங்கண்மால் - திருமால். பொன்னி - காவிரி. திருவானைக்காவில் உள்ள சிவலிங்கத்திற்கு வெயில் படாதவாறு சிலந்திப் பூச்சியொன்று குடைபோல் வலைபின்னி வழிபட்டது. அதுவே மறுமையில் கோச்செங்கட் சோழனுகப் பிறந்தது என்பர். மூவிருபத்து நாற்கலைகள் — அறுபத்துநான்கு கலைகள். வையகம் - சோழ நாடு. தெண்மை + திரை = தெண்டிரை. தண்மை + துறை = தண்டுறை — பண்புத் தொகைகள்.

3 பொன்னி நாடவன் — சோழன். அலர் வேம்பின் கன்னி நாடன் - வேப்ப மாலையணிந்த பாண்டியன், ஏறு அனையாய்- சிங்கம் போன்றவனே. கனை கழல் — வினைத்தொகை. தெரிந்திலை - முன்னிலை ஒருமை எதிர்மறை வினைமுற்று.

4 மீனவன் – பாண்டியன். மறுபுலம் விஞ்சையன் – அயல் நாடாகிய சோழ நாட்டிலிருந்து வந்த அறிஞன். ஆகுலம் – கவலே. முதுமறைச் சிரம் மன்று – வேதத்தின் உச்சியாக விளங்கும் வெள்ளியம்பலம். நாட்டம் மூன்று உடை நாயகன் – முக்கட் பெருமானுகிய சிவன். முதுமை + மறை = முதுமறை; பண்புத் தொகை.

5 ஆடல் நூல் வரம்பு கண்டவர் - நாட்டியக் கலேயில் தேர்ந்தவர். துருவி – தேடி. வீடும் அரும் சிறப்பு – நீங்காத பெருமை. அறுவை – ஆடை. வெறுக்கை - செல்வம். பனுவல் – நூல்.

6 சால–மிகவும்; அருத்தம்–உண்மைப்பொருள்; நிருத்தனுர்–கூத்தப்பெருமான்; தேரு—ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; கொள் + ட் + ஆன் = கொண்டான்.

7 வடு–குற்றம்; பௌவம்–கடல்; பிறவிப்பௌவம்–உருவகம்; போகம்-இன்பம்; சரணம்-பாதம்; அடுப்பவர், கொடுப்பவர்-வினேயாலணேயும் பெயர்கள்.

8 கதம் களிறு ஒருத்தல் ஏந்தும்–கோபங்கொள்ளும் யானேகள் தம் பிடரியில் தாங்கும்; கதிர்மணிக்குடுமிக்கோயில்–இந்திர விமானம்; மதம் கரி உரியினன்–மதங்கொண்ட யானேயின் தோலேப்போர்த்தசிவன்; செய்யா-செய்து;'செய்யா'என்னும் வாய்பாட்டு வினேயெச்சம்.

9 விண்டுஅகம்மலர்–உள்விரிந்தமலர்; தொண்டுஅகம்மலர— தொண்டு செய்யும் அடியார் உள்ளம் மகிழ; முண்டகம்— தாமரை; செங்கை முண்டகம்-உருவகம்; முகிழ்த்து-குவித்து; கண் + புனல் = கட்புனல்; செம்மை + கை = செங்கை; வேண்டும்–'செய்யும்' என்னும் முற்று.

10 பொன்றுமா — நீங்குமாறு; பொன்றுவல் — இறப்பேன்; அன்பின் குன்று அன்னன் — மலேபோன்ற பேரன்புடைய பாண்டியன்; சுரிகைவாள்–உடைவாள்; வீழ்வேன்-தன்மை ஒருமை எதிர்கால வினேமுற்று.

11 நிருமலன் - குற்றமற்ற இறைவன். கன்னிநாடன் - பாண்டியன். பாசம் மூன்று – முக்குற்றங்களாகிய ஆணவம், கன்மம், மாயை. வீட்டினன் - நீக்கினன். பரம + ஆனந்தம் = பரமானந்தம். பரமானந்த வேலே - பேரின்பக் கடல். வீட்டினன் - வீழ்த்தினன்; முற்றெச்சம். உள்ளம் விழுமாறு செய்தான்.

12 விளைகள் வாய் - மலரில் விளைந்த தேனிடத்து. மெய்அறிவு இன்பம் - சச்சிதானந்தம். முந்நீர் வெள்ளம் - கடல். உடையவன் - எல்லோரையும் ஆளாக உடைய இறைவன். பளகு - குற்றம். பழிச்சல் உற்ருன் - துதிக்கத் தொடங்கினன். மூன்று + நீர் = முந்நீர். ஆழ்ந்தவன் - வினையாலணையும் பெயர்.

13 யாரும் - எல்லோரும். தாழ்ந்தான் - அடி வணங்கினன். எம் கோன் - எங்கள் தலைவனுகிய கூத்தன்.

கதைச் சுருக்கம் :—

இராசசேகர பாண்டியன் எண்ணெண்கலைகளுள் ஆடற்கலை தவிர்ந்த ஏனைய அறுபத்து மூன்று கலைகளிலும் வல்லவன். சோழ நாட்டுப் புலவன் பாண்டியற்குப் பரத நூல் தெரியாதென்று கூறிய சொல்லைப் பொருமல் அதனையும் கற்ருன். கற்குங்கால் ஏற்பட்ட வருத்தத்தை நோக்கி இவ்வருத்தம் மதுரை வெள்ளியம்பலத்தில் நடனமாடும் ஆண்டவற்கும் இருக்குமே என மனங்கவன்ருன். ஆயினும் அதனைத் தடுப்பது தகாத செயல் என நினைத்தான். முடிவாக சிவராத்திரி தினத்தன்று கோயிலுக்குச் சென்று வழிபாடுகள் பல செய்து "நின்ற தாள் எடுத்து வீசி எடுத்ததாள் நிலமீது ஊன்றி" நான் காணுமாறு, மாறியாடி என் வருத்தத்தைப் போக்க வேண்டும். இல்லையேல் வாள்மீது விழுந்து இறப்பேன் என்று அதற்குத் தயாரானன். உடனே சிவபெருமான் பக்தனது வேண்டுகோளின்படி மாறியாடிக் காட்டினன். பாண்டியன் பரவசமடைந்து என்றும் இப்படியே யாருங் காணும்படி நின்றருள் செய்ய வேண்டுமென இறைஞ்சினன். அவ்வாறே இன்னும் ஆண்டவன் மாறியாடிய கோலத்தில் பக்தர்களுக்குக் காட்சி தருகின்ருன்.

வினுக்கள்

1. பொன்னி நாட்டுப் புலவன் கன்னி நாட்டு மன்னனைக் கண்டு கூறியது என்ன?

2. பாண்டியன் பரத நூல் பயின்றது எங்ஙனம்?

3. பாண்டியன் கூத்துக்கலை பயிலுங்கால் நினைவில் கொண்டது என்ன?

4. கூத்தப் பெருமான் திருவடி வருந்துமே என்று எண்ணிய பாண்டியன் யாது செய்தான்?

5. கூத்தன் கால் மாறியாடிய காட்சியைக் கண்ட பாண்டியன் நிலை யாது?

6. பாண்டியன் கூத்தப் பெருமானிடம் வேண்டிய வரம் யாது?

(ஈ) சீறாப் புராணம்

கரம் பொருத்து படலம்

யூதர்கள் நபியை தம் இல்லத்திற்கு அழைத்தல்

சொல்லிய விலைப்பொருட் டொகையை நும்வயின்
ஒல்லையின் உதவுதற் குறுதி யாகவே
மல்லுடைப் புயத்திறல் முகம்ம தேயெம
தில்லிடை வருகவென் றிசைத்திட் டாரரோ. 1

நபிகள் யூதர்களின் இல்லத்திற்குப் புறப்படுதல்

ஷாமுநாட் டவருரை யனைத்துஞ் சம்மதித்
தாமினா திருமகன் அகம கிழ்ச்சியாய்
நேமிவா னவிர்திரை நிறைந்து சுற்றிய
பூமிநா யகர்தொழப் புறப்பட் டாரரோ. 2

யூதர்கள் வஞ்சகமாகப் புகழ்தல்

மைதவழ் குடையீ ரிந்த மனையிடைப் புகுத யாங்கள்
செய்தவப் பயனோ முன்னோர் தினைத்தபுண் ணியத்தின் பேறோ
எய்திய பெற்றி யென்ன இசைந்தநன் முகம் மதுகை
பொய்திகழ் நாவால் வஞ்சம் பொருந்திய மனத்தர் சொன்னார். 3

யூதன் ஒருவன் நபிமீது கல்லைத் தள்ள, கல் கையைப் பற்றிக் கொள்தல்

தீங்குறு மனத்த னேகிச் செறித்தமேற் பலகை மெல்ல
வாங்கியங் கிருந்த கல்லை வரைப்புயம் பிதுங்க வுன்னித்
தாங்கலில் உருட்டி செல்லத் தள்ளினன் தள்ள லோடும்
நீங்கருங் கரத்தைக் கவ்வி நெரிபட இறுக்கிற் றன்றே. 4

வஞ்சக யூதன் கல்லைக் கழற்ற இயலாது வருந்துதல்

கரத்தினிற் பதிந்த கல்லைக் கழற்றினன் கழற்ற லாகா
துரத்தொடுங் காலை யூன்றி யுதைத்திழுத் தசைத்து வெள்வாய்
நிரைத்தபல் லதரங் கவ்வி நெற்றிமேற் புருவ மோட்டி
வரைத்தடப் புயங்கள் வேர்ப்ப வலித்தறச் சலித்து ழன்றான். 5

வஞ்சகர் தீச்செயல் அறிந்த தரகன் வருந்திக் கூறல்

ஓங்கு மாநில மாக்களி லொருவருக் சொருவர்
தீங்கி யற்றிட நினைத்திடுங் கொடியவத் தீமை
நீங்கி டாதவ ருயிரினைப் பருகநே ரலர்கை
தாங்கும் வாளென ஒல்லையி லுறச்சமைந் திடுமே. 6

யூதர்கள் நபியிடம் மன்னிக்க வேண்டுதல்

வெறுத்த புன்மனக் கொடியம்யாம் விளைத்திடும் வினையைப்
பொறுத்து நல்லரு ளெம்வயின் புரிகெனப் போற்றி
மறுத்து நன்மொழி புகன்றனர் வளருநல் லறத்தை
அறுத்துத் தீவினைப் பயிர்விளைத் திடநினைத் தவரே. 7

அறுந்த கரம் பொருந்துதல்

கரிய கல்லினிற் பதிந்திடும் கரத்தினின் கரத்தைத்
தெரிய வைத்திடென் றோதிய மொழியினைத் தேறிச்
சொரித ருங்குரு திகளோடுந் துடுப்பெனுங் கரங்கள்
அரிதி னீட்டியே தொட்டிட வொட்டின வன்றே. 8

யூதன் நபியின் இணையடிகளை வணங்குதல்

முன்னை நாளினும் பலனுறு முழுமலர்க் கரத்தால்
வன்ன மாமலர் முகம்மதின் இணையடி வருடி
இன்னல் நீக்கினை இருகரம் பொருத்தினை இனியென்
தன்னை யாளுதி கடனெனு அடிக்கடி தாழ்ந்தான். 9

அருஞ்சொற் பொருள் :

1 மல் - மல் தொழில்; ஒல்லை - விரைவு; வயின் - இடம்.
2 திரை - அலை; பூமி நாயகர் - முகம்மது.
3 மை தவழ் குடையீர் - மேகங்கள் தவழ்ந்து வரும் குடையினை யுடையீர்.
4 வரை புயம் - மலைபோன்ற தோள்.
5 உரம் - வலிமை. அறசலித்து - மிகவும் தளர்ச்சியுற்று. உழன்றுன்—வருந்தினுன்?
6 நேரலர் - பகைவர். ஒல்லை - விரைவு.
7 எம் வயின் - எங்களிடம். புகன்றனர் - கூறினர்.
8 துடுப்பு எனும் கரங்கள் - துடுப்பினைபோன்ற கைகள்.

TB
0-,6(8)

கதைச் சுருக்கம் :—

நபி நாயகமவர்கள் வியாபாரத்தின் பொருட்டு ஷாம் நகர்க்குச் சென்று மக்கமா நகரத்து மக்கள் வசிக்கும் இடத்திற்குப் போய்த் தங்கினுர். இங்கு வந்த யூதர்களிற் சிலர் முகம்மது நபி அவர்களின் அங்க இயல்பினை ஆராய்ந்தனர். நபி நாயகத்தைக் கொன்ருல்தான் தமது மதம் அழியாமல் வாழும் என எண்ணினர். சூழ்ச்சியாற் கொல்ல திட்டமிட்டனர். "நீவிர் கூறும் விலைப் பொருள் தொகையைத் தருகிரோம் வாருங்கள்" எனக் கூறித் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்தினர். சிலர் கீழே இருந்து அவருக்கு உபசாரம் செய்தனர்.

மேலே இருந்து அவர்மீது பாராங்கல்லைத் தள்ளுவதற்குத் திட்டமிட்டிருந்தனர். தீயவன் ஒருவன், திட்டப்படி மேலே போய் கல்லைத் தள்ளக்கையை வைத்தனன். கல் அவன் கையை இறுகப் பற்றிக்கொண்டது. அவன் அலறினுன். அவணிருந்தோர் கல்லை இழுத்தனர். கை அறுந்தது. நபிகள் பெருமானிடம் ஓடினர். மன்னிக்கும்படிக் கெஞ்சினர். அப்பெருமான் அவனை மன்னித்து முன்போலவே கையைப் பொருத்தி அருள் புரிந்தார்.

வினுக்கள்

1. யூதர்கள் நபியை யாது கூறி தம் இல்லத்திற்கு அழைத்தனர்.

2. நபி, யூதர்கள் வீட்டுக்குச் சென்றபோது யூதர்கள் கூறிய முகமனுரை என்ன?

3. நபியின் மீது கல்லைத்தள்ளிய யூதன் அடைந்த துன்பம் யாது?

4. வஞ்சகரது தீச்செயல் அறிந்த தரகன் கூறியதென்ன?

5. யூதனது அறுந்த கரம் பொருந்தியதெங்ஙனம்?

6. இச் செய்யுட் பகுதியால் நீவிர் அறியும் நீதி என்ன?

(உ) தேம்பாவணி

தேம்பா + அணி = வாடாதமாலை. தேன் + பா + அணி = தேன் போன்ற இனிய பாக்களின் வரிசை.

ஆசிரியர் வரலாற்றை வாழ்த்துப் பகுதியிற் காண்க. குழந்தை இயேசுவை நோக்கி, அனைவரும் தங்களைக் கண்களாற்கண்டு களிப்பு அடைய வரம்தருக என்று சூசை தொழுதார்.

வானவர் சென்று இடையரை அழைத்தல்

இன்ன வாயில் இன்ன தன்மை
இன்ன யாவும் ஆகையில்
பொன்ன நாடு துன்னும் உம்பர்
பொன்னு ருக்கொ டாங்குபோய்
மின்னல் நேரும் அன்னை ஈன்ற
வேத நாத னைத்தொழ
உன்ன லாத கோவர் இன்பம்
உண்ண உற்ற ழைத்தனர். 1

இடையர்கள் வந்து வணங்குதல்

கொழுந்து றுங்கு ளிர்ந்த முல்லை
கொண்ட கோவர் கூட்டமும்
எழுந்து றுங்கு டத்தி யாரும்
ஏகி ஆய காட்சியால்
விழுந்து றுங்க ளிப்பு விஞ்சி
வேத நாதன் மேற்பதம்
தொழுந்தொ றுந்தொ ழுந்தொறுந்து
ளங்கு கின்ற தோற்றமே. 2

இடையர்கள் வாழ்த்தும் வணக்கமும்

எண்ணு ளேய டங்க லின்றி
ஏய்ந்த மாட்சி பூண்டுவான்
விண்ணு ளேபொ லிந்து வந்த
விண்ண வர்க்கு வேந்தனே

புண்ணு ளேம ருந்து நீவிப்
போன ஆட்டை மீட்கவோ
மண்ணு ளேயெ ழுந்து வந்து
மண்ண னென்று தித்தனே. 3

மணிக்க லத்த கத்த மைத்த
வான மிர்த மார்பினேய்
பிணிக்கு லத்த கத்து தித்த
பெற்றி ஆய்ந்து வாழ்த்திடல்
பணிக்கு லத்த கத்த டங்கி
லாற்ப ணித்த நின்பணி
அணிக்கு லத்த கத்த ணிந்த
அன்பு பேர்வி லாகுமே. 4

இரவி வேய்ந்த கஞ்சம் ஈன்ற
இலகு முத்தம் ஏய்த்துவெல்
புரவில் வேய்ந்த சேயை ஈன்ற
பொருவில் அன்னை வாழுதி
சுருதி வேய்ந்த மாட்சி பூண்ட
துணைவன் ஆய மாதவத்
துருவில் வேய்ந்த வேந்த வாழி
உறுதி என்று வாழ்தினர். 5

இடையர்கள் குழந்தைக்கு மலர்மாலை சாத்தல்

இடத்தி டத்த டர்த்தி யுற்ற
இக்கு டைத்த இன்பு சொற்
குடத்தி யர்க்க மைந்த பற்றல்
கூர்ந்து தோன்றல் தாள்மிசை
தடத்து ணர்க்க மைந்த தேறல்
தாங்கு மாலை சாத்தலும்
முடித்த திங்க ளைத்தொ டுத்து
டுக்கள் துற்றல் ஒத்ததே. 6

இடையர் தாயிடம் பால் காணிக்கை செலுத்துதல்

ஏதம் இன்றி மாலி ஈன்ற
காந்தி என்று தோன்றலைக்
கோத கன்று யிர்த்த கோதை
தாள்முன் அன்ன கோவலர்

சீத இன்ப மோடி ரங்கு
தேன மிழ்தம் ஈதலும்
பாத மொன்று சோம னீன்ற
பானி லாவை மானுமே. 7

சிறுவனின் பார்வையால் இடையர் இன்புறல்

பானி லத்த மைத்த அன்பு
பதும நேரு கண்செயத்
தேனி லத்தி ஞரை நோக்கு
சிறுவன் இன்பு காட்டலால்
மேனி லத்தி ஞரின் ஒத்த
விரியு காட்சி உற்றுளம்
வானி லத்தி ஞர்ந்த இன்பு
மலிய வாழ மாந்தினர். 8

மரியம்மாள் சூசை இன்னுரையால் இடையர் மகிழ்தல்

கன்னி ஆய தாயு மோங்கு
காவ லானும் அன்புற
இன்னி ருலி னுங்க னிந்த
இன்ப அஞ்சொல் ஓதலால்
உன்னம் மேவும் ஈர அன்பு
முன்னம் உள்ளு ருமையால்
மின்ன மாரி தூவல் ஒத்து
வீழும் நாட்ட மாரியே. 9

மூவரையும் வணங்கி இடையர் மீளுதல்

ஏவல் ஆகி மூவ ரையி
றைஞ்சி ஏங்கி யேகினர்
ஆவல் ஆகி ஆங்கு வைத்த
ஆவி அல்ல தில்லதால்
மேவல் ஆகி ஆவி யாக
வேய்ந்த அன்பி லாதெனில்
நோவல் ஆகி வெற்று டல்கள்
ஊரை உற்றல் ஒத்ததே. 10

அருஞ்சொற்பொருள் :

1 உம்பர்-வானவர்; உன்னலாதகோவர்–நினைத்தும் அறியாத இடையர்; உற்று அழைத்தனர்—நெருங்க வந்து அழைத் தார்கள்.

2 கோவர்–இடையர்; குடத்தி–இடைச்சி.

3 போன ஆட்டை — பாவத்தால் ஆண்டவரை விட்டுப்போன ஆடுகளாகிய மானிடர்; மண்ணன் என்று உதித்தனை— மண்ணுக்கு உரிய மனிதனைப்போல் பிறந்தாய்.

4 பிணிக்குலத்து அகத்து உதித்த–பிணியுள்ள மனித குலத்தி டையே நீ உதித்த. பணிக்குலத்து அகத்து அடங்கு இலால்- வணக்கங்களின் வகைகளுக்குள் அடங்காத காரணத்தால்; அணிக்குலத்து-ஆபரணக்கூட்டம்போல்; பேர்வுஇல்ஆகும்- நீங்காமல் தங்கும்.

5 கஞ்சம்-தாமரை; வெல் புரவில் வேய்ந்த—வெல்லக் கூடிய கொடையில் சிறந்த; சுருதி—வேதம்; வேந்த—அரசனாகிய சூசையே; சூரியனை அணியாகக் கொண்ட தாமரை ஒளி வீசி நின்ற மரியம்மைக்கும், தாமரை ஈன்ற முத்து மரியம்மாள் பெற்ற திருமகனுக்கும் உவமை ஆகும்.

6 இக்கு - கரும்பு; தேறல் - தேன். உடுக்கள் துற்றல் ஒத்தது - நட்சத்திரங்கள் நெருங்குவதை ஒத்திருந்தது. திருக்குழந்தையின் உடலுக்கு நிறை மதியும், மாலையிலுள்ள மலர்களுக்கு நட்சத்திரங்களும் உவமை.

7 மாலி ஈன்ற காந்தி-சூரியன் தரும் கதிர். சோமன்-சந்திரன். மானும் - ஒக்கும்.

8 பதுமம் - தாமரை; மாந்தினர் - அனுபவித்தனர்.

9 இன் இருலினும் கனிந்த - இனிய தேனைவிடக் கனிவான. உன்னம் மேவும் - உள்ளத்தில் ஏற்பட்ட. நாட்டமாரி - கண்ணீர் மழை. (ஆனந்தக் கண்ணீர்).

10 மூவரை இறைஞ்சி – மரியம்மாள், சூசை, குழந்தை ஆகிய மூவரையும் வணங்கி. மேவல் ஆகி - பொருந்தி.

கதைச் சுருக்கம்:

அன்னை மரியம்மையார் பெற்றெடுத்த இயேசுநாதரைத் தொழும் பொருட்டு வானவர் இடையரை அழைத்தனர். அவர்கள் வந்து வணங்கி வாழ்த்தினர். பின்னர் குழந்தை இயேசுவுக்கு மலர்மாலை சாத்தி அன்னை மரியம்மையாரிடம் பால் காணிக்கைச் செலுத்தினர். அப்போது குழந்தை இயேசுவின் தெய்வீகப் பார்வையைக் கண்டு பரவசமுற்றனர். மரியம்மையாரும் சூசையும் இடையர்களை நோக்கி இன்னுரை பல கூற, அதனைக்கேட்ட அவ்விடையர்கள் மரியம்மை, சூசை, இயேசு ஆகிய மூவரையும் வணங்கி மீண்டனர்.

வினாக்கள்

1. வானவர் சென்று இடையரை அழைத்தது ஏன்?

2. இடையர்கள் இயேசுக் குழந்தையை எவ்வாறு வாழ்த்தி வணங்கினர்?

3. இயேசுக் குழந்தைக்கு சாத்திய மலர்மாலை எதனை ஒத்திருந்தது?

4. இடையர்கள் இட்ட காணிக்கை என்ன? அது எது போல் இருந்தது?

5. மரியம்மாள், சூசை இவர்களது இன்னுரையால் இடையர் அடைந்த இன்ப நிலையை விவரி.

IV. பல்சுவைப் பகுதி

இலக்கியங்களில் அமைந்துள்ள பலவகையான சுவைகளையும் கொண்டுள்ளது இப்பகுதியாகும்.

வருணனைப் பாடல்கள்

1. இயற்கை எழில்

இயற்கைத் தோற்றங்களின் எழிலை அலங்கரித்துக் கூறுவது இயற்கை எழில் ஆகும்.

பாடப்பகுதி மீனாட்சியம்மை குறம், கம்பராமாயணம், சீவக சிந்தாமணி, தேம்பாவணி, நளவெண்பா திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன ஆகும்.

(அ) மலை

இச்செய்யுள் மீனாட்சியம்மை குறம் என்னும் நூலில் உள்ளது. இந்நூல் மீனாட்சியம்மைக்குக் குறத்தி குறி சொல்லுவது போலப் பாடப்பட்டமையால் இப்பெயர் பெற்றது. இந்நூலாசிரியர் குமரகுருபர அடிகள். இவர் பாண்டிய நாட்டிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரிக்கும் மகனாகத் தோன்றினார். இவர் இயற்றிய வேறு நூல்கள் மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம் முதலியன. காலம்: கி. பி. 17ஆம் நூற்றாண்டு.

திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்க ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே.

— குமரகுருபர அடிகள்.

(ஆ) நாடு – மருதநிலம்

இச்செய்யுள் கம்பர் இயற்றிய இராமாயணத்தில் உள்ளது. கம்பர் சோழநாட்டில் திருவழுந்தூரில் தோன்றினார். வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார். இவர் இயற்றிய வேறு நூல்கள் ஏரெழுபது, சரசுவதியந்தாதி முதலியன. காலம்: கி. பி. 12ஆம் நூற்றாண்டு.

தண்டலை மயில்க ளாடத்
        தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
        குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
        தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
        மருதம்வீற் றிருக்கும் மாதோ.

— கம்பர்.

(இ) நெற்பயிர்த் தோற்றம்

இச்செய்யுள் சீவசிந்தாமணி என்னும் நூலில் உள்ளது. சீவகன் வரலாற்றினைக் கூறும் நூலாதலின் சீவக சிந்தாமணி எனப் பெயர் பெற்றது. இது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சைனசமய நூலாகும். இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் ஆவர். இவரியற்றிய வேறு நூல் நரி விருத்தம். காலம்: கி. பி. 9-ஆம் நூற்றாண்டு.

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

— திருத்தக்க தேவர்

(ஈ) நகர் (எருசலேம் நகர்)

இச்செய்யுள் தேம்பாவணி என்னும் நூலில் உள்ளது. இது சூசையப்பர் வரலாற்றினைக் கூறும் காவியமாகும். இந் நூலாசிரியர் வீரமா முனிவர். இவர் இத்தாலிய நாட்டிலுள்ள காஸ்திக்கிலியோனியா என்னும் ஊரில் பிறந்தார். தமிழகத்தில் இயேசுவின் மறையைப் பரப்ப வந்த இவர் மதுரை சுப்பிரதீபக் கவிராயரிடத்தில் தமிழ்ப் பயின்றார். இவர் இயற்றிய வேறு நூல்கள்: திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை முதலியன. காலம்: கி. பி. 17ஆம் நூற்றாண்டு.

நீரல்ல தலையில்லது; நிறைவான் பொருளிடுவோர்
போரல்லது பகையில்லது; புரிவான் மழைபொழியும்
காரல்லது கறையில்லது; கடிகாவ லும் அறனல்
சீரல்லது சிறைஇல்லது திருமா நகரிடையே.

— வீரமாமுனிவர்

(உ) கதிரவன் தோற்றம்

இச்செய்யுள் கம்ப இராமாயணத்தில் உள்ளது. இப்பாவில் ஞாயிற்றின் தோற்றத்தினைக் கம்பர் உருவகமும் உவமையும் அமைய விளக்கியுள்ளார்.

மீனுடை எயிற்றுக் கங்குல்
கனகனை வெகுண்டு வெய்ய
கானுடைக் கதிர்கள் என்னும்
ஆயிரங் கரங்க ளோச்சி
தானுடை உதய மென்னும்
தமனியத் தறியுள் நின்று
மானுட மடங்க லென்னத்
தோன்றினன் வயங்கு வெய்யோன்.

— கம்பர்.

(ஊ) மாலைப்பொழுது

இச்செய்யுள் நளவெண்பாவில் உள்ளது. நளன் வரலாற்றினை வெண்பாவால் கூறுதலின் இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். ஆதரித்தவன்: மள்ளுவ நாட்டரசன் சந்திரன் சுவர்க்கி. இயற்றிய வேறு நூல்கள்: அல்லியரசாணிமாலை, இரத்தினச் சுருக்கம் முதலியன. காலம்: கி. பி. 12ஆம் நூற்றுண்டு.

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.

— புகழேந்திப் புலவர்.

(எ) தென்றல்

இச்செய்யுள் திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. மதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறுதலால் இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழ நாட்டிலுள்ள திருமறைக்காட்டில் மீனாட்சிசுந்தர தேசிகருக்கு மகனாகத் தோன்றினார். இயற்றிய வேறு நூல்கள்: மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, வேதாரணிய புராணம் முதலியன. காலம்: கி. பி. 16ஆம் நூற்றுண்டு.

பொங்கரில் நுழைந்து வாவி
புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே களைகள் தேரும்
அறிவன்போ லியங்கு மன்றே.

— பரஞ்சோதி முனிவர்.

அருஞ்சொற்பொருள்

1. இயற்கை எழில் :—

(அ) தமிழ்முனிவர் - அகத்தியர் ; தூங்குதல் - தங்குதல்; சூடுமலை, சூழுமலை, தூங்குமலை: வினைத் தொகைகள்.

(ஆ) தண்டலை – தண்மை + தலை - சோலை; கொண்டல் - மேகம் ; ஏங்க - ஒலிக்க; எழினி - திரைச்சீலை; மகரயாழ் – ஒருவகை யாழ்; மருதம்–மருத நிலம்–மருதநாட்டு அரசி.

தண்டலை : பண்புத்தொகை; குவளை: முதலாகு பெயர். குவளைமலர்.

(இ) சொல்-நெற்பயிர்; இறைஞ்சி–வணங்கி.

(ஈ) அலை-அலைதல், நீர் அலை; வான்பொருள் – சிறந்த பொருள்; கார்–மேகம்; கறை-கறுப்பு; எருசலேம் நகர் இடையே வருந்துவோர், போரிடுவோர், குற்றமுள்ளவர், காவலில் உள்ளோர், சிறைப்பட்டோர் முதலியோர் இல்லை.

(உ) மீன்-மின்னுதல், விண்மீன்கள்; கங்குல் கனகன்-இரவாகிய இரணியன் உருவகம்; தமனியம்–பொன்; மானுடமடங்கல்-நரசிங்கம்.

(ஊ) கருப்புவில்லி–மன்மதன்; புன்மாலை–புல்லியமாலை.

(எ) பொங்கர்–சோலை; வாவி–குளம்; கடி–மணம்; மயிலை-இருவாட்சி; கொங்கு – மகரந்தம்; தேரும் – ஆராய்கின்றன; அறிவன்-மாணவன்; மயிலைமுல்லை: உம்மைத்தொகை

முத்தொள்ளாயிரம்

மூன்று + தொள்ளாயிரம் = முத்தொள்ளாயிரம். தமிழ் நாட்டு மன்னர்களாகிய சேர சோழ பாண்டியர் மூவரைப் பற்றியும் தனித்தனியே தொள்ளாயிரம் வெண்பாக்களைக் கொண்ட நூலாதலின் இது முத்தொள்ளாயிரம் என்று பெயர் பெற்றது. இந்நூலின் 2700 பாடல்களில் 130 பாடல்களே இன்று கிடைத்துள்ளன. இதனைப் பாடிய புலவர் இன்னாரென அறியக்கூடவில்லை. பிற்காலத்தில் விளங்கிய நக்கீரதேவர் இந்நூலைப் பாடினர் என்பர். இவரது காலம் 5-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகும்.

(ஏ) பாண்டி நாட்டு வளம்

நந்தி னிளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும் — சிந்தித்
திகழ்முத்தம் போல்தோன்றும் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு.

(ஐ) சோழன் களிறு

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும் — பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு

(ஒ) சேரன் பவனி

தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே — ஆய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு.

அருஞ்சொற் பொருள் :

1 நந்து—சங்கு. இளஞ்சினை—முதிராத முத்து. செம்மல்—தலைமை. தென்னன்-பாண்டியன். நகை-ஒளி. இளமை+சினை=இளஞ்சினை. குவிமொட்டு, திகழ்முத்தம் - வினைத்தொகைகள். பந்தர் -- 'பந்தல்' என்பதன் மொழியிறுதிப் போலி. செம்மற்று—குறிப்பு வினைமுற்று.

2 இற்ற—ஒடிந்த. கோடு—கொம்பு. இடறி—எற்றி. பிடி—பெண் யானை. பொல்லாமை—அழகிழந்த தன்மை. கல்ஆர் தோள்—மலைபோன்ற தோள். கிள்ளி—சோழன். கொடி மதில்—2ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. தேய்ந்த நகம்-பெயரெச்சத் தொடர். புறங்கடை – இலக்கணப் போலி. கிள்ளி களிறு—ஆறும் வேற்றுமைத் தொகை.

3 திரிந்த—சுழன்ற. குடுமி—உச்சிக் குமிழ். வண்டு உலாம் கண்ணி—வண்டு மொய்க்கும் மாலை. வயம் மான்தேர்—வலிமையான குதிரைகள் பூட்டப்பெற்ற தேர். கோதை—சேரன். குடுமிய—குறிப்பு வினைமுற்று. ஆய்மலர்—வினைத் தொகை. வண்டுலாஅம், கண்டுலாஅம்—இன்னிசையளபெடைகள்.

2. சீட்டுக் கவி

புலவர்கள் தம்மை ஆதரிக்கும் வள்ளல்கட்குத் தம் கருத்தைக் கவிதை வடிவிலேயே ஓலையில் எழுதியனுப்புவர். அங்ஙனம் எழுதப்பட்ட கவிகளுக்குச் சீட்டுக் கவிகள் என்று பெயர். இங்குப் பாடமாக வந்துள்ள சீட்டுக் கவி, முத்துவீரப்பர் என்னும் வேளாளர்குல வள்ளலுக்குச் சீர்காழியில் தோன்றி, 'இராம நாடகக் கீர்த்தனை' பாடியவராகிய அருணாசலக் கவிராயரால் எழுதப்பெற்றது. இவரது காலம் 19-ஆம் நூற்றாண்டு.

எத்திசையு மேபரவு தக்கண சலமுனி
எதிர்த்தபா வலர்குடாரி
இராமாய ணக்கவியை நாடகம் செய்தவ
னிலக்கண முணர்ந்த புலவன்
முத்தமிழ்க் காழியரு ணாசலக் கவிராய
முகில்வர விடுக்கும் ஓலை
முந்துபுகழ் தென்குளத் தூர்முத்து வீரப்பன்
முகமலர்ந் தினிது காண்க
வித்துவ சனங்களுக் காதார மாகியவர்
வேண்டி யவெலா மக்கணம்
விரகுட னளித்தனையெ னக்கேட்டு நாமுமுனை
மேவினேம் கவியெழுதினேம்.

— அருணாசலக் கவிராயர்.

அருஞ்சொற் பொருள்:

தக்கணுசல முனி—தென்றிசைப் பொதிகை வாழ் அகத்திய முனிவன்; தக்கண + அசலம் + முனி = தக்கணுசல முனி. இராம + அயநம் + கவி = இராமாயணக் கவி. குடாரி —கோடரி—மரக்கொப்பை வெட்டுவது. காழி — சீர்காழி. முகில் — மேகம் — கவிமழை பொழிவது; உவமவாகுபெயர். வித்துவ சனங்கள் —புலவர் கூட்டம். விரகு—திறமை. பாவலர் குடாரி—நான்காம் வேற்றுமைத் தொகை. முந்துபுகழ்—வினைத்தொகை. காண்க – வியங்கோள் வினைமுற்று. மேவினேம் – முற்றெச்சம். எழுதினேம் — தன்மைப் பன்மை இறந்தகால வினைமுற்று.

3. சிலேடைப் பாடல்கள்

நெல்லைச் சிலேடை வெண்பா

நெல்லை, திருநெல்வேலி என்பதன் மரூஉ. திருநெல்வேலியில் எழுந்தருளும் நெல்லையப்பரைத் தலைவராகக் கொண்டு பாடப் பெற்ற சிலேடையணி அமைந்த வெண்பாக்களால் ஆகிய நூல். சிலேடை, செம்மொழிச் சிலேடை என்றும் பிரிமொழிச் சிலேடை என்றும் இரு வகைப்படும். பல பொருள் தோன்று மாறு சொற்களையும் தொடர்களையும் அமைத்தல் சிலேடையணியாகும்.

இதனைப் பாடியவர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார். இவர் தென்காசியைச் சார்ந்த வெள்ளகால் என்னும் ஊரினர். இவர் தந்தையார் பழநியப்ப முதலியார். சைவ வேளாண் மரபினர் சென்னை அரசின் கால்நடை மருத்துவத் துறையில் அலுவல் பார்த்து ஓய்வு பெற்றவர். இவரது காலம் 1857 — 1946.

நெல்லிக்காய் மேன்மையுறும்

மல்லற்பூஞ் சோலையினும் மள்ளருழு பண்ணையினும்
நெல்லிக்காய் மேன்மையுறும் நெல்லையே — வெல்லற்காம்
வேலேறு கைக்குமரன் வேழமுகன் தந்தைவெள்ளை
மாலேறு கைக்குமரன் வாழ்வு.

செம்பியனண்ணும்

கூர்செல் வருஞ்செல்வங் கூட்டுபொரு நைப்புனலும்
நேர்செம் பியனண்ணும் நெல்லையே — தேர்பல்
விதநோன் புணைதருவார் வெம்பவநீர் நீந்தப்
பதநோன் புணைதருவார் பற்று.

அருஞ்சொற்பொருள் :

1 சோலையில் நெல்லிக்காய் மேல் மை (மேகம்) தவழும். வயல் களில் நெல் இக்கு ஆய் மேன்மை உறும்—நெல் கரும்பைப் போன்று ஓங்கி வளரும். வேல் ஏறு கைக் குமரன் — வேலைத் தாங்கிய கையினையுடைய முருகன். வேழ முகன் – விநாயகன். வெள்ளைமால் ஏறு உகைக்கும் அரன் – திரு மாலாகிய வெள்விடையில் ஏறிச் செலுத்தும் சிவன். வாழ்வு — வாழும் தலம்.

2 கூர் செல்வர் – மிக்க செல்வம் படைத்தோர்; செம்பியன் நேர் அண்ணும் – சோழனுக்கு ஒப்பாக விளங்குவர். பொரு நையாற்று நீர், நேர் செம்பு, இயல் நண்ணும் – தாமிரச் சத்துப் பொருந்தியிருக்கும். பல்வித நோன்பு உள் நைதருவார் – பலவித விரதங்களால் உடலை வருத்துவோர். வெம் பவம் நீர் – கொடிய பிறவிக் கடல். பதம் நோன் புணை – பாதமாகிய வலிய தெப்பம். பற்று - விரும்பியுறை யும் தலம்.

---

4. சிறு நூல்கள்

குற்றாலக் குறவஞ்சி

தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று குறவஞ்சி. குறத்தி பாட்டு என்பது அதன் பொருள். திருக் குற்றால நாதரைத் தலைவராகக் கொண்டு பாடப் பெற்றது இப் பிரபந்தம். இந்நூலைப் பாடியவர் திரிகூட ராசப்பக் கவிராயர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசியைச் சார்ந்த மேலகரம் என்னும் ஊரினர். சைவ வேளாள மரபைச் சார்ந்தவர். இவர் குற்றாலத் தல புராணம், குற்றாலக் கோவை, குற்றால உலா, குற்றாலப் பிள்ளைத் தமிழ் முதலான பதினான்கு நூல்கள் பாடியுள்ளார். இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.

குறத்தி மலைவளம் கூறுதல்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. 1

ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தைஅகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயும்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்குந் திரிகூட மலைஎங்கள் மலையே. 2

அருஞ்சொற்பொருள்:

1 வானரம்—ஆண் குரங்கு. மந்தி—பெண் குரங்கு. வான்கவி—சிறந்த குரங்கு. கானவர்—வேடர். விழி எறிந்து—கண் சாடை காட்டி. ககனசித்தர்—வானத்தின்வழியே செல்லும் தவமுனிவர். காயசித்தி—உடம்பைக் காக்கும் மூலிகை. பரிக்கால் — குதிரையின் கால். தேர்க்கால் — தேர்ச்சக்கரம். வேணி – சடை. கொஞ்சும், கெஞ்சும்—போன்றன 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள். சிந்துகனி—வினைத் தொகை. செம்மை + கதிரோன் = செங்கதிரோன்—பண்புத் தொகை. பரிக்கால், தேர்க்கால் – ஆறும் வேற்றுமைத் தொகைகள். அழை + ப் + ப் + ஆர் = அழைப்பார். அழை - பகுதி, ப் - சந்தி, ப் - இடைநிலை, ஆர் - விகுதி.

2 அரவு ஈனும் மணி—பாம்புகள் கக்கிய மணிகள். அம்புலி—சந்திரன். தும்பி—யானை. சாடுதல் – அழித்தல். விந்தை—புதுமை. குதிபாயும் — துள்ளி விழும். காகம் அணுகா மலை — காக்கை பறவாத உயரமான மலை. நிரை—கூட்டம். நிலைதங்கும் — நிலையாக எழுந்தருளும். சாடுபுனம்—வினைத் தொகை. வரையாடு — ஏழாம் வேற்றுமைத் தொகை. அணுகா மலை – அணுகா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

நந்திக் கலம்பகம்

பிரபந்த வகையில் ஒன்று கலம்பகம். பல பூக்கள் கலந்து தொடுத்த கதம்பமாலை போன்று பல்வகைப் பாக்களும் கலந்து வரும் நூல். கலம்பு + அகம் = கலம்பகம். கலப்பைத் தன்னகம் கொண்டது கலம்பகம் ஆயிற்று. இது தோள் வகுப்பு, மதங்கு, அம்மானை, சம்பிரதம், குறம், மறம் முதலிய பதினெட்டு உறுப்புக் களைப் பெற்று வருவது. அந்தாதித் தொடையால் அமைவது.

நந்திக் கலம்பகம் என்னும் இந்நூல் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னன்மீது பாடப்பெற்றதாகும். இந்நூலைப் பாடியவர் நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகனே என்பர். முடி சூடிய நந்திவர்மனைச் சூழ்ச்சியால் கொன்று அரசினைக் கைப்பற்ற விரும்பிய அம் மாற்றாந்தாய் மகன் நச்செழுத்துக்கள் அமையு மாறு இந்நூலைச் சுவையுறப் பாடி அவனைக் கேட்குமாறு செய்து கொன்றான் என்பர். இந்நூல் தோன்றிய காலம் 9-ஆம் நூற்றாண்டு.

நந்தி மன்னன் வீரம்

பதிதொறு புயல்பொழி தருமணி
    பணைதரு பருமணி பகராநெல்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு
    கிழிதரு காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள்
    உரிமையும் இவையிவை உடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி
    பணிகிலர் வானகம் ஆள்வாரே

கையறு நிலை

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
    மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
    கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
    செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானுமென் கலியு மெவ்விடம் புகுவேம்
    நந்தியே நந்தயா பரனே.

அருஞ்சொற்பொருள் :

1 தொகு–மறையும்படி. பொருது–மோதி. இழிதரு-கீழிறங்கி ஓடுகின்ற. புயல்—மேகம். பணை—மூங்கில். பகரா — விலைக்கு விற்று. பணிகிலர்–வணங்காதவராய்–முற்றெச்சம். பகைத்த மன்னர்கள் இறந்துபடுவர். பகரா — 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம். மலரடி—உவமத்தொகை. பணி + க் + இல் + அர் = பணிகிலர்; பணி–பகுதி, க்–சாரியை, இல்–எதிர்மறை இடைநிலை, அர் — விகுதி.

2 வதனம்–முகம். முகத்தின் ஒளி நிலவொடு கலந்துவிட்டது. மறிகடல் – அலைமோதும் கடல். மலராள் – இலக்குமி. அரி - திருமால். கலி — வறுமை. தயாபரன் — அருளிற் சிறந்தவன். செந்தழல் — பண்புத்தொகை. புகுவேம் — தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று. புகு + வ் + ஏம் = புகுவேம். தற்குறிப்பேற்ற அணி.

முக்கூடற் பள்ளு

பிரபந்த வகைகளுள் ஒன்று பள்ளு. பள்ளர்களாகிய உழவர்களின் உரிமை வாழ்வைச் சித்திரிக்கும் ஒரு காதல் பிரபந்தம். திருநெல்வேலியைச் சார்ந்த சீவலப்பேரி என்னும் ஊரே முக்கூடல் எனப்படும். அங்கு தண்பொருநையாற்றுடன் சிற்றாறும் மற்றொரு காட்டாறும் வந்து கலக்கின்றன. ஆதலின், அவ்விடம் முக்கூடல் எனப்பட்டது. அங்கு விளங்கும் திருமாலாகிய அழகரைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. இந்நூலாசிரியர் யாரெனத் தெரியவில்லை. இந்நூலில் ஆறை அழகப்ப முதலியாரைப்பற்றிக் கூறப்படுதலால் அவர் வாழ்ந்த 17 ஆம் நூற்றாண்டே இந்நூல் தோன்றிய காலமாகும்.

சிற்றாறு பெருகிவரும் சித்திரம்

குற்றாலத்திரி கூட மால்வரை
யுற்றே மேகம் பொழிந்த நீர்
கூடிப் பொருநை நாடித் திருமுக்
கூடற்பதியை வலங்கொண்டே

வற்ரு மடுவிற் பரவை குரவை
வாளை கோளை தேளி மீன்
மயிந்தி உழுவை அயிந்தி கூனி
மணலி ஆரால் ஓராமீன்

பற்ரு அயிரை கெண்டை கெளிறு
பருவ ராலும் அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்தில்
பாய வயலில் பாயவே

சிற்ரு றென்பது பெற்ரு லும்மொரு
சிறிய வர்மனப் பெருமைபோல்
சித்தி ராநதி பெருகி வார
சித்திரம் பாரும் பள்ளீரே!

அருஞ்சொற் பொருள்

நாடி – தேடி. மடு – பள்ளம். பரவை, குரவை, வாளை கோளை முதலானவை. பலவகை மீன்கள். கால் – கால்வாய், சிறியவர் — குறுமுனிவராகிய அகத்தியர். சிற்ருறு என்ற பெயரைப்பெற்ருலும் அகத்தியருடைய பெருமனத்தைப்போன்று வெள்ளம் பெருகி வருகிறது. வற்ரு மடு, பற்ரு அயிரை – ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சங்கள்.

---

5. வழிபாட்டுப் பாடல்கள்

திருவாசகம்

திருவாசகத்தைப் பாடியவர் மாணிக்கவாசகர். இவரது இயற்பெயர் வாதவூரர். இவர் திருவாதவூரில் அமாத்தியப் பிராமணர் குலத்தில் தோன்றியவர். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக விளங்கியவர். திருப்பெருந்துறைக் குருந்த மர நீழலில் குரு வடிவாக இருந்த சிவன்பால் ஞானேபதேசம் பெற்றுத் திருவாசகத்தைப் பாடியவர். இவரது காலம் 3ஆம் நூற்ருண்டு.

தாயினும் இனியான்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா ஆனந்த மாய

தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

— மாணிக்கவாசகர்.

அருஞ்சொற்பொருள்

நினைந்து—குழந்தையின் பசிவேளையை அறிந்து; சாலப் பரிந்து - மிக்க அன்பு கொண்டு; ஊன்-உடம்பு; உலப்பு இலா-அழிவில்லாத; சிக்கென - இறுக; உள் + ஒளி = உள்ளொளி; புறம்புறம் - அடுக்குத்தொடர்; பிடித்தேன் - தன்மை ஒருமை இறந்தகால வினைமுற்று.

தேவாரம்

சிவன்

தேவாரம் பாடிய மூவர். அவருள் கீழ்வரும் பாடலைப் பாடியவர் திருஞானசம்பந்தர். இவர் சீர்காழியில் அந்தணர் மரபில் தோன்றியவர். இவரது பெற்றோர் சிவபாதவிருதயர், பகவதியார், மூன்றாண்டுப் பருவத்திலேயே சிவனருள் பெற்று உமையம்மையாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றவர். அன்று முதல் பாடத் தொடங்கியவர். இவரது காலம் 7ஆம் நூற்றாண்டு.

திருநெல்வேலியுறை செல்வர்

மருந்தவை மந்திரம் மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினில் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்
வேலியுறை செல்வர்தாமே.

— திருஞானசம்பந்தர்.

அருஞ்சொற் பொருள்:

மருந்து - பிறவிப் பிணிக்கு மருந்து. புறவு - காடு. பொன் - பொன்போன்ற மலர். செருந்தி - செருந்தி மரம். அருமை + துயர் = அருந்துயர், நன்மை + நெஞ்சம் = நன்னெஞ்சம். தண்மை + புறவு = தண்புறவு; செம்மை + பொன் = செம்பொன்-பண்புத் தொகைகள். பொன்-உவமவாகு பெயர். உறை செல்வர்-வினைத்தொகை.

திவ்யப் பிரபந்தம்

பன்னிரு ஆழ்வார்களாகிய வைணவ அடியார்களால் பாடப் பெற்ற திருமாலின் தோத்திரப் பாக்கள் நாலாயிரம். அவற்றை நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்பர். அவ் வாழ்வார்களில் ஒருவர் குலசேகரர். இவர் சேர மன்னர் மரபில் தோன்றியவர். இராமாவ தாரத்தில் மிகுந்த பக்தியுடையவர். இவருடைய பாடல்கள் 'பெருமாள் திருமொழி' எனப்படும். இவரது காலம் 8ஆம் நூற்றுண்டு.

திருமால்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாயில்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

— குலசேகரர்.

அருஞ்சொற் பொருள்

செடி—குற்றம். வல்வினை—பாவம். நெடியான் — திரு விக்ரமாவதாரம் எடுத்தவன். அரம்பையர் — தேவமகளிர். இயங்கும்–உலாவுவதற்கு இடமான. படி–வாயிற்படி. வன்மை + வினை = வல்வினை - பண்புத்தொகை. கோயில், வாயில்—இலக் கணப் போலிகள். பவள வாய்—உவமத் தொகை.

கந்தர் அலங்காரம்

'கந்தர் அலங்காரம்' என்னும் இந்நூல் அருணகிரிநாத ரால் பாடப்பெற்றது. திருவாசகத்தைப் போன்று மனத்தை உருக்கும் மாண்புடையது. அருணகிரிநாதர் திருவண்ணுமலையில் தோன்றியவர். சைவ வேளாள மரபினர். திருவண்ணுமலையை ஆண்ட பிரபு தேவராசனுல் ஆதரிக்கப் பெற்றவர். முருகன் அருள் பெற்றுத் திருப்புகழ்ப் பாக்களைப் பாடியவர். இவரது காலம் 15–ஆம் நூற்றுண்டு.

கந்து-பற்றுக்கோடு. பக்தியால் தன்னைப் பற்றியவர்க்குப் பற்றுக்கோடு போன்றவன் முருகன். அப்பெருமானுக்கு அழகு தரும் அணியாகப் பாடப்பெற்ற பாமாலையாதலால் 'கந்தர் அலங்காரம்', என்று பெயர் பெற்றது. இந்நூலில் உள்ள ஒரு பாடல் இங்குப் பாடமாக வந்துள்ளது.

முருகன்

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

— அருணகிரிநாதர்.

அருஞ்சொற் பொருள்

மாலோன் - திருமால். மன்றுடி - மன்று + ஆடி – நடராசப் பெருமான். மேதினி - உலகம். சேல் - மீன். செங்கோடன் - திருச்செங்கோடு என்னும் தலத்தில் விளங்கும் முருகன். நான்முகன் - பிரமன். மன்றுடி - ஏழாம் வேற்றுமைத்தொகை. மெய்மை + ஞானம் = மெய்ஞ்ஞானம் - பண்புத்தொகை. வயற்பொழில் - உம்மைத்தொகை. நான்கு + முகன் = நான்முகன்.

சகலகலாவல்லிமாலை

கலைமகள்

'சகலகலாவல்லிமாலை' - என்னும் இச்சிறு நூல் குமரகுருபரரால் பாடப் பெற்றது. இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் தோன்றியவர். சைவ வேளாள மரபினர். இவரது பெற்றோர் சண்முக சிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரி யம்மையார். ஊமையாக இருந்த இவர் ஐந்தாண்டுப் பருவத்தில் திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் வன்மையும் பாடும் புலமையும் பெற்றுர். இவரது காலம் 17ஆம் நூற்றுண்டு.

எல்லாக் கலைகளுக்கும் தெய்மவாகத் திகழும் கலைமகள் சகலகலாவல்லியாவாள். அவளுக்கு அணிந்த பாமாலை சகலகலாவல்லிமாலை. அம்மாலையில் உள்ள பாமலர்களில் ஒன்று பாடமாக வந்துள்ளது.

அன்னம் அனையாள்

பாட்டும் பொருளும் பொருளாற்
    பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும் படிநின் கடைக்க
    ணல்கா யுளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
    லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
    சகல கலாவல்லியே!

அருஞ்சொற் பொருள்:

கடைக்கண் நல்காய் – அருட்பார்வை செய்வாய். உளம் கொண்டு – விரும்பி. தீட்டும் – இயற்றும். ஓதிமப்பேடு – பெண்ணன்னம். பாலும் நீரும் கலந்து வைத்தால் அன்னம் பாலிலுள்ள நீரைப் பகுத்துண்ணும் பண்புடையது. கலைமகளாகிய அன்னமும் பாலனைய நூல்களைப் பகுத்துக்காட்டுகிருள். கடைக்கண் – இலக்கணப் போலி. வெண்மை + ஓதிமம் = வெள்ளோதிமம் - பண்புத்தொகை.

சீருப்புராணம்

'சீரு' என்பது 'ஸீரத்' என்னும் அரபுச் சொல்லின் திரிபு. இதற்குப் 'பெரியோர் புகழ்' என்று பொருள். சீருப் புராணம் - பெரியாரது புகழ் வரலாறு. இது நபிநாயகத்தின் புகழ் மிக்க வரலாற்றைப் புகல்வது. இதனைப் பாடியவர் உமறுப் புலவர் என்பார். இவர் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டையபுரத்தைச் சேர்ந்தவர். இவர் காலம் 17ஆம் நூற்ருண்டு.

நபிகள் நாயகம்

கவியா லுரைத்தபுகழ் பெறுவார் மிகுத்தகவி
    யடைவார் கலக்க மறவே
செவியார மெய்ப்பொருளை யறிவார் மனத்தினிறு
    செயற்கே டகற்றி விடுவார்
புவியார மொய்த்தநெறி மறைநா லினுக்குமொரு
    பொறியா யுதித்த வடிவார்
நவியார்சு வர்க்கபதி நயினர் பதத்துணையை
    நடுநாவில் வைத்த வர்களே.

— உமறுப் புலவர்.

அருஞ்சொற்பொருள்

நயினர் பதத்துணையை நாவில் வைத்தவர் கேடு அகற்றி விடுவர். கலக்கம் அற—தெளிவாக. மெய்ப்பொருள்—அறவுரைகள். செயல்கேடு—தீய எண்ணங்கள். பொறி—கருவி. நவி—ஒளி, புதுமை. நயினர்—தலைவராகிய இறைவன். பதத்துணை—பதம் + துணை — இரண்டு திருவடி. மெய்ப் பொருள்—பண்புத்தொகை. கேடு — முதனிலை திரிந்த தொழிற் பெயர். நடுநா — இலக்கணப்போலி. வைத்தவர் — வினையாலணையும் பெயர்.

தேம்பாவணி

தேன் + பா + அணி = தேம்பாவணி – தேன் போன்ற பாடல்களால் ஆகிய மாலே. தேம்பா + அணி; வாடாத மலர் மாலே. இயேசு பெருமானுக்கு அணிந்த வாடாத மாலேபோன்ற நூல்.

இந்நூலேப் பாடியவர் வீரமாமுனிவர். இவரது இயற் பெயர் கான்ஸ்டென்டைன் ஜோஸப் பெஸ்கி. இத்தாலிய நாட்டில் காஸ்திக்கிலியோனே என்னும் நகரில் தோன்றியவர்; கத்தோலிக்கக் கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர்; அம்மதத்தைப் பரப்புவதற்காக இந்தியாவிற்கு வந்தவர். சதுரகராதி, தொன்னூல்விளக்கம், வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம் முதலான நூல்களே இயற்றியவர்; 18ஆம் நூற்றுண்டினர்.

இயேசு பெருமான்

அறந்தாய் தந்தை சுற்றமுமற்
றனேத்து நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற் குயிரன்னேய்
பிறந்தெந் துயரு மெம்பகையுந்
துறந்தா யெங்கள் சிறைதீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தா யிவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ.

அருஞ்சொற் பொருள் :

கதி - புகலிடம். துறந்தாய் - போக்கினுய். சிறை - பிறவியாகியகட்டு. துகள் பூட்டிய - பாவங்களால் பூட்டப்பெற்ற. திறன் செய்து - உன் வல்லமையைக்கொண்டு. பிறந்தாய் - வினையாலணேயும் பெயர். துறந்தாய், தீர்த்தாய், திறந்தாய் - முன்னிலே ஒருமை இறந்தகால வினேமுற்றுக்கள். வாயில் - இலக்கணப் போலி.

வினுக்கள்

1. பொதிய மலேயின் சிறப்பினேக் குறத்தி எவ்வாறு கூறுகின்ருள்?

2. மருதம் வீற்றிருக்கும் காட்சியைப் புலப்படுத்துக.

3. நெற்பயிர் இறைஞ்சிக் காய்த்த வகையினே எழுதுக.

4. எருசலேம் நகரத்து இயல்பு எவ்வாறு விளக்கப்படு கிறது?

5. கதிரவன் தோற்றம் மானுட மடங்கலின் தோற்றத்தை ஒத்திருப்பது எவ்வாறு?

6. புன்மாலை அந்திப்பொழுது மெல்ல நடந்த தன்மையைப் புலப்படுத்துக.

7. தென்றல், மாணவனை எவ்வகையில் ஒத்து விளங்குகிறது.

8. 'திகழ்முத்தம் போல் தோன்றும் செம்மற்று' எது? எதனால்?

9. கிள்ளியின் களிறு புறங்கடை நின்றதற்குக் காரணம் என்ன?

10. சேரன் பவனிச் சிறப்பை முத்தொள்ளாயிரம் மொழிவது எங்ஙனம்?

11. அருணசலக் கவிராயர், முத்துவீரப்ப வள்ளலுக்கு எழுதிய சீட்டுக்கவியில் தம்மை அறிமுகப்படுத்துவது எங்ஙனம்?

12. சிலேடைப் பொருளை விளக்குக: —

'மல்லற்பூஞ் சோலையினும் மள்ளருழு பண்ணையினும்
நெல்லிக்காய் மேன்மையுறும் நெல்லை.'

13. பதவுரை எழுதுக: —

தேர்பல்-விதநோன் புணைதருவார் வெம்பவநீர் நீந்தப்
பதநோன் புணைதருவார் பற்று.

14. திரிகூடமலையின் வளத்தைச் சுருக்கி வரைக.

15. நந்திக் கலம்பகம் தோன்றியது பற்றி வழங்கும் வரலாறு என்ன?

16. கலம்பகம், பள்ளு, குறவஞ்சி — இவற்றின் இலக்கணங்கள் யாவை?

17. நந்திமன்னன் வீரம் கூறப்படுவது எங்ஙனம்?

18. தற்குறிப்பேற்ற அணியை-நும் பாடப் பகுதியிலிருந்து ஓர் எடுத்துக் காட்டுடன் விளக்குக.

19. 'சிறியவர் மனப்பெருமை போல்'-உவமையை விளக்கி உவமேயத்தைத் தருக.

20. மாணிக்கவாசகர் கூறும் இறைவன் இயல்பு யாது?

21. ஞானசம்பந்தர் நெஞ்சிற்குக் கூறும் அறிவுரை யாது?

22. இறைவன் திருநாமத்தின் சிறப்புக்கள் யாவை?

23. குலசேகராழ்வார் வேங்கடவனிடம் வேண்டும் வரம் யாது?

24. 'நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகன்!,- யார் கூற்று? இங்ஙனம் அவர் இரங்கக் காரணம் என்ன?

25. குமரகுருபரர் கலைமகளை ஓதிமத்துடன் ஒப்பிடுவது எங்ஙனம்?

26. நயினர் பதத்துணையை நடுநாவில் வைத்தவர் அடையும் சிறப்புக்கள் யாவை?

27. சூசையப்பர் ஏசுநாதரைப் பாராட்டுவது எங்ஙனம்?

உரைநடைப் பகுதி

1. ஜவஹர்லால் நேரு

நமது தாய்நாடு இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில், அதன் உரிமைக்காகப் பெருந் தலைவர்கள் பலர் போராடினர். அவர்களுள் இந்தியச் சுதந்திரச் சிற்பியாக விளங்கிய காந்தியடிகளுக்கு அடுத்தபடியாகப் புகழ்பெற்று விளங்கியவர் ஜவஹர்லால் நேரு; காந்தியடிகளாலேயே 'என் அரசியல் வாரிசு' என்று கூறப்படும் உயர்நிலை பெற்றவர்; செல்வக் குடும்பத்தில் பிறந்து கணக்கற்ற செல்வம் காலடியில் குவிந்து கிடந்தும், அதை எட்டி உதைத்துவிட்டு இந்திய மக்களுக்காக உழைத்தவர். அவர் ஒப்பற்ற அறிவாளி; தலைசிறந்த எழுத்தாளர்; உணர்ச்சி செறிந்த தமது பேச்சால் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பிய வர்; நாட்டின் திலகம். மேலும் அவர் பன்முறை சிறை சென்ற அஞ்சா நெஞ்சுறுதி படைத்த வீரர்; பாரத மக்களை அடிமை இருளிலிருந்து ஒளி உலகிற்கு அழைத்துச்சென்ற மங்காத மணி விளக்கு. ஜவஹரது வாழ்க்கை வரலாறு மாணவர்களுக்கு ஓர் எழுச்சியைக் கொடுப்பதாகும்.

ஜவஹர்லால் நேரு காஷ்மீரத்தைச் சேர்ந்த ஒரு பழைமையான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய மூதாதையர்களில் ஒருவரான ராஜ்கால் என்பவர் அப் போது டில்லியை ஆண்டு வந்த முஸ்லீம் அரசரின் வேண்டுகோளுக்கிணங்கி டில்லி வந்து குடியேறினர். இத்தகைய சிறந்த குடும்பத்தில் வந்த பண்டித மோதி லால் நேருவே நமது ஜவஹரின் தந்தையார். அவர் சிறந்த அறிஞர்; புகழ்பெற்ற வழக்கறிஞர்; பெருஞ் செல் வர். அவரது இல்லறத் துணைவியார் சொரூப ராணி அம்மையார். இவர்களது அருந்தவப் புதல்வராக ஜவஹர் லால் நேரு. 1889-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதி

ஞன்காம் நாள் பிறந்தார். அந்நாள் பாரத நாட்டு வரலாற்றில் பொன்னுளெனக் கொண்டாடும் புனித நாளாய்த் திகழ்கிறது.

ஜவஹரை அவர்தம் பெற்ருேர் செல்வமாக வளர்த்து வந்தனர். அவர் தந்தையிடம் அளவற்ற மதிப்புடையவர். அன்னேயிடம் அவருக்கு எல்லேயற்ற அன்பு உண்டு. ஜவஹருக்குப் பத்து வயது நடக்கும்பொழுது ஆனந்தபவனம் என்ற ஒரு புதிய மாளிகையைக் கட்டி மோதிலால் அதில் குடியேறினர்; மேனுட்டார் போலவே வாழ்க்கை நடத்தினர். ஆனந்த பவனத்தில் ஜவஹர் ஓர் அரச குமாரன் போல் வாழ்ந்து வந்தார்.

ஜவஹர் பதினேந்து வயது வரை வீட்டிலேயே பெர்டினண்டு புரூக்ஸ் என்னும் ஆங்கில ஆசிரியரிடம் கல்வி பயின்று வந்தார். அக்காலத்தில் இவர் பல நூல்களேயும் கற்றுத் தமது அறிவைப் பெருக்கிக் கொண்டார். அதன் பிறகு, அவர் 1905–இல் இங்கிலாந்துக்குச் சென்று ஹாரோ என்ற பிரசித்தி பெற்ற கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். ஜவஹர் 1912 வரை இங்கிலாந்தில் கல்வி கற்றுப் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்ருர். அக்காலத்தில் இந்தியாவில் எழுந்த சுதந்திரப் போரைப் பற்றியும், அரசியலாரின் அடக்கு முறைகளேப் பற்றியும் அறிந்தார். இந்தியரின் நலனுக்காக இங்கிலாந்தில் கோகலே செய்த வீரச்சொற்பொழிவு இவரது மனத்தைக் கவர்ந்தது. 'என் தாய் நாட்டு உரிமைக்காகப் போராடுவேன்' என்ற தீர்மானத்துடன் திரும்பினர்.

ஜவஹர் இந்தியாவை அடைந்ததும் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார். ஆனல் அவர் மனம் அத்தொழிலே விரும்பவில்லே. ஆகவே, அவர் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து முதன்முதலில் தென்னுப்பிரிக்க இந்தியர்களின் நலத்திற்காக ஏற்பட்ட கிளர்ச்சியில் கலந்து கொண்டார்; நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து தென்னுப்பிரிக்க இந்தியர் ஆதரவு நிதிக்காக ஐம்பதினுயிரம் ரூபாய்க்கு

மேலாக திரட்டிக் கொடுத்தார். 1916-இல் அவர் அன்னி பெசண்டு அம்மையாரோடும், காந்தி அடிகளோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அது முதல் உரிமையில் வேட்கை மிக்கவராய் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு உழைக்கலானர்.

ஜவஹர்லால் 1915இல் கமலா நேரு என்னும் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். அவ்வம்மையார் கணவனுக்கு ஏற்ற காரிகையார்; நல்லறிவும் ஒழுக்கமும் பொருந்தப் பெற்றவர்; இல்லற நெறியை இனிதே நடத்துதலில் இணையற்றவர்; கணவரைப்போல் உரிமைப் போரில் ஆர்வங்கொண்டவர்.

ஜவஹர்லால் நேரு

இந்திய உரிமைப்போரில் பங்கு பெற எண்ணி மோதிலாலும் அரசியல் வாழ்வில் ஈடுபட்டார். ஆனல், அவர் மிதவாதியாக இருந்தார். முற்போக்கு வாதியான ஜவஹருக்கு இது பிடிக்கவில்லை. இதனல் தந்தைக்கும் மகனுக்கும் அடிக்கடி வாதங்கள் நிகழும். இந்நிலையில்

நாட்டில் பல கொடிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஜவஹரது முற்போக்கும் காந்தியடிகளின் நட்பும், பஞ்சாப் படுகொலை நிகழ்ச்சியும் சேர்ந்து, மிதவாதியாக விளங்கிய மோதிலாலை முற்போக்கு வாதியாக்கி விட்டன. பஞ்சணை மெத்தையில் படுத்தபடி பல நூற்றுக்கணக்கான மக்களை ஏவிக்கொண்டு இன்ப வாழ்க்கை நடத்தி வந்த மோதிலால், அதைத் துறந்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். ஆனந்த பவனம் என்னும் தம் அழகிய மாளிகையைச் சுயராஜ்ய பவனம் எனப் பெயரிட்டுக் காங்கிரசு மகாசபைக்கு நல்கினார்; மிகுந்த ஊதியம் வரக்கூடிய தமது வக்கீல் தொழிலைத் துறந்து காங்கிரசில் சேர்ந்தார்; தமது அரிய உழைப்பால் விரைவில் அதன் தலைவரானார்.

முற்போக்கு வாதியாக விளங்கிய ஜவஹர் 1921ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபொழுது தமது எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டினார். அதனால் அரசியலார் அவருக்கு மூன்று மாதத் தண்டனையும், மோதிலாலுக்கு ஆறுமாதத் தண்டனையும் கொடுத்தார்கள். அவர்கள் சிறைக்குச் சென்றது அதுதான் முதல் தடவை. அதன் பின்னர், ஜவஹர் தாய் நாட்டிற்காகப் பலமுறை சிறை சென்றிருக்கிறார். அவரது வாலிபப் பருவத்தின் பெரும் பகுதி சிறைவாசத்திலேயே கழிந்தது எனலாம்.

அவர் அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டதும் முதன் முதலாகத் தாம் பிறந்த பெருநகராகிய அலகாபாத் நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருந்து தொண்டாற்றினார். பின்னர் காங்கிரசு சபையின் செயலாளராகவும், நான்கு முறை காங்கிரசுத் தலைவராகவும் இருந்து நாட்டுப் பணி புரிந்தார்.

குடும்பத்தில் இடுக்கண் பல அடுக்கி வந்தன. முதன்முதல் அன்புத் தந்தை காலஞ் சென்றார். பிறகு வாழ்க்கைத் துணைவி கமலா நேரு அதன் பின்னர் அன்னை சொரூபராணியார் இவ்வாறு ஒவ்வொருவராக அவரை விட்டுப் பிரிந்து சென்றனர். ஆயினும், ஜவஹர் மனங்

கலங்காது நம்நாடு அந்நிய ஆட்சியினின்று விடுதலை யடையுமட்டும் உரிமைப் போரில் முன்னணியில் நின்ருர். நாடு விடுதலையடைந்து குடியரசானதும் அவரே முதன் மந்திரியாஞர்.

ஜவஹர் பொது நலத்துக்காகத் தன்னலந் துறந்த தியாகி; உலகில் பல நாடுகளிலுமுள்ள அறிஞர்களின் நட்பையும், நன்மதிப்பையும் பெற்றவர். இந்தியாவில் மட்டுமின்றி உலகத்திலேயே ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கிய நேரு, 'ஒரு வீரனுக்குள்ள உயர்வும் ராஜ தந்திரிக்குள்ள புத்தியும் உடையவர்' என்று காந்தி அடிகளால் புகழப்பட்ட நேரு கோடிக் கணக்கான இந்திய மக்களின் நம்பிக்கைக்கு உரியவராய் விளங்கினர். அப்பெரியார் கூறிச்சென்ற அறிவுரைகளைப் பின்பற்றி நடந்து நலம் பெறுவோமாக.

வினுக்கள்

1. ஜவஹர் எங்கு எப்பொழுது பிறந்தார்?
2. ஜவஹரின் இளமைப் பருவம் குறித்து நீவிர் அறிவதென்ன?
3. ஜவஹர் மேனுட்டில் பெற்ற பட்டம் யாது? அங்கு அவர் அடைந்த அனுபவம் யாது?
4. ஜவஹர் இந்தியாவை அடைந்ததும் யாது செய்தார்?
5. கமலா நேருவின் குணச்சிறப்பினை விவரி.
6. மோதிலால் முற்போக்கு வாதியாகக் காரணமென்ன?
7. ஜவஹர் முதலாவதாக சிறை செல்லக் காரணமாக இருந்த நிகழ்ச்சி யாது?
8. ஜவஹரது குண நலனை விவரி.

பயிற்சி

1. சொற்ருெடர்களில் அமைத்துப் பழகுக:—

   ஈடுபட்டு, இடுக்கண், முன்னணி.

2. பிரித்து எழுது:— எல்லையற்ற, அவ்வம்மையார்.

2. நகைச்சுவை

நகை என்பது சிரிப்பு. சுவை என்பது இனிமை. நகைச்சுவை என்பது, 'சிரிப்பினாலாகிய இனிமை' என்று பொருள்படும். ஒன்பது சுவைகளுள் நகைச்சுவை ஒன்று. இது எவ்வளவு பெரிய துக்கத்தையும் மறக்கச்செய்து மகிழ் விக்க வல்லது; எவரையும் வயிறு வலிக்கச் சிரிப்பிக்க வல்லது. சிறந்த நகைமொழி கேட்டுச் சிரிக்காதவர் மனித இனத்தைச் சார்ந்தவராயிருக்க முடியாது. எவரையும் தன் வசமாக்கும் தன்மையது நகை. சீறி நின்றோரும் இதைக் கேட்டு ஆறிச் செல்வர். நகைச்சுவை ததும்பப் பேசுபவன் ஒரு போதும் தனியனாயிருக்க மாட்டான். அவன் எப்போதும் சிரித்து மகிழ்ந்து இருப்பதால், நிம்மதியான வாழ்க்கையும் நீண்ட ஆயுளும் பெறுவான். "எனக்கு நகைச்சுவை மட்டும் இல்லாவிடில் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்!" என்று ஒரு முறை காந்தியடிகள் கூறினார்.

சிரிப்பு உடல் நலத்திற்கு ஒரு மருந்தாகும். இதனை மேனாட்டறிஞரும், நம் நாட்டறிஞரும் ஒருங்கே ஒப்புக் கொள்கின்றனர். நகைச்சுவையைப்போல மக்களுக்கு இன்பம் அளிக்கக் கூடியது வேறொன்றுமில்லை. ஆகையாலே தான் நம் நாட்டுப் பண்டைய மன்னர்கள் விகடகவிகளைத் தங்கள் சபையில் வைத்து ஆதரித்து வந்தார்கள். இக்காலத்தில் மக்களுக்கு மன மகிழ்ச்சியை உண்டாக்கக் கூடிய கருவிகளாக நாடகம், படக்காட்சி, வானொலி முதலியவைகளும், அவைகளில் நகைச்சுவைப் பகுதிகளும் ஏற்பட்டுள்ளன. நகைச்சுவையை வளர்ப்பதற்கெனப் பல பத்திரிகைகளும் வெளியிடுகின்றனர்.

நகைச் சுவையைப்பற்றி மேனாட்டினர் பல நூல்களை எழுதியுள்ளனர். தமிழ் மொழியிலும் நகைச் சுவையுள்ள உரை நடை நூல்கள் தோன்றியுள்ளன. வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருகதை என்னும் நூலும் மாயூரம் வேதநாயகம் பிள்ளை இயற்றிய பிரதாப முதலியார் சரித்

திரம் என்னும் நூலும் நகைச்சுவைக் களஞ்சியங்களெனக் கூறலாம். தமிழ்ப் புலவர் பலர் இரு பொருள் பயக்கும் சொற்களைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு நகைச்சுவை பொருந்தப் பேசிப் பலரையும் மகிழச் செய்துள்ளனர். தம் பாடல்களிலும் அவ்வாறே நகைச்சுவை வெளிப்படப் பாடியுள்ளனர். அவற்றுள் சில காண்போம்.

மாம்பழக் கவிராயர் என்னும் புலவர் இராமநாத புரத்து அரசர்மீது பல பாட்டுக்களைப் புகழ்ச்சியாகப் பாடிக் கொண்டு சென்ருர். புலவரின் பாட்டைக் கேட்ட அரசர் பெரிதும் மகிழ்ந்து, ஒரு தங்கத் தட்டில் நிறையப் பணம் வைத்துக் கொடுத்தார். தட்டிலுள்ள பணத்தை எடுத்துக் கொண்டு தட்டைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுவது தான்முறை. ஆனல், புலவரோ, 'நம் வாக்குச் சாமர்த்தியத்தைக் கொண்டு அரசர் மறுக்காமலிருக்கும்படி செய்து, அந்தத் தட்டையும் கைப்பற்ற வேண்டும்', என்று எண்ணி, அரசரைப் பார்த்து, "அரசே, பணத்தட்டு யாருக்கு? புலவருக்கோ, புரவலருக்கோ?" என்று கேட்டார். புலவர் பேச்சில் இரு பொருள் இருப்பதைக் கண்ட அரசர், " நம் போன்ற அரசர்க்குப் பணத் தட்டு வராது. நும் போன்ற புலவர்க்குத்தான் அடிக்கடி பணத் தட்டு வரும்", என்ருர். உடனே புலவர் "அரசே, நீங்கள் சொல்லியபடி புலவர்களுக்குத் தட்டு வருவது இயற்கை என்ருல், இந்தத் தட்டையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்," என்று சொல்லித் தங்கத் தட்டை எடுத்து வைத்துக் கொண்டார். அரசரும் மற்றவர்களும் தட்டுப் போனதைப் பெரிதாக எண்ணுமல், புலவரின் வாக்கு நயத்துக்காக அவரை மிகவும் கொண்டாடினுர்கள்.

கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியில் எட்டையபுர சமஸ்தானத்திலே தலைமைத் தமிழ்ப் புலவராய்க் கடிகை முத்துப் புலவர் என்ற பெரியார் விளங்கினுர். அவர் ஆழ்ந்து அகன்ற கல்விப் பயிற்சியுள்ளவர்; இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தவர்; நயம்படப் பேசுவதில் சமர்த்தர். அவர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையில் இருந்தார். அவரைப் பார்க்கப் புலவர் பலர்

அங்குக் கூடியிருந்தனர். அப்பொழுது அவர் மகள் தவறுதலாக ஓர் அழுக்குத் துணியில் பாலைத் தோய்த்து அவரது வாயிற்பிழிந்தாள். பால் அழுக்கு நாற்றம் வீசியதால், புலவர் பாலை வெளியே துப்பினர். உடனே அவர் மகள் அஃது இறப்புக் குறி என்று எண்ணியவளாய், "அப்பா, உங்களுக்குப் பாலும் கசக்கிறதோ!" என்று கேட்டுக் கண்ணீர் விட்டாள். புலவர் உடனே "பாலும் கசக்கவில்லை; துணியும் கசக்கவில்லை;" என்று கூறினர். தம் மகள் செய்த தவறுதலைப் புலவர் இறக்கும் நேரத்திலும் நகைச்சுவைபட எடுத்துக் கூறியதைக் கேட்ட புலவர் அனைவரும் அவரது மதி நுட்பத்தை வியந்தனர்.

மதுரை மாவட்டத்தில் கானூரென்னும் ஊர் உளது. அதற்கு அடுத்துக் கிழக்கே கல்லூருணி என்னும் ஓர் ஊருமுண்டு. கானூரின் கழிவு நீர் கல்லூருணியில் எப்பொழுதும் பாய்ந்து கொண்டிருக்கும். இவ்விரு ஊர்களிலும் தமிழ்ப் புலமை வாய்ந்த இருவர் இருந்தனர். இவ்விருவருக்கும் மைத்துனர் முறை ஏற்பட்டிருந்தமையால், அடிக்கடி ஓரிடத்தில் சந்தித்து வேடிக்கையாகப் பேசுவர். இங்ஙனமிருக்க ஒரு நாள் கானூரார் கல்லூருணியாரை நோக்கி, "நீர் எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசினலும் எங்கள் கழிவு நீரைக் குடிப்பவர்தாமே?" என்று நகைப்புடன் கேட்டார். அதற்கு கல்லூருணியார் நகைத்து, "நீர் வந்து நம்முடைய காலில் விழுந்தால் எப்படித் தள்ளலாம்" என்று சொன்னர். இதனைக் கேட்டதும் கானூராரும் பக்கத்திலிருந்தவர்களும் நகைத்துக் கல்லூருணியாருடைய வாக்குச் சாதுரியத்திற்காக அவரை மிகவும் கொண்டாடினர்கள்.

சிவகங்கை என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். அதனை ஆண்டு வந்த குறுநில மன்னர் அவையில் வேல்கவிராயர் என்பவர் அவைப் புலவராய் இருந்தார். ஒருநாள் அரசரும், புலவரும் அளவளாவிக் கொண்டிருந்தனர். அவ்வமயம் அரசரைக் காணப் புலிக்குட்டிக் கவிராயர் என்பவர் வந்தார். அவர் அரண்மனை

வாயிற் காவலனை நோக்கி "அரசரிடம் போய்ப் புலி வந்திருக்கிறது என்று சொல்" என்றார். அவனும் அப்படியே சென்று புலவர் கூறியபடியே கூறினன். அரசர் புலிக் குட்டிக் கவிராயரை நன்கு அறிந்தவர். ஆதலின், புன்முறுவலுடன் வாயிற் காவலனை நோக்கி, "இங்கு வேலை இருக்கின்றது. அச்சம் இன்றேல், புலி வரலாம் என்று சொல்" என்று சொல்லி அனுப்பினர். வாயிற் காவலன் இதைக் கூறக் கேட்டதும். புலிக்குட்டிக் கவிராயர் புன்னகையுடன் உட்சென்று அவையை அடைந்தார். அரசர் உட்பட அங்கிருந்தோர் அனைவரும் அவரைக் கண்டு கைகொட்டி நகைத்து வரவேற்றனர்.

ஒரு காலத்தில் இராக்கப்ப பூபதி என்னும் ஒரு கனவான் இருந்தார். அவர் மிகவும் கருமி. ஒரு புலவர் சில பாட்டுக்கள் எழுதிக்கொண்டு அவரிடம் பரிசு பெறச் சென்றார். அப்பொழுது இராக்கப்ப பூபதி, "புலவர் யாவரும் பொய்ப்பொருள் பொருத்தியே பாடுகின்றனர்; நீர் பொய்யில்லாதபடி உண்மைப் பொருளமைத்துப் பாடினல் பரிசு தருவோம்" எனக் கூறினர். உடனே புலவர் பொய்யில்லாதபடி உண்மைப் பொருளுடன் சில செய்யுட்களை இயற்றிப் பாடினர். அச் செய்யுட்கள் பின்வருவன :

'அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன்
வெண்ணெய் என்பது பாலில் விளைவது;
திண்ணை என்பது தெருவில் உயர்ந்தது;
கண்ணன் என்பவன் கண் இரண் டுள்ளவன்.
'பாக்காவது கமுகின்பழம்; பருப்பாவது துவரை;
நாற்காதமும் முக்காதமும் நடந்தால் எழுகாதம்;
மேற்கேநின்று பார்த்தாலது கிழக்காவது தெரியும்;
ராக்கா உண்மை சொன்னேனென்னை ரட்சித்திடு நீயே'.

இப்பாடல்களைக் கேட்டதும் பூபதி பெரிதும் மகிழ்ந்து, "இப்பாடல்களில் பொய்யிருப்பதாக யாராவது கூறமுடியுமா? இவைகளே சிறந்த பாடல்கள்!" என்று பாராட்டி, அப்புலவரைத் தமது சமூக வித்துவானுகவும் நியமித்தனர். நகைச்சுவையால் ஏற்பட்ட பயனன்றோ இது !

வினாக்கள்

1. 'நகைச்சுவை' என்பதன் பொருள் யாது?

2. நகைச்சுவையின் தன்மை யாது?

3. வீரமாமுனிவர் என்பவர் யார்? அவர் இயற்றியுள்ள நகைச்சுவை நூல் எது?

4. 'தட்டு' - இரு பொருள் தருக.

5. கடிகை முத்துப்புலவர் நகைச்சுவை படப் பேசுபவர் என்பதற்கு ஒரு சான்று தருக.

6. சிவகங்கை மன்னர் நகைச்சுவை படக் கூறியதென்ன?

7. இராக்கப்ப பூபதியிடம் வந்த புலவர் உண்மைப் பொருளுடன் பாடிய பாடல்கள் யாவை?

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்துப் பழகுக:—
   கல்விப் பயிற்சி, நயம்பட, நகைச்சுவை, சாதுரியம், தமிழ்ப்புலமை.

2. பிரித்து எழுதுக:—
   நாட்டறிஞர், வானொலி, தமிழ்ப்புலவர், நூற்றாண்டு.

---

3. வீரத்தாய்மார்

ஒரு நாட்டின் அரிய செல்வம் அந்நாட்டு மக்களே. நமது பழந் தமிழ் நாட்டு மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். வீரர்கள் விளங்கும் நாட்டில் வீரப் பெண்மணிகளும் விளங்குவதைக் காணலாம். பண்டைத் தமிழகத்தில் வீரத்தாய்மார் பலர் இருந்தனர். பண்டைக் கால வீரத் தாய்மார்கள் தங்கள் மக்களை மனஉறுதியும் உடலுறுதியும் பெற்று விளங்குமாறு இளமை தொட்டு பயிற்றி வந்தார்கள். அவர்களாலேயே நம் தமிழ் நாடு வீரத்திற்கு விளை நிலனாக விளங்கியது. அவ்வீரத் தாய்மாரின் வியத்தகு செயல்களில் சில காண்போம்.

பிள்ளையின் கடமை பற்றிக் கூறவந்த ஒரு வீரத் தமிழ்த் தாய், "மகனைப் பெற்று வளர்ப்பது எனது கடன்; அவனைத் தன் குலத்திற்குரிய கல்வி ஒழுக்கங்களாகிய நற்

பண்புடையவனுக்குதல் தந்தையின் கடன்; நல்ல ஒழுக்கத்தை அளித்தல் அரசன் கடமை; வேலினைக் கூர்மையாக வடித்துக் கொடுப்பது கொல்லன் கடமை; ஒளி பொருந்திய வாளினால் போரில் வீரர்களை அழித்து, எதிர்த்த ஆண் யானைகளை வெட்டி வீழ்த்தி வெற்றி வீரனாக மீள்வது என் மகனது கடமை'' என்று கூறுகிறாள். நாட்டைக் காப்பது தன் மகன் கடமை என்பதை வற்புறுத்திக் கூறுவதிலிருந்து அவளது நாட்டுப் பற்றும் வீர உணர்வும் புலனாகின்றனவன்றோ.

தமிழ் நாட்டிலே பண்டை நாளில் மறக்குடி மக்கள் பலர் வாழ்ந்தனர். அவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்; போர் என்றால் பேருவகை கொண்டு பகைவரை அழிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அம்மறக்குடி மக்களை அக்கால மன்னர்கள் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வந்தார்கள். குடிமக்களும் வேந்தரைத் தம் உயிருக்குயிராக நேசித்து வந்தார்கள். ஒரு சமயம் பாண்டிய மன்னனை எதிர்த்துப் பகையரசன் ஒருவன் திடீரெனப் படையெடுத்து வந்தான். அச் செய்தி காட்டுத் தீப்போல் எங்கும் பரவியது. போர் முரசு முழங்கிற்று. போரை எதிர் நோக்கி இருந்த மறக்குடி மக்கள் ஒருங்கு திரண்டு போருக்கு எழுந்தார்கள். அப்பொழுது முதியவள் ஒருத்தி இச் செய்தியைக் கேள்விப்பட்டாள். அவள் உள்ளம் கனன்றது. தனக்குத் துணையாயுள்ள தன் ஒரே மைந்தனை நோக்கினாள்; "போர் ஏற்பட்டிருக்கிறது; போர்க் களம் செல்லப் புறப்படு" என்று கட்டளையிடுவதுபோல இருந்தது அவள் பார்வை. போர்க்களம் செல்லத் துடிதுடித்துக் கொண்டிருந்தான் அவ் வாலிபன்; ஆனால், தாய் தனிமையில் வருந்துவாளே என்று தயங்கினான். அன்னையின் பார்வையைக் கண்டதும் அத்தயக்கம் பறந்தது. அவன் தன் அருமைத் தாயின் வாழ்த்துரையுடன் போர்க்களம் புகுந்தான். மறக்குடி வீரத்துடன் எதிர்த்துப் பொருது பகைவர்களை வென்றார்கள். போரில் சிலர் மாண்டனர். அவ்வாறு மாண்டவர்களில் கிழவியின் மைந்தனும் ஒருவன். அவன்

பகைவர் படையுள் புகுந்து போர் செய்யுங்கால் பகைவன் ஒருவன் தன் அம்பால் அவன் மார்பைப் பிளந்தான். வீரன் புறங்கொடாது புன்முறுவலுடன் மண்மிசை வீழ்ந் திறந்தான்.

இவ்வுண்மையை அறியாத சிலர், அக்கிழவியிடம் சென்று, "உன் மைந்தன் போர்க்களத்தில் பகைவர் முன் நிற்கமாட்டாது ஓடினன். அப்பொழுது முதுகில் அம் பேற்றுப் புண்பட்டு விழுந்து மடிந்தான்" என்று கூறினர். இதனைக் கேட்ட கிழவி, "வீரமறக்குடி இம்மகனால் மாசுற்றதே!" என மயங்கினள். அவள் வெகுண்டாள். 'வீரம்மிக்க மறக்குடியில் தோன்றிய என் மைந்தன் போருக் கஞ்சி புறங்காட்டி ஓடியது உண்மையாயின், அவன் குழவி யாயிருந்து பால் அருந்திய எனது மார்பை அறுத்தெறி வேன்!" எனச் சூளுரை பகர்ந்து, கையில் ஒரு வாளுடன் போர்க்களம் புகுந்தாள்.

போர்க்களம் பிணக்காடாக விளங்கியது. கிழவி அவண் கிடந்த பிணக்குவியலைத் தன் கையிலிருந்த வாளால் புரட்டிப் பார்த்தாள்; பிணங்களிடையே உயிர் நீத்துக்கிடந்த தன் மைந்தன் உடலைக் கண்டாள்; புரட்டிப் பார்த்தாள். அவன் மார்பிலும் முகத்திலும் எண்ணற்ற காயங்கள் இருந்தன. அவள் சினம் அடங்கிற்று. தன் மைந்தனது வீரத்தைக் கண்டு வியந்தாள்; கையில் பிடித் திருந்த வாளை எறிந்தாள்; மகன் பிணத்தை அன்புடன் தழுவித் தான் அவனைப் பெற்ற காலத்திலும் பெரிது உவந் தாள்; பின்னர் மைந்தன் பிரிவுத் துயரால் தாக்குண்டு அங்கேயே தன் இன்னுயிரையும் நீத்தாள்.

ஒரு முறை சோழ நாட்டில் போர் முரசு முழங்கியது. அதனைக் கேட்ட ஒரு வீரமகளின் தமையன் வீராவேசத்து டன் போர்க்களம் புகுந்தான். எதிர்த்து வந்தோரை யெல் லாம் எமனுலகுக்கு அனுப்பினன். தன்னைத் தாக்க வந்த களிற்றைத் தனது வாளால் இரு கூருக்கினன். இறுதியில் தானும் இறந்தான். அன்றைய போர் முடிவுற்றது. அடுத்த நாள் போரில் அவள் கணவன் அரியேறென

அமர்க்களம் புக்கு எதிரிப்படைகளைத் தடுத்து நிறுத்தி ஆண்டே மாண்டான். மீண்டும் போர் முரசின் ஒலி அவ் வீர மகளின் காதிற்கெட்டியது. அவள் முன்னிரண்டு நாட்களிலும் தன் தமையனையும் உயிர்த்துணைவனும் கண வனையும் இழந்திருந்தும் ஒரு சிறிதும் மனத்தளர்ச்சி யின்றித் தன் ஒரே மைந்தனை அன்புடன் அழைத்தாள்; வேலினைக் கையில் கொடுத்தாள், விரிந்து கிடந்த அவ னது தலைமயிரை எண்ணெய் தடவிச் சீவி முடித்தாள், புதிய வெண்மையான ஆடையை அவன் இடுப்பில் கட்டி னள், பின்னர் அவனை நோக்கி, ' அருமை மகனே, உன் தந்தையைப் போலவே அஞ்சா நெஞ்சுடன் நீ போர்க் களம் சென்று பகைவர்களை வென்று வருக! ' என வாழ்த்தி அனுப்பினள். அவள் வீரத்தை என்னென்பது !

ஒருவன் அவ்வீரத் தாயை நோக்கி, 'உன் மைந்தன் எங்கே? ' என்று கேட்டதற்கு அவள், என் மகன் கையில் வாளேந்திப் போர்க்களஞ் சென்றான். உலகில் மக்களுள் பலர் மூப்பாலும் பிணியாலும் மடிகின்றனர். என் மைந்தன் அவ்வாறு இறக்க வில்லை. அவன் செருக்களத்தில் பகை வருடன் அஞ்சாது பொருது வீர மரணம் அடைந்தான், என்று பெரு மிதத்துடன் கூறினாள்! இத்தகைய வீர நிலையமாய் விளங்கியது அக்காலத் தமிழகம் என்பதை எண்ணுங்கால் நமக்கு எல்லையில்லாப் பெருமிதம் தோன்று கிறதல்லவா?

'வேதம் நிறைந்த தமிழ்நாடு — உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு.'

என்பது பாரதியார் வாக்கு.

வினாக்கள்

1. பண்டைக் காலப் பெண்டிர் இயல்புகள் யாவை?

2. எவ்வெவர் என்னென்ன கடமைகளை மேற்கொள்ள வேண்டும்?

3. மறக்குடி மக்கள் எத்தகையினர்?

4. போர் ஏற்பட்டதை அறிந்ததும் வீரத்தாய் யாது செய்தாள்.

5. வீரத்தாய் கூறிய சூளுரை யாது?

6. வீரத்தாய் தன் மகனை எவ்வாறு போருக்கு அனுப்பினாள்.

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக :—
மண்மிசை, காட்டுத் தீ, ஒருங்குதிரண்டு, மனத்தளர்ச்சி.

2. பிரித்து எழுதுக:—
உடலுறுதி, சிற்றூர், அக்காலம், இன்னுயிர்.

4. மாமல்லபுரத்துச் சிற்பங்கள்

சங்கீதம், சித்திரம், சிற்பம் ஆகிய மூன்றும் அழகையும் இன்பத்தையும் ஊட்டும் அருங்கலைகள். இதனால், இம் மூன்றையும் அழகுக் கலை என்பர். சிற்பக்கலை மிகப் பழைமையானது. சிற்பம் என்பது மண், கல், உலோகம், தந்தம், எலும்பு முதலிய பொருள்களால் கண்ணால் கண்டவற்றையும் கருத்தால் கருதியவற்றையும் உருவப்படுத்திக் காட்டுவதேயாகும். இக்கலை தனித்த உருவிலும் உண்டு; கோயில் அரண்மனை முதலிய கட்டடங்களில் சேர்ந்து விளங்குதலும் உண்டு. பண்டைச் சிற்பத் திறமையோடு அமைந்த கோயில்களும் மாளிகைகளும், அழகும் உயர்வும் உடையனவாய் எக்காலத்தும் யாவராலும் பாராட்டப்படும் தோற்றத்துடன் விளங்குகின்றன.

சிற்பக் கலையைப் பேணி வளர்த்தவர்கள் தமிழ் மன்னர்களும், பல்லவர்களுமேயாவார்கள். தென்னாட்டில் முதன்முதல் கோவில்களைக் கல்லால் கட்டும் வழக்கம் பல்லவ அரசர் காலத்தில் தொடங்கியது. அவர்கள் வெளி நாட்டுச் சிற்பிகளைக் கொண்டும், உள்நாட்டுச் சிற்பிகளைக் கொண்டும் மிக அழகிய கற்கோயில்களைக் கட்டினார்கள். அவர்கள் குன்றுகளை வெட்டி, அவற்றுள் தூண்களும் சுவர்களும் அமைத்ததுமன்றிக் குடைந்தெடுத்துக் கோயில்களும் உண்டாக்கினார்கள். அச்சிற்பிகள் அமைத்த சிற்பங்

களின் சிறப்புக்களைத் தஞ்சை, கங்கைகொண்ட சோழ புரம், அஜந்தா, எல்லோரா, மதுரை, மாமல்லபுரம் என்னும் இடங்களில் காணலாம். இவற்றுள் அழகிய நுட்ப வேலைப் பாடுகளுடன் விளங்குபவை மாமல்லபுரத்துச் சிற்பங்களே யாகும்.

மாமல்லபுரம் சென்னைப்பட்டினத்திற்குத் தெற்கே சுமார் நாற்பத்தைந்து கிலோ மீட்டர் தூரத்தில் கடற் கரையில் உள்ளது. அதற்கு இக்காலத்தில் மகாபலிபுரம் என்னும் பெயர் வழங்குகிறது. அது கி. பி. ஏழாம் நூற் ருண்டில் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ அரசர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் சிறந்த துறை முகமாய் விளங்கியது. முதல் நரசிம்ம வர்மனும் மாமல்லன் என்னும் மறுபெயருடையவனுமான பல்லவனுல் அங்குள்ள அரிய சிற்பங்கள் அமைக்கப்பெற்றன. அதனுல், அவன் பெயராலேயே மாமல்லபுரம் என்ற பெயர் அவ்வூருக்கு ஏற்பட்டது.

'பஞ்ச பாண்டவர் இரதங்கள்' என வழங்கும் ஐந்து கற்கோயில்கள் அங்கு உள்ளன. உண்மையில் அவை தேர் கள் அல்ல. அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒரே கற்பாறையில் குடைந்து எடுக்கப்பட்ட கோயில் ஆகும்.



மாமல்லபுரக கல் இரதங்கள்

அவற்றை ஒற்றைக்கல் கோயில் என்று கூறுவது சாலப் பொருந்தும். இக்கோயில்கள் ஒவ்வொன்றிலும் பாண்டவ ரில் ஒவ்வொருவருடைய உருவச்சிலையும் தனித்தனியே

செதுக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கோயிலில் மிகப் பெரியது. தருமராஜ ரதம் என்பதே. அது மூன்று அடுக்கு களை உடையதாய்ச் சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் விளங்குகிறது. இரண்டாவது அடுக்கின் நடுவில் கோயி லின் கர்ப்பக் கிருகம் மாடப்புரையைப் போலச் சிறிதாக வெட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அம்மாடப் புரையினடி யில் குழந்தை முருகனை மடியில் வைத்துள்ள பார்வதியுடன் கூடிய சிவ பெருமானது உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அதன் சித்திர சிற்ப வேலைப்பாடுகள் மிக அழகாய் அமைத் துள்ளன. அதைச் செய்த சிற்பி மிகவும் கைத்திறமை வாய்ந்தவனுயிருக்க வேண்டும்.

தருமபுத்திரன் இரதத்தை அடுத்துள்ள பீமசேனன் இரதத்தின் முன்னும் பின்னுமாக மண்டபங்கள் குடையப் பட்டிருக்கின்றன. பீமசேனன் இரதத்தை அடுத்து அர்ச்சு னன் இரதமிருக்கிறது. அர்ச்சுனன் இரதத்திற்கும் திரௌ பதி இரதத்திற்கும் முன் ஒரு மண்டபம் குடையப்பட்டுள் ளது. அதன் முன்புறம் யானையும் சிங்கமும் பாறைகளில்

மாமல்லபுரத்துச் சிற்பங்கள்

தனித்தனியே செதுக்கப்பட்டுள்ளன. திரௌபதி இரதம் எனப்படுவது ஒரு துர்க்கை கோயிலாகும். அஃது ஒரு கூரை வீட்டைப்போலக் கல்லினுல் செதுக்கப்பட்டுள்ளது.

அதன் அருகிலுள்ள நகுல சகாதேவர் இரதம் அரை குறை வேலேயுடன் காணப்படுகிறது.

இரதக் கோயில்களின் சிற்ப வேலேப்பாடுகள், ஏழாம் நூற்ருண்டில் இந்தியர் சிற்பத்திறனில் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருந்தனர் என்பதை விளக்குகின்றன.

திரௌபதி இரதத்தை அடுத்துப் 'பகீரதன் தவம்' என்னும் அழகிய சிற்பம் காணப்படுகிறது. அது சுமார் இருபத்தாறு மீட்டர் நீளமும் எட்டு மீட்டர் உயரமும் உள்ளது. அச் சிற்பத்தில் சுமார் நூற்றைம்பதுக்கு அதிகமான உருவங்கள் காணப்படுகின்றன. அதன் இரு புறங்களும் பெரிய பாறைகளால் மூடப்பட்டு, அவற்றின் நடுவே தோன்றும் ஒரு பெரிய பிளவும், அப்பிளவில் நாகர் நாக கன்னியர்களின் சிலேகளும் காணப்படுதலே அச் சிற்பத்தின் முக்கியப் பகுதியாகும். இரு பெரும் பாறைகளுக்கும் நடுவில் தோன்றும் அகன்ற பிளவு, இயற்கையாகவே மழைநீர் பாயும் ஓர் அருவியின் வழியாகும். கங்கை வானத்திலிருந்து இறங்குவதை அது குறிக்கின்றது. அப்பிளவுக்கு நேராக வடபுறத்தில் ஒரு யானே தன் துதிக்கையை நீட்டிக் கொண்டிருப்பது போன்றும், அதன் பின்புறம் மற்ருெரு யானே நிற்பது போன்றும் அமைந்துள்ளன.

'மகிஷாசுர மண்டபம்' என்பது ஒன்று. அதில் பலவித ஆயுதங்களே ஏந்திய எட்டுக் கைகளுடன் துர்க்காதேவி அரிமா மீதமர்ந்து மகிஷாசுரனேடு போர் செய்கின்ற காட்சியினேக் காட்டும் அரிய வேலேப்பாடுள்ள சிற்பம் ஒன்று அமைந்துள்ளது. அதற்கு எதிரில் திருமாலின் 'சேஷ சயனம்' என்னும் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அது மிக நுட்பமான சிற்ப வேலேப்பாடுடையது. அதில் செதுக்கப் பட்டுள்ள திருமாலின் உருவம் அக்காலத்துச் சிற்பியின் சிறப்பை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

'கிருஷ்ண மண்டபம்' என்பது ஒரு பெரிய குகைக் கோயில். கிருஷ்ணன் பெரிய மலேயைத் தூக்கி, ஆயர்களே யும், ஆடு மாடுகளேயும் பாதுகாத்ததை அச் சிற்பம் விளக்கிக் காட்டுகிறது. ஆண், பெண், குழந்தை, ஆடு, மாடு,

கன்று முதலிய உருவங்கள் அழகிய நுட்பமான வேலைப் பாடுகளுடன் விளங்குகின்றன.

மாமல்லபுரத்துக்குச் செல்லுகிறவர்கள் கடைசியாகப் பார்க்க வேண்டிய அழகிய காட்சி, கடற்கரையிலுள்ள கோயில். அதனைக் 'கரைக் கோயில்' என்று வழங்குவர். அது மிகவும் அழகான கோயில். அது கடற்கரை ஓரத்தி லிருப்பதால், கடல் அலைகள் வந்து மோதிச் சத்தம் செய்து கொண்டிருக்கின்றன. அங்குள்ள சிற்பங்களும் கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்தவை. ஒரு காலத்தில் சிறந்த துறைமுகமாய் விளங்கிய மாமல்லபுரம், பிற்காலத்தில் கடல் கோளால் அழிவுற்றது. ஆதலின், அக்கோயில் கடற் கரையில் காணப்படுகிறது.

மாமல்லபுரச் சிற்பங்கள் நம் நாட்டின் மிகப் பழை மையான நாகரிகச் சின்னங்களாய் விளங்குகின்றன. பல நூற்றாண்டுகளாகியும் அழியாச் செல்வமாய் விளங்கும் அவைகளைக் கண்டு இந்திய மக்களாகிய நாம் மகிழ்ச்சி யடைதல் வேண்டும். அத்தகைய சிற்பங்களைப் போற்று வதும் நமது கடமையாகும்.

வினாக்கள்

1. அழகுக் கலைகள் யாவை?
2. சிற்பக்கலை என்பது என்ன?
3. பல்லவர் எவ்விதம் சிற்பக்கலையை வளர்த்தனர்?
4. தருமபுத்திரர் இரதத்தைப் பற்றி நீ அறிவதென்ன?
5. குறிப்பு எழுது :— பஞ்சபாண்டவர் இரதங்கள்.
6. மகிஷாசுர மண்டபம், கிருஷ்ண மண்டபம் — இவற்றில் காணப்படும் காட்சிகள் யாவை?
7. மாமல்லபுரத்துக் கடற்கரை கோயிலைப் பற்றி நீ அறிவ தென்ன?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகு :—

   கைத்திறமை, கடல்கோள், நுட்பவேலைப்பாடு, முன்னேற்றம்.

2. பிரித்து எழுதுக :—

   தென்னாடு, கற்கோயில், தமிழகம், கடலலை.

5. கண்ணகி வழக்குரைத்தது

முற்காலத் தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடென மூன்று பெரும் பிரிவுகளை உடையதாய் விளங்கிற்று. அவற்றுள் சோழநாடு நீர் வளமும் நில வளமும் நிறைந்தது. அதன் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம். அவ்வூரில் கோவலன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் பொற்பிற் சிறந்த கற்புக்கரசி கண்ணகியை மணந்து மகிழ்வுடன் வாழ்ந்தான்.

ஒரு நாள் கோவலன் ஆடல் பாடல்களில் வல்ல கணிகை மாதவியைக் கண்டான். தன் வயமிழந்து அவள் வயப்பட்டு தனது செல்வமனைத்தையும் அவளுக்கே செலவிட்டான். நாளடைவில் அவனது செல்வம் குறைந்து போயிற்று. தீவினை காரணமாக மாதவியிடம் கோபித்துக் கொண்டு, அவளை விட்டுப்பிரிந்து தன் வீட்டை அடைந்தான். தன் செய்கைக்காகக் கண்ணகியிடம் வருத்தம் தெரிவித்தான்.

'வாழ்ந்திருந்த ஊரில் இனித் தாழ்ந்திருக்கலாகாது' என்று எண்ணிக் கோவலன் தன் மனைவியின் காற்சிலம்பை விற்க மதுரைக்குப் புறப்பட்டான். கண்ணகியும் கோவலனுடன் சென்றாள். இருவரும் மதுரைமா நகரை அடைந்தனர். கண்ணகியை மாதரி என்னும் ஒரு ஆயர் குல மங்கையின் வீட்டில் விட்டுவிட்டு கோவலன் சிலம்பை விற்க மதுரைத் தெரு வழியாகச் சென்றான்; அவன் எதிரே ஒரு பொற்கொல்லன் வரச் சிலம்பை அவனிடம் காட்டினான். பொற்கொல்லன் பாண்டிய மன்னனது அரண்மனையிலிருந்து முன்பே ஒரு சிலம்பைத் திருடியவன். ஆகவே, தான் தப்புவதற்காக அவன் 'கோவலனே சிலம்பைத் திருடியவன்' என்று பாண்டியன் நெடுஞ்செழியனிடம் கூறினான். பாண்டியனும் ஆராயாது கோவலனைக் கொலை செய்யும்படி உத்தரவிட்டான்.

கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி மயங்கி விழுந்தாள்; கோ வென்றலறிக் கொலைக்களம்

சென்றுள்; இறந்து கிடந்த கணவனது உடலைக் கண்டாள்; பின்னர் 'இவ்வநியாயம் செய்த இவ்வூர் மன்னனைக் காண்பேன்!' என்று கோபாவேசத்துடன் அரண்மனை வாயிலை அடைந்தாள்.

இடம்:— பாண்டியன் அரண்மனை வாயில்

காலம்:— பிற்பகல்

உறுப்பினர்:— கண்ணகி, வாயிற் காவலன், பாண்டியன், கோப்பெருந்தேவி.

கண்ணகி:— வாயிலோயே வாயிலோயே அறிவுகெட்ட அரசனது அரண்மனை வாயிலைக் காப்பவனே! அரச முறை தவறிய மன்னனது வாயிற் காவலனே!

காவலன்:— அம்மையே, நீங்கள் யார்? உமக்கு என்ன வேண்டும்?

கண்ணகி:— 'கையில் சிலம்பேந்திய ஒருத்தி – கணவனை இழந்தவள் – கடுந்துயரால் கலங்குபவள் – இங்கு வந்திருக்கிறுள்' என்று உன் அரசனுக்கு அறிவிப்பாய்; காலந் தாழ்த்தாதே! உடனே செல்!

காவலன்:— அம்மணி, சற்றுப்பொறும்; இதோ தெரிவித்து வருகிறேன். (காவலன் நடுங்கிக்கொண்டு உள்ளே சென்று பாண்டியனை வணங்கி நிற்கிறுன்).

பாண்டியன்:— வாயிலோய், ஏன் இவ்வித நடுக்கம்? ஏதேனும் செய்தி உண்டோ?

காவலன்:— வேந்தரே, வாழ்க! நமது அரண்மனை வாயிலில் பெருகிய சினத்துடன் ஒரு பெண் வந்து நிற்கின்றுள். அவளைக் கண்டார், 'மகிடனைக் கொன்ற காளியோ! சத்த மாதர்களில் இளையாளான துர்க்கையோ!' என்று ஐயுறுவர். அவள் கூந்தல் அவிழ்ந்து கிடக்கின்றது; கண்களினின்று துயரக்கண்ணீர் பெருக்கெடுத்தோடுகின்றது; கையில் சிலம்பு ஒன்று வைத்திருக்கின்றுள்; முகத்தில் சினம் பொங்குகின்றது; கணவனைப் பறிகொடுத்தவள் நம் கடை வாயிலில் வந்துள்ளாள்; உங்களைக் காண விரும்புகிறுள்.

பாண்டியன்:— அப்படியா! உடனே அவளை இங்கு அழைத்து வா.

(வாயிற் காவலன் விரைந்து சென்று கண்ணகியை அழைத்து வருகிறான்)

பாண்டியன்:— நீர் வடியும் கண்களையுடைய பெண்ணே, நீ யார்? நீ இங்கு வந்த காரணமென்ன?

கண்ணகி:- ஆராய்ந்து உண்மையை அறியாத மன்னனே, நான் யார் என்று கேட்கின்றாய்? சொல்லுகிறேன் கேள்; ஒரு சிறு புறாவின் உயிரைக் காக்கும் பொருட்டுத் தன் உடம்பிலுள்ள தசையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியினால் ஆளப் பட்டதும், தன் மகன் கன்றைக் கொன்றான் என்று ஒரு பசு வந்து ஆராய்ச்சி

மணியை அடிக்க, அதன் பொருட்டுத் தன் மகனைத் தேர்க் காலில் இட்டுக் கொன்ற மனுச்சோழன் ஆண்டதுமான காவிரிப்பூம்பட்டினம் எனது ஊர். அப் பட்டினத்திலுள்ள மாசாத்துவான் எனும் பெருங்குடி வணிகரின் குமாரரும், உன்னால் முறையின்றிக் கொல் லப்பட்டவருமாகிய கோவலர் என்பவருடைய மனைவி நான்; என் பெயர் கண்ணகி.

பாண்டியன்:— பெண்ணே, ஆத்திரப் படேல்! நீ ஆத்திரத்தால் அளவிற்கு மீறிப் பேசுகிருய்! கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலாகுமா? கொடியவரைக்கொல்லுதல் அரசனது கடமையன்ருே?

கண்ணகி:— நன்னெறி அறியா மன்ன! என் கணவர் கள்வர் என்பதனை எங்ஙனம் அறிந்தாய்? தீர விசாரித்தாயா? தீர விசாரியாது செய்த தண்டனையை எந்த நீதி வேந்தர் ஏற்றுக் கொள்வர்? என் கணவர் கள்வர் அல்லர் என்று நான் மெய்ப்பித்துவிடின், அவர் உயிரை மீட்டுத்தர உன்னுல் இயலுமா?

பாண்டியன்:— என் மனைவியின் சிலம்பு உன் கணவன் கையிலிருந்தது. அதுவே அவன் கள்வன் என்பதற்குப் போதுமான சான்ருகும். குற்றத்திற்கேற்ற தண்டனை விதிப்பதை எந்த வேந்தரும் மறுக்கமாட்டார். நீ கணவனை இழந்துள்ள கலக்கத்தால் முறை தவறி உரையாடுகின்ருய்.

கண்ணகி :— கொடுங்கோல் மன்னு! நான் முறை தவறி ஒன்றுங் கூறவில்லை. அச்சிலம்பை நீ நன்கு பார்த்தாயா? என் காற் சிலம்பு அது. அதற்குள் மாணிக்கப் பரல்கள் இடப்பட்டிருக்கின்றன.

பாண்டியன் :— இளங்கொடியே, நன்மொழி கூறினுய்! என் பட்டத்தரசியின் காற்சிலம்பினுள் முத்துப் பரல்கள் இடப்பட்டிருக்கின்றன. நீயே பார்!

(பாண்டியன் கோவலனிடமிருந்து கொண்டுவந்த சிலம்பைப் பெற்றுக் கண்ணகியிடம் கொடுத்து)

இதோ இருக்கிறது சிலம்பு.

(கண்ணகி அதைக் கையில் வாங்குகிருள்)

கண்ணகி :— (கோபத்துடன் சிலம்பை ஓங்கி அடித்து உடைக்கிருள். அதனுள்ளிருந்து மாணிக்கக் கற்கள் சிதறுகின்றன. ஒரு மாணிக்கப்பரல் மன்னன் முகத்தில் தெறிக்கின்றது) இப்பொழுது என்ன சொல்லுகிருய்? என் கணவர் கள்வரா?

பாண்டியன் :— பொற்கொல்லன் சொற்கேட்டுக் கோவலனைக் கொலை புரிந்த யானோ அரசன்! யானே கள்வன்! என்றும் வளையாத என் செங்கோல் வளைந்தது! பாண்டிய மரபு என்னால் கெட்டுவிட்டது! கொலை பாதகனாகிய நான் இன்னும் உயிரோடு இருத்தல் தகுமா! இனி என் ஆயுள் கெடுவதாக!

(மன்னன் அரியணைமீதே மயங்கி வீழ்ந்து உயிர் துறக்கிறான்.)

கோப்பெருந்தேவி :— (அழுகையுடன்) கணவனை இழந்த காரிகையே, உன்னை நான் எங்ஙனம் தேற்றுவேன்! (கண்ணகியை வணங்கிக் கீழே விழுகிறாள். அவளது ஆவியும் நீங்குகிறது.)

பின்னர்க் கண்ணகி அரசவையை விட்டு வெளியேறி, 'இவ்வூரை எரியுண்பதாக!' என்று சபித்தாள். மதுரை தீப்பற்றி எரிந்து அழிந்தது. அதன் பின்னர்க் கண்ணகி வைகைக்கரை வழியே நடந்து சென்று, மலைநாடு சேர்ந்தாள்; அங்கு ஒரு குன்றின்மீது ஏறி நின்று, இவ்வுலகை நீத்து விண்ணுலகடைந்தாள். இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் கேள்வியுற்ற சேர நாட்டரசனாகிய செங்குட்டுவன், கண்ணகிக்காக ஒரு கோயில் கட்டி, இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் அதனை நீராட்டிக் கண்ணகியின் உருவத்தை அதில் பொறித்துக் கோயிலில் அமைத்துத் திருவிழாக் கொண்டாடினான்.

வினாக்கள்

1. கண்ணகி என்பாள் யார்?
2. கண்ணகி மதுரைக்கு வரக் காரணமென்ன?
3. அவளுக்குற்ற துயரம் யாது?
4. வாயற் காவலனிடம் கண்ணகி கூறியதென்ன?
5. காவிரிப்பூம்பட்டின வேந்தர் எத்தகையர்?
6. கண்ணகி, மன்னனுக்கு உண்மையை எங்ஙனம் புலப்படுத்தினாள்?
7. பாண்டியன் மான உணர்ச்சியுடையவன் என்பதை எதனால் அறியலாம்?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக:—

கடுந்துயர், மாணிக்கப்பரல், மெய்ப்பிக்க, இளங்கொடி.

2. பிரித்து எழுதுக:—

நன்னெறி, பட்டத்தரசி, விண்ணுலகு, கல்லெடுத்து.

---

6. உண்டி கொடுத்த உதியன்

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்று தொல்காப்பியர் கூறியபடி, சேர சோழ பாண்டியர்கள் மூவரும் தொன்று தொட்டுத் தென்னாட்டை ஆண்டு வந்த தமிழ் வேந்தர்கள் என்பதும், தமிழகத்தின் பண்டைப் பெருமையைச் சிறப்பித்து வந்தவர்களென்பதும் யாவரும் அறிந்தனவே. அவர்களுள் முதலில் வைத்துச் சொல்லப்படும் பெருமை வாய்ந்தவர் சேரரே யாவர். பழந்தமிழ் நூல்களாகிய பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய சங்க நூல்கள் சேரர்களுடைய வீரம், நியாயம், தியாகம், ஈகை, வல்லமை, பொறுமை, தண்ணளி, தெய்வ பக்தி முதலியவற்றினை விளங்கக் கூறுகின்றன. சேர வமிசம் மிகப் புராதனமானதென்பது வான்மீகி முனிவர் கேரள தேசத்தையும் அதன் துறைமுகப் பட்டினமான முசிறியையும் பற்றித் தம் இதிகாசத்தில் குறிப்பிடுவதால் தெரிகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சேர அரசர்களில் உதியன் சேரலாதன் என்பவன் ஒருவன். இவன் சேர மன்னர்களில் மிகப் பழைமையானவன்; சிந்தனை மிக்கவன்; அறிவு ஆற்றல்களில் மேம்பட்டவன்; தன்னுயிர் போல் மன்னுயிரை மதித்து ஆட்சி புரிந்தவன். இவன் இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்று உரையாது அவர்கள் வேண்டுமளவும் கொடுத்து உதவியவன்; பகைவருக்கும்

அருள் செய்யும் பண்பினன்; தன்னைப் போற்றுதாரைப் பொறுக்கும் திறத்தில் பூமிக்கு ஒப்பானவன். இவன் காலத்தில் அவன் புலவர்பாடும் புகழமைந்தவனாய் அற வோர் போற்றும் அறநெறி வழுவாதவனாய், ஆன்றோர் புகழும் அன்பு வாய்ந்தவனாய் விளங்கினான்.

இத்தகைய சிறந்த வீரன், பசித்தோர்க்குச் சோறிடு தலையே சிறந்த அறமெனக் கருதினான்; ஆகையால், தன் நாட்டின் பலவிடங்களிலும் சோறிடும் அறச்சாலைகளை ஏற் படுத்தினான். குழுமூர் என்னும் ஊரில் இவன் ஏற்படுத்திய அறச்சாலை பிரசித்தி பெற்று விளங்கியது. அது பல்லா யிரக் கணக்கான ஏழை மக்களின் வயிற்றுப் பசியைத் தணித்துக் கொண்டிருந்தது. எவர் எந்த நேரத்தில் வந்து உணவு கேட்டாலும் அவ்வறச்சாலையிலுள்ள சமையற்கா ரர்கள் இல்லையென்னாமல் உணவளித்து வந்தனர். ஆகவே, பல நாட்டிலிருந்து ஏழை மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வயிறார உண்டு உதியன் சேரலாதனை வாயார வாழ்த்திச் சென்றனர்.

அக்காலத்தில் தமிழ்நாட்டிலமைந்த முரஞ்சியூர் என்னும் சிற்றூரில் நாகராயர் என்னும் பெயர் பெற்ற ஒரு புலவர் சிறப்புற்று விளங்கினார். புலவர்களிலே சிறந்தவர் களுக்கு முடியணிந்து கொள்ளும் சிறப்பை வழங்குவார்கள். உதியன் சேரலாதன் நாகராயருக்கு அத்தகைய சிறப்பை வழங்கினான். ஆதலின் அவரை முரஞ்சியூர் முடிநாகராயர் என்று தமிழ்நாட்டு மக்கள் அழைத்து வந்தனர். புலவரும் வேந்தனும் உயிரும் உடலும் போல் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு உதியன் சேரன் அறச்செயலில் ஈடுபட்டு வருங்காலத்தில் வட நாட்டை ஆண்ட அரசர்கள் பலர். அவர்களுள் சிறந்தோர் பாண்டவர்களும் கௌரவர்களும் ஆவர். பாண்டவர் இந்திரப்பிரத்தத்திலும், கௌரவர்கள் அத்தினபுரியிலும் வீற்றிருந்து அரசாட்சி புரிந்தனர். பாண் டவர்கள் புகழைக் கண்டு கௌரவர் பொறாமை கொண்ட னர். அதன் பயனாகப் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக் கும் குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில் போர் ஏற்பட்டது.

TB
O-,6(8)
145947

போர் அறப்போராகச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடை பெற்றது. எல்லா நாட்டு மக்களும் இரு கட்சிகளிலும் சேர்ந்து போரிட்டனர். தமிழ்நாட்டு வீரர்கள் பலரும் இப் போரில் ஈடுபட்டிருந்தனர். போர் நிகழ்ச்சியினால் வேளாண்மை முதலிய முயற்சிகள் சுருங்கின. போர் பதி னெட்டு நாள் நடந்த போதிலும் அதற்கு முன்பே பல பல ஏற்பாடுகள் நடந்தமையால் இந்நிலை ஏற்படலாயிற்று.

பாரதப் போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு உணவு போதாது என்ற செய்தியைத் தமிழ்நாட்டு மன்னன் உதியன் சேரலாதன் அறிந்தான். தமிழ்நாடு நெல்லும் கரும்பும் விளையும் நாடு. ஆகவே, சேர மன்னன் பாரதப் போர் வீரர்களுக்குச் சோறூட்டும் அறத்தொண்டினை மேற் கொண்டான். பசித்தவன் பகைவனாக இருப்பினும், அவனது பசியைப் போக்குவது அறமென்பது ஆன்றோர் கொள்கை. சேரலாதன் இத்தகைய சீரிய உள்ளம் படைத்தவன். ஆத லின், அவன் ஒரு சாராருக்கு மட்டுமே உணவு தருவேன் என்றுகூறாது இரு திறத்தார் சேனைக்கும் போதிய உணவு அளிப்பதே தன் கடமை என்று உணர்ந்து போர் முடியும் வரை உணவளித்து வந்தான்.

இவ்வரும்பெரும் செயலால் பாரத நாடு முழுதும் அவன் புகழ் பரவியது. அவனுக்குப் 'பெருஞ் சோற்றுதி யன் சேரலாதன்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. மக்களெல்லோரும் அப்பெயராலேயே அவனை அழைப்பா ராயினர். இதனை,

"ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த சேரன்"

என்ற அடிகளையுடைய சிலப்பதிகாரத்திலுள்ள வாழ்த்துக் காதை வலியுறுத்தும்.

பாரதப் போர் முடிந்தது. பாண்டவர் வெற்றிய டைந்தனர். துரியோதனாதியர் நூற்றுவரும் அழிந்தொழிந் தனர். அறம் வென்றது. மறம் தோற்றது.

பாரதப் போர் முடிந்து நாட்டில் அமைதி ஏற்பட்டது. முரஞ்சியூர் முடிநாகராயர் வடநாட்டுக்கு யாத்திரை சென்ருர். அங்கு அவர் வடநாட்டுப் பெருமையை உணர்ந்த தோடு அங்குள்ளார் தமிழ் மன்னன் உதியனது வண்மையைப் போற்றக் கேட்டு அம்மன்னனது பெருமையையும் நன்கு உணர்ந்தார். பின்னர், அவர் பாரத நாட்டின் வட பேரெல்லேயாக வானே நோக்கி நிமிர்ந்து நிற்கும் இமைய மலேயைப் பார்க்கப் பேரவாக் கொண்டு அங்குச் சென்று மலேச்சாரலிற் புகுந்தார்; பல முனிவர்களின் ஆசிரமங்களே அடைந்து முனிவர்களேத் தரிசித்தார். இமைய வரையைக் கண்ட புலவருக்குத் தமிழ்நாட்டு நினேவு தோன்றியது. இமையத்தையும் பொதிய மலேயையும் மனக்கண்ணுல் இணேத்துப் பார்த்தார். உருவத்தால் சிறியவராயினும் புலமையாற் பெரிய அகத்தியர், உருவத்தில் சிறியதாயினும் புகழினுற் பெரிய பொதிய மலேயில் இருந்தனரன்ருே! இமையமும் பொதியமும் பெருமையால் ஒத்தனவே என்ற எண்ணம் உண்டாயிற்று. உள்ளத்தில் உவகை பூத்தது. ஆகவே அவர் வடநாட்டு யாத்திரையை விரைவில் முடித்துக் கொண்டு தமிழ் நாட்டுக்கு மீண்டு வந்தார்; நேரே அரண்மனேக்குச் சென்று உதியன் சேரலாதனே அணுகினுர்.

அவரைக் கண்டதும் மனமகிழ்ந்து, “புலவரே, வடநாட்டு யாத்திரை எங்ஙனமிருந்தது? அவண் தாங்கள் கண்ணுற்ற வியத்தகு காட்சிகள் யாவை? என்று அன்பு ததும்புங் குரலிற் கேட்டான். அது கேட்ட புலவர் உணர்ச்சி மிகுதியால் ‘பஞ்ச பூதங்களது இயல்பைப் போல் பகைவரிடத்து நடந்துகொள்ளும் தன்மையுடையோய்! பரந்த எல்லேயையும் புதிய புதிய விளேவுகளேயுமுடைய ஊர்களேக் கொண்ட நல்ல நாட்டினே ஆளும் மன்ன! பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனுதியர்க்கும் போர் நடக்குங்கால் இருதிறத்தாருக்கும் சோருகிய மிக்க உணவைக் கணக்கின்றி வழங்கிய வள்ளால்! பால் புளித்தாலும் பகல் இருண்டாலும், நான்கு வேதங்களின் வழியே நடைபெறும் ஒழுக்கம் வேறு பட்டாலும், வேறுபாடில்லாத அறிவிற் சிறந்த அமைச்சர்களோடு நெடுங்காலம் விளங்கி, மலேச்சாரலில்

குட்டிகளோடு பெண்மான்கள் அந்திக்காலத்தில் அந்தணர்கள் செய்யும் கடனாகிய யாகத்தைச் செய்யும் முத்தியாகிய விளக்கிற்கு அருகில் துயிலும் பொற்சிகரங்களையுடைய இமையமலையையும் பொதிய மலையையும் போல நடுக்கமின்றி நெடுங்காலம் வாழ்வாயாக!' என்ற கருத்துடைய ஓர் இனிய பாடலைப் பாடினர்.

புலவரின் புகழுரையைக் கேட்ட மன்னனும் மன மகிழ்ச்சி கொண்டான்.

வினாக்கள்

1. தமிழ் வேந்தரின் சிறப்பு யாது?

2. சேரரது குண நலன்களைக் கூறும் நூல்கள் எவை?

3. சேர வமிசம் பழமையானது என்பதை எதனால் அறியலாம்?

4. முரஞ்சியூர் முடிநாக ராயருக்கு அப்பெயர் ஏற்படக் காரணம் என்ன?

5. புலவர் சேரனை எங்ஙனம் புகழ்ந்தார்?

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்துப் பழகுக:—

அறநெறி, உயிரும் உடம்பும் போல்.

2. பிரித்து எழுது:—

தென்னாடு, சிற்றூர், சிலப்பதிகாரம்.

7. இசை இன்பம்

மக்களுக்கு இன்பம் ஊட்டும் கலைகளில் ஒன்று இசை யாகும். இது எல்லா உயிர்களையும் தன்னிடத்தே இசை விக்கும் வல்லமையுடையது. அதனாலேயே இக்கலை 'இசை' என்று பெயர் பெற்றது. இதன் சிறப்பை உணர்ந்த தமிழர் இதனை முத்தமிழில் நடுநாயகமாக வைத்துப் போற்றினர். 'இயல், இசை, நாடகம்' என்னும் மூவகையான தமிழில், நடுவில் உள்ள இசை, இயல் தமிழுக்கும் நாடகத் தமிழுக் கும் இனிமை யளிப்பதாக இருக்கிறது.

இத்தகைய இசையில் பாம்பு முதல் பச்சிளங் குழந்தை யீறாக எல்லா உயிர்களும் ஈடுபடுகின்றன. பிடாரன் ஊதும் குழலோசை கேட்டு, நஞ்சுடைய நாகமும் மகிழ்ந்து ஆடுவதைக் காணலாம். தொட்டிலில் இட்ட குழந்தை உறங்குவதற்குத் தாய் இசையுடன் தாலாட்டு கிறாள். அந்த இசையைக்கேட்டு இன்புற்றவாறே குழந்தை உறங்கி விடுகிறது.

நிலத்தை உழும் உழவர் ஏரில் பூட்டிய காளைகள் களைப்படையா வண்ணம் பண்ணுடைய பாடல்களைப் பாடிக் கொண்டே உழுகின்றனர். வண்டியில் பூட்டிய மாடுகள் சோர்வடையாவாறு, வண்டியைச் செலுத்துவோர் தெம்மாங் குப் பாடல் பாடுகின்றனர். 'தேன் பாங்கு' போன்ற அப் பாட்டுக்களைக் கேட்டுக் கொண்டே மாடுகள் வண்டியை இழுத்துச் செல்லும். ஏற்றம் இறைப்போர் தமக்குக் களைப்பு ஏற்படா வண்ணம் ஏற்றப் பாட்டுப் பாடுகின்றனர். நெல் லைக் குத்துகின்ற பெண்கள், தம் களைப்பைப் போக்க வள்ளைப் பாட்டுப் பாடுகின்றனர். இவ்வாறு இசை, உயிர் இனங்களின் களைப்பைப் போக்கிக் களிப்பூட்டுகின்றது.

அசுணம் என்ற ஓர் உயிரைப் பற்றிப் பழைய நூல் கள் கூறுகின்றன. அதனைச் சிலர் விலங்கென்றும், வேறு சிலர் பறவை யென்றும் கூறுகின்றனர். அது இசையைக் கேட்டறிவதில் நுண்ணறிவுடையது; இனிய இசையைக் கேட்டு இன்புறும்; இன்னாத ஓசையைக் கேட்டு மயங்கி

விழுந்துவிடும். இதனைப் பிடிக்க விரும்பும் வேடர்கள் புதர்களில் மறைந்திருந்து யாழ் வாசிப்பார்கள். அதன் இனிய இசையைக் கேட்டு அண்மையில் வரும். அப்பொழுது பறையோசையை முழக்குவர். அதைக் கேட்ட அசுணம் மயங்கித் தரையில் விழுந்துவிடும். உடனே வேடர் அதனைப் பிடித்துக் கொள்வர்.

விலங்குகளில் மிகப்பெரிய யானை இசையில் விருப்பம் உடையது. பாகர்களுக்கும் குத்துக்கோல்காரர்களுக்கும் அடங்காத மதயானை யாழிசையைக் கேட்டு அடங்கி விடுமாம். தினைப்புனத்தை அழிக்க வரும் யானை, புனம் காக்கும் குறப்பெண் பாடும் குறிஞ்சிப் பாட்டைக் கேட்டுச் செயல் மறந்து விடுமாம். கண்ணன் ஊதிய புல்லாங்குழலோசையைக் கேட்டுப் பசுக் கூட்டங்கள் மெய்ம் மறந்து நின்றனவாம். ஆனய நாயனுர் ஊதிய புல்லாங்குழலின் நல்ல இசையைக் கேட்ட மாட்டினங்கள் புல்லுண்ணுவதை மறந்தனவாம். இவ்வாறு இசை உயிரினங்களையெல்லாம் வசப்படுத்தும் வல்லமையுடையதாக உள்ளது.

இக்காலத்தில் ஓரறிவுடைய பயிர்வகைகளும் இசையைக் கேட்டு இன்புறுகின்றன என்ற உண்மையைக் கண்டுள்ளனர். இனிய இசையைக் கேட்டும் பயிர்கள் விரைவில் வளர்ச்சியடைகின்றன என்றும் கூறுகின்றனர். இத்தகைய இசையைக் கேட்பதற்கு இறைவனும் விரும்புகின்றான். இசைப்பாடல்களைப் பாடிய நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் இறைவன் திருவருள் புரிந்தான். சிவபெருமான் எப்போதும் இசையைக் கேட்டு இன்புறுவதற்காகக் கந்தருவர் இருவரைக் காதணிகளாக அணிந்துள்ளான் என்பர். இராவணன் யாழில் இசைத்த சாமகானத்தைக் கேட்டு அச்சிவபெருமான் அவனுக்கு வாளும் தேரும் வழங்கினுன் என்பர்.

இங்ஙனம், ஓரறிவு படைத்த உயிர் முதலாக, ஆறறிவு படைத்த மக்கள் ஈருக எல்லா உயிர்களையும் இசை கவர்கின்றது. அது இறைவனையும் வசப்படுத்தி அருள்

புரியுமாறு செய்கின்றது. ஆதலின் இசையை இன்பக்கலை என்றே அறிஞர் போற்றுவர்.

வினாக்கள்

1. 'இசை' – பெயர்க்காரணம் கூறுக.
2. தமிழர் இசையைப் போற்றியது எப்படி?
3. பாம்பும் குழந்தையும் பண்ணில் ஈடுபடும் என்பது எவ்வாறு?
4. இசை, உயிரினங்களின் களைப்பைப் போக்கிக் களிப் பூட்டும் என்பதை விளக்குக.
5. இறைவன் இசைக்கு இரங்குபவன் என்பதை விளக்குக.

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்துப் பழகுக:—

   மெய்ம்மறந்து, பறையோசை, வசப்படுத்தி, நுண்ணறிவு.

2. பிரித்து எழுதுக:—

   முத்தமிழ், குழலோசை, ஏற்றப்பாட்டு, பறை யோசை, தினைப்புனம், மாட்டினம், ஓரறிவு, ஆறறிவு.

---

8. ஒற்றுமை உயர்வளிக்கும்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே என்று ஒற்றுமையின் உயர்வு குறித்தும் ஒற்றுமையின்மையாலேற்படும் இழிவு குறித்தும் பாடினர் அமரகவி பாரதியார். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பன போன்ற முதுமொழிகளும் ஒற்றுமையின் உயர்வை உல கிற்கு அறிவிப்பவையன்றோ?

பரந்த வானில் பறவைகள் கூட்டங் கூட்டமாகப் பறந்து திரிகின்றன. கானகத்தில் யானைகள் ஒற்றுமை யுடன் சேர்ந்து வாழ்கின்றன. இவற்றையெல்லாம் பார்த் தும்கூட பகுத்தறிவுள்ள மனிதன் ஒற்றுமையின்றி தனித்து

வாழ முயல்வது வருந்தத்தக்கதொரு செயலாகுமல்லவா. நமது கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒன்று சேர்ந்தால் தானே ஒரு பொருளைத் தூக்க முடிகின்றது. ஆண்டவனையோ பெரியோர்களையோ வணங்க முயலுங்கால் இரு கைகளும் ஒன்று சேர வேண்டியுள்ளதே. அவ்வாறின்றி ஒரு கையால் கும்பிட்டால் கும்பிடு ஆகுமா? அதன் பொருளே வேறாகிவிடுமே. எனவே ஒற்றுமையின் உயர்வை எண்ணிப் பார்த்து வாழ்தலே மனிதத் தன்மை ஆகும்.

சிறு வயது முதலே ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்ற நன்னோக்கம் கொண்ட நமது முன்னோர் ஒற்றுமையின் மேன்மையை விளக்கும் கதைகள் பலவற்றைக் கூறியுள்ளனர். அவை தந்தையும் மக்களும், சிங்கமும் எருதுகளும், புறாக்களும் தலைவனும் போன்றவை. அவற்றுள் புறாக்களும் தலைவனும் என்னும் கதையை ஈண்டுப் பார்ப்போம்.

கோதாவரி நதிக்கரையில், ஒரு பெரிய வன்னிமரம் இருந்தது. ஒருநாள் வேடனொருவன் அங்கு வந்தான். வலையை விரித்து, பலவகைப்பட்ட தானியங்களைத் தெளித்து, செடி மறைவில் பதுங்கிக் கொண்டான். அப்பொழுது சித்திரக்கிரீவன் என்னும் புறா அரசு, தன் பரிவாரத்துடன் அந்த மரத்தில் வந்து தங்கிற்று. அது அங்கே இறைத்திருந்த தானியங்களைப் பார்த்து, 'மனிதர் நடமாட்டம் இல்லாத இக்காட்டில் தானியங்கள் எவ்வாறு வந்தன? யாராகிலும் கொண்டு வந்து போட்டிருத்தல் வேண்டும். இதன் உண்மை தெரிந்தாலன்றி, நாம் இதைத் தின்னலாகாது; எதையும் ஆலோசித்தே செய்தல் வேண்டும். அவ்விதம் செய்யின் ஒரு ஆபத்தும் வராது,' என்று சொல்லிற்று.

மற்றப் புறாக்கள் அந்த அறிவுரையைக் கேளாமல் இரையின் மீதிருந்த ஆவலால் தானியங்களைத் தின்னக் கீழே பறந்து சென்று வலையில் சிக்கிக் கொண்டன. புறா அரசு அதைக்கண்டு, "என் சொல்லைக் கேளாது எல்லாம் வலையில் அகப்பட்டுக் கொண்டன. நான் மட்டும் தனித்

திருப்பதால் பலனில்லை," என்று எண்ணிக் கீழே பறந்து சென்று வலையில் சிக்குண்டது.

வேடன் மகிழ்ச்சியுடன் வலையை நோக்கி வரத் தொடங்கினன். புருக்கள் அஞ்சிச் சித்திரக்கிரீவனைப் பார்த்து,"உன் பேச்சைக் கேளாது அவமதித்தோம். அதன் பலன் கிடைத்து விட்டது" என்றன. சித்திரக்கிரீவன், "இப்பொழுது இதைச் சொல்லிப் பயன் என்ன? இந்த இடரிலிருந்து நீங்க ஒரு சூழ்ச்சி இருக்கின்றது. எல்லோ ரும் ஒரு மனமாக வலையோடு பறந்து செல்வோம். அப்படிச் செய்தால்தான் நாம் நமது உயிரைக் காப்பாற்றலாம்" என்றது. உடனே புருக்களனைத்தும் ஒரு சேர வலையோடு பறந்து போயின. வேடன் வியப்புற்று, "இவை ஒற்றுமை யுடன் வலையோடு போகின்றன. ஆயினும், இவைகளுக் குள் சண்டை நேரிடும். அப்போது இவை என் கையில் அகப்படும்," என்று நினைத்து அவற்றின் பின்னே ஓடினன். சிறிது நேரத்தில் புருக்கள் மறைந்தன. வேடன் களைப் புடன் திரும்பினன். புருஅரசு தன் நண்பனை இரணியகன் என்னும் எலியை அடைந்து வலையை அறுத்துத் தங்களை விடுவிக்கும்படி வேண்டிற்று. எலி அவ்வாறே செய்தது. விடுதலையடைந்த புருக்கள் அனைத்தும் மகிழ்ச்சியடைந் தன. இக்கதை அளிக்கும் கருத்து என்ன? ஒற்றுமை உயிரைக் காக்கும் என்பதன்றோ?

"யாது மூரே யாவருங் கேளிர்" என்ற உயரிய நோக் கத்தைக் கொண்ட நம் நாடு, இடைக்காலத்தில் ஒற்றுமை குன்றியதால் பெருமையை இழந்தது. பெரியோர் பலரது அரும்பெரு முயற்சியால் இழந்த பெருமையை மீண்டும் பெற்று இன்று சுதந்திர நாடாகத் திகழ்கிறது. நமக்கு நாமே மன்னர்கள் என்ற நிலை பெற்றுள்ளோம்.

நாடு, மொழி, இனம், நிறம் முதலிய பிரிவை மறந்து கற்றவர் கல்லாதவர், வாலிபர் வயோதிகர், ஏழை பணக்கா ரன் என்ற வேறுபாடின்றி ஒற்றுமையுடன் வெள்ளையனை விரட்டப் பாடுபட்டோம்; பலனடைந்தோம். இந்த ஒற்று மையைக் கட்டிக் காப்பதிலும் மேலும் மேலும் வலுப்படுத்து

வதிலும்தான் இந்த நாட்டின் எதிர் காலம் அடங்கி இருக்கின்றது.

மக்களிடையே இவ்வாறு இயற்கையாக இருந்த ஒற்றுமை உணர்ச்சியை அடிப்படையாக வைத்துக் கொண்டு தான் ஆங்கிலேயர் தமது ஆட்சிக்கு முன்பு பிரிந்து கிடந்த பகுதிகளைப் பிணைத்து ஒரே ஆட்சியை நிறுவினர். அவ்வாறின்றி ஆங்கிலேயர்கள் தான் பாரத நாட்டை ஒன்று படுத்தினர் என்று கூறுவது அறியார் கூறும் வெறு மொழியாகும்.

ஆகவே காஷ்மீரிலே பிறந்தவனாயினும் கன்னியாகுமரியிலே பிறந்தவனாயினும் நான் ஓர் இந்தியன் என்ற உணர்வு உள்ளத்தில் வேரூன்ற வேண்டும். நமது நாட்டு சமயம், சமூக உறவு முதலியவை இப்படித்தான் இருந்து வந்துள்ளது. இராம கிருஷ்ண பரம ஹம்சர் வடக்கே தோன்றி பக்தி மார்க்கத்தைப் பரப்பிய அதே நேரத்தில் வடலூரில் இராமலிங்க அடிகளார் அருளறத்தைப் பரப்பி வந்துள்ளார். இன்றும் வடபகுதியினர் இராமேஸ்வரம் வந்து தரிசித்துச் செல்வதையும் தென்பகுதியினர் காசிக்குச் சென்று தரிசித்து வருவதையும் கண்கூடாகக் காண்கிறோம்.

திலகர், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற அரும் பெரும் தியாகிகள் பாடுபட்டு மீட்டுத்தந்த பாரத பூமியில் வாழும் நாம் கருத்து வேறுபாடுகளைக் களைய வேண்டும். பொறுமையால் பொருளற்ற பேச்சுக்களைப் பேசுதல் கூடாது.

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும் நமது இயற்கைப் பண்பினை உள்ளத்திற் கொண்டு உலகம் ஒரு குடும்பமாக வாழ, ஒவ்வொருவரும் அவரவரால் ஆவனவற்றைச் செய்து ஒற்றுமையை வளர்த்து உயர்வெய்த வேண்டும்.

வினாக்கள்

1. ஒற்றுமை குறித்து வழங்கும் பழமொழிகள் யாவை?
2. சித்திரக்கிரீவன் என்னும் புறு இரையைக் கண்ட போது கூறியதென்ன?

3. சித்திரக்கிரீவனது அறிவுரையைக் கேளாத புருக்கள் அடைந்த துன்பம் யாது?

4. வேடனிடமிருந்து தப்புவதற்குப் புருக்கள் செய்த சூழ்ச்சி யாது? அதன் முடிவு என்ன?

5. பாரதம் பண்டைக் கால முதலே சமயம், சமூக உறவு முதலியவற்றில் ஒற்றுமையுடன் விளங்கிற்று என்பதை எவ்வாறு அறியலாம்?

---

9. தேசீயக் கவிஞர் பாரதியார்

நம் நாட்டு விடுதலையின் பொருட்டுப் பலர் போராடி வந்தனர். அவர்களுள் முக்கியமானவர் நமது சுப்பிரமணிய பாரதியார். தாய் மொழிக்கும் தாய் நாட்டிற்கும் அவர் ஆற்றிய அரும் பணியை அளவிடவே முடியாது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழர்களை வீறுகொண்டெழச் செய்தவர் அவரே. உயிரைத் துரும்பாக மதித்து, சுதந்திரப் போரில் ஈடுபடச் செய்து எத்தகைய தியாகத்தையும் செய்யத் தூண்டியவரும் அவரே. அஞ்சி அஞ்சி அடிமை வாழ்க்கை வாழ்ந்து வந்த மக்களை அடிமைத்தனத்தினின்றும் விடுவித்தார். மனிதனை மனிதனாக வாழச் செய்தார்.

பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள், பதினோராம் நாள் அந்தணர் மரபில் அவதரித்தார். அவருடைய தந்தையார் சின்னச்சாமி ஐயர்; தாயார் இலக்குமி அம்மையார். பாரதியாருடைய இயற்பெயர் சுப்பிரமணியம் என்பதாம். செல்லப் பெயர் சுப்பையா என்பது.

> "தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
> முந்தி யிருப்பச் செயல்"

என்பதைக் கற்றறிந்த பெரியாராகிய சின்னச்சாமி ஐயர் பாரதியாரை ஐந்தாம் வயதிலேயே பள்ளியிற் பயிலச் செய்தார். பாரதியார் இயற்கையறிவு பெரிதுமுடையவர். இயற்கைக் காட்சிகளைக்கண்டு களிப்பதில் அவரது உள்ளம்

ஈடுபட்டது. கவிதை உணர்ச்சி இயல்பாகவே அவருக்கு அமைந்திருந்தது. பள்ளிப் படிப்பில் கவனம் செல்லவில்லை. அவ்விளைஞர் பாடும் திறமையைக் கண்ட பலரும் வியப்புற்றனர்.

இவருடைய பதினோராம் வயதிலே எட்டையபுர அரசரவையில் பல புலவர்கள் குழுமியிருந்து சில கருத்துக்களையும் அடிகளையும் கொடுத்து இவரைப் பாடி முடிக்கும்படி கூறினர். உடனே சொற் சுவையும் பொருட் சுவையும் பொருந்தப் பாடி முடித்தார். அதனைக் கண்டு வியப்புற்ற அவர்கள் இவருக்குப் "பாரதியார்" என்ற சிறப்புப் பட்டத்தை அளித்தார்கள். அன்றுமுதல் இவர் சுப்பிரமணிய பாரதியார் என்றும் சுருக்கமாகப் பாரதியார் என்றும் அழைக்கப்பட்டார்.



பாரதியார்

பிறகு, இவர் திருநெல்வேலி இந்து கல்லூரியில் மூன்றும் படிவத்திற் சேர்ந்து படித்துவந்தார். மெற்றிக்குலேஷன் தேர்வில் தவறிவிட்டார். ஆனால் அதற்காக வருந்தினாரில்லை. பின்னர் இவர் பதினைந்தாம் வயதில் நற்குணமுடைய நங்கை செல்லம்மாளை மணந்தார். அப்போது செல்லம்மாள் வயது ஏழு. இவரது பதினாறுவது வயதில் தந்தை சின்னச்சாமி ஐயர் உயிர்நீத்தாராதலின் காசியில் வாழ்ந்து வந்த தம் அத்தை குப்பம்மாளின்

ஆதரவில் காசி இந்துக் கலாசாலையில் பயின்று "மெட்ரிகுலேஷன்" தேர்வில் தேர்ச்சிபெற்ருர். பின்னர் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் படித்து புகுமுகத் தேர்வில் முதல் தரத்தில் தேர்ந்தார். மேற்கொண்டு படிக்க வசதி யில்லாமையால் மறு ஆண்டில் அங்கிருந்து வந்து எட்டையபுர மன்னரது அரசவைக் கவிஞராகப் பணி யேற்றுப் புகழுடன் விளங்கினர். அப்போது இவர் பாடிய பாடல்கள் பல.

அடுத்த ஆண்டிலேயே அரசவைப் புலவர் பதவியை விடுத்தார். 1904ஆம் ஆண்டில் மதுரையிலுள்ள சேதுபதி உயர்தரக் கல்லூரியில் மூன்று திங்கள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் அதையும் விட்டுச் சென்னைக்குச் சென்ருர். 'சுதேச மித்திரன்' என்னும் நாளிதழுக்குத் துணையாசிரியராக அமர்ந்தார். தமிழகத்தினர் மனதைக் கவரும் கட்டுரைகளையும் தேசீயப் பாடல்களையும் எழுதி வெளியிட்டார்.

1907 ஏப்பிரல் திங்களில் பாரதியார் 'இந்தியா' என்ற செய்தித் தாளின் ஆசிரியராஞர். அப்போது 'பால பாரதம்' என்ற ஆங்கில இதழையும் நடத்தி வந்தார். அக்காலத்தில் இவர் இயற்றி வெளியிட்ட பாடல்கள் பல. அவற்றுள் ஒன்று வருமாறு.

விருத்தம்

"இதந்தரு மனையினீங்கி யிடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப் பழிமிகுந் திழிவுற்ருலும்
விதந்தரு கோடியின்னல் விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே"

இன்னும் பல சமத்துவ கீதங்களையும் "ஜன்ம பூமி" முதலிய பாடல்களையும் பாடியதால் இவரை அந்தணர் களும், அரசினரும் அறவே வெறுத்தனர். உதவி ஒன்றும் புரியவில்லை. இந்நிலையில் இவர் அளவற்ற தேசபக்தியை எழுப்பி வந்ததால் மக்கள் மனம் மாறுபட்டது. 1908 இல் பிறந்த அரசாங்கச் சீர்திருத்தத்தின் போது பலர் சிறைப்

பட்டனர். அது சமயம் பாரதியாரும் ஆங்கில இந்திய எல்லையைக் கடக்க வேண்டியதாயிற்று. இது வியப்பன்று. தேசத் தொண்டிற்கு மக்களைத் தட்டி எழுப்பிய பால கங்காதர திலகரையும் அரசாங்கத்தார் நாடு கடத்தின ரல்லவா? இவர் தாமாகவே புதுச்சேரிக்குச் சென்று சுமார் பத்து ஆண்டுகள் தங்கி அல்லலுற்ருர். அக்காலத்திலும் இவர் தமிழ்மொழிக்குச் செய்த அருந்தொண்டுகள் பல. இவரியற்றிய தமிழ்ப் பெருமை, தமிழ்ப் புலவர் பெருமை, நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டு, ஒற்றுமை முதலிய கருத்துக்களடங்கிய தீந்தமிழ்ப் பாடல்கள் இளைஞர் படித்தற்குரியவை.

1918ஆம் ஆண்டு இவர் பிரெஞ்சு எல்லையைக் கடந்து ஆங்கில இந்திய எல்லையை யடைந்ததும் கடலூரில் இவரைக் கைது செய்தனர். ஆனால், இவர்மீது குற்றச் சாட்டு ஒன்றுமில்லாமையால் சில நாட்களில் இவரை விடுதலை செய்தனர். உடனே கடையம் சென்று சில காலம் அங்குத் தங்கினர். 1920ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை சென்று 'சுதேசமித்திரன்' நாளிதழுக்குத் துணையாசிரியரானர். 1921இல் காந்தியடிகளைக் கண்டு அளவளாவி மகிழந்தார்.

பாரதியார் எளியார்க்கிரங்கும் பண்பு கொண்டவர். அனைவரும் ஒரே குலம் என்ற உயர்ந்த கொள்கையை யுடையவர். நல்லது என்று கண்ட எதையும் அஞ்சா நெஞ்சுடன் எடுத்துக் கூறும் இயல்பு வாய்ந்தவர். ஆனல், அமைதியை நிலைநாட்டுபவர். அவரது ஒவ்வொரு பாடலும் மனித சமுதாய முன்னேற்றத்துக்குரியது. இழிவு கொண்ட மனிதராக இந்தியாவில் எவரும் இருத்தலாகாது என்பது அவரது ஆணித்தரமான எண்ணம். இவ்வாறு தேசத்துக் காகவும் தேச மக்கள் பெற்றுத்தீர வேண்டிய மறு மலர்ச்சிக் காகவும் தமது உயிர், பொருள், உடைமை அனைத்தையும் கவிதை வடிவாகத் தந்துதவிய மகான் அவர்.

பாரதியார் சென்னையில் வாழ்ந்த காலத்தில் நாள் தோறும் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்று வழிபடுவது வழக்கம். ஒருநாள்

அக் கோயில் யானைக்கு மதம் பிடித்திருந்தது. அந்த யானைக்கு நாள்தோறும் பாரதியார் தேங்காயும் பழமும் கொடுப்பது வழக்கம். யானை மதங்கொண்டிருப்பதைப் பொருட்படுத்தாமல் வழக்கம் போல் தேங்காயும் பழமும் கொடுத்தார். அவ் யானையால் தூக்கி எறியப்பட்டார். அந்த அதிர்ச்சியால் 1921 செப்டம்பர் 11 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்துப் புகழுடம்பை நிலைநாட்டினர்.

பாரதியாரது பூத உடல் மறைந்தாலும் அவர் விட்டுச் சென்ற பாடல்கள் மங்காமல் மறையாமல் பாருள்ள ளவும் ஒலித்துக் கொண்டே இருக்குமாதலின் நாம் அவற்றை இடைவிடாமல் படித்துப் பயன் பெறுவோமாக.

வினாக்கள்

1. பாரதியார் எங்கு எப்பொழுது பிறந்தார்.
2. பாரதியார் என்ற சிறப்புப் பெயரை அவர் எப்பொழுது பெற்றார்?
3. அவர் காசிக்குச் செல்லக் காரணமென்ன?
4. பாரதியார் ஏன் புதுச்சேரிக்குச் சென்றார்.
5. பாரதியார் இயற்றிய நூல்கள் எவை?
6. பாரதியார் சிறந்த குணங்கள் யாவை?
7. பாரதியார் நடத்தி வந்த செய்தித் தாள்கள் எவை?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக :—

   ஒற்றுமை, வியப்பு, வல்லுநர், அல்லல்.

2. பிரித்து எழுதுக:—

   பல்கலைக் கழகம், பேரன்பு, செந்தமிழ், தமிழுலகம்.

10. இரப்பர்த் தொழில்

மனிதர்களுக்கு இரும்பு, செம்பு முதலிய உலோகங் களுக்கு அடுத்தபடியாக இரப்பரே அதிகமாகப் பயன்படு கிறது. நமது நாட்டில் இக்காலத்தில் இரப்பரால் செய்யப் பட்ட பொருள்களை எங்கும் மிகுதியாகக் காணலாம். சிறு கிராமங்களிலும் இரப்பரால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள்களும், தட்டுமுட்டுப் பொருள்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் ஓவியம் வரையுங்கால் பிழைபட வரைந்த கோடுகளை அழிக்க இரப்பர்த் துண்டை உபயோகிக்கின்றனர். நமது அன்றாட வாழ்க்கையில் பயன்படும் பொருள்களுள் பல, இரப்பரினால் செய்யப்பட்டனவேயாகும். மோட்டார் வண்டி களிலும் (பேருந்து வண்டி) சைக்கிள் வண்டிகளிலும் (மிதி வண்டி) இரப்பரால் செய்யப்பட்ட பல கருவிகள் உள.

நாள்தோறும் நாம் உபயோகிக்கும் செருப்புக்கள் அரைக்கச்சுக்கள் முதலியவை இரப்பரால் செய்யப்படு கின்றன. மழைக்காலத்தில் நம் உடுப்புக்கள் நனையாம லிருக்க நாம் போட்டுக்கொள்ளும் மழைச் சட்டைகளும் இதனால் செய்யப்பட்டவைகளே. சிறுவர் விளையாடும் பந்துகள், பொம்மைகள் முதலியனவும் இரப்பரால் செய்யப் படுகின்றன. இவ்விதம் மக்களின் வாழ்க்கைக்கு இன்றி யமையாததாய் விளங்கும் இரப்பர் எங்கே உற்பத்தியாகிற தென்றும், எவ்விதம் நமது நாட்டுக்கு வந்ததென்றும் காண்போம்.

ஏறத்தாழ 450 ஆண்டுகளுக்கு முன்னர் இரப்பரின் உபயோகத்தை ஒருவரும் அறியார். உலகப் புகழ் பெற்ற கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான ஹெய் டித்தீவைக் கண்டுபிடித்தபோது கடற்கரையில் சில சிறுவர் கள் கறுப்புப் பந்துகளை வைத்து விளையாடிக் கொண்டிருந் தார்கள். அப்பந்துகள் ஒரு மரத்தின் பாலால் தயாரிக்கப் பட்டவை என்பதை கொலம்பஸ் அறிந்தார். ஆகவே, அவர் அந்தப் பாலில் மாதிரிக்காகக் கொஞ்சம் ஐரோப்பா

வுக்கு எடுத்து வந்தார். உறைந்த அந்த பால் இழுத்தால் நீளுவதையும், விட்டு விட்டால் முன்பு இருந்தது போல சுருங்கி விடுவதையும் கண்டு மக்கள் வியந்தார்கள். ஆனால், அதன் பயன் என்ன என்பதை அப்போது ஒருவரும் அறிந்திலர். அதிலிருந்து 300 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதன் பயன் தெரியவந்தது.

ஜோசப்பு பிரீட்டலி என்ற இராசயன நிபுணர், உறைந்த அப் பாலைக்கொண்டு பென்சில் எழுத்துக்களை அழித்துவிடலாம் என்பதைக் கண்டு பிடித்தார்.

ஆங்கிலத்தில் 'ரப்' (Rub) என்ற சொல்லுக்குத் 'தேய்' அல்லது 'அழி' என்பது பொருள். அதன் காரணமாகவே அதற்கு இரப்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று. நாளடைவில் இரப்பர்ப் பாலின் அருமையை ஐரோப்பியர் அறிந்

தனர்; ஆகவே, இரப்பர்ப் பால் கிடைக்கக் கூடிய மரங்களைத் தாமே வளர்க்கத் தலைப்பட்டனர்.

இரப்பர் மரம் வளர நல்ல வெயிலும் அதிக மழையும் வேண்டும். காற்று அதிகமாக அடிக்கக்கூடாது; பனி அதிகமாகப் பெய்யும் மிகக் குளிர்ந்த பூமியாகவும் இருக்கக் கூடாது. ஆகவே இத்தகைய தட்ப வெப்ப நிலையுள்ள மலேயா முதலிய நாடுகளில் இரப்பர் மரங்கள் ஏராளமாக வளர்க்கப்படுகின்றன.

நம் நாட்டில் இரப்பர் மரம் தேக்கு மரத்தைப் போன்று உயர்ந்தோங்கி வளர்கிறது. மலைச்சாரல்களில் அது செழித்தோங்கி வளரும் தன்மையுள்ளது. ஆறு அல்லது ஏழாண்டு சென்ற மரங்களிலேதான் பால் எடுக்கலாம். அதற்கு முன் பால் எடுத்தால் மரத்துக்குக் கேடு விளையும். பாலை எடுக்க மரத்தைச் சுற்றி ஒரு கூரிய கத்தியால் ஒரு கீற்று இடுவார்கள்; மரப்பட்டையின் கனத்தைவிட ஆழமில்லாதபடி கீறுவார்கள். ஆழமாய்க் கீறின், மரத்துக்குக் கெடுதிவிளையும். கீறிய பாகத்தில் உடனே பால் சுரந்து வடியும். வடிந்த பாலைச் சேகரிக்க ஒரு சிறு பாத்திரத்தைக் கீற்றின் அடியில் தொங்க விடுவார்கள். மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்குள் பாத்திரத்தில் பால் நிரம்பிவிடும்.

இவ்வாறு பாத்திரங்களில் நிரம்பிய பாலை ஒரு பெரிய தொட்டியில் ஊற்றி, அஃது உறைவதற்கு ஒரு திராவகத்தை ஊற்றுவார்கள். உறைந்த பாலை ஓர் உருளையில் இட்டுப் பலமுறை நசுக்குவார்கள். அப்படிச் செய்வதனால், அதில் உள்ள நீர் முழுவதும் வெளிவந்து விடும். பின்பு மற்றொரு பெரிய உருளையினுள்ளே அதைத் திணித்து, அவ்வுருளையைச் சுழற்ற அது பாய்போல மாறிவிடும். அது 'கிரேப் இரப்பர்' எனப்படும்.

கிரேப் இரப்பரை ஒரு பெரிய வீட்டின் மாடி அறையில் கயிற்றில் தொங்கவிட்டுச் சூரிய வெப்பத்தாலும் காற்றாலும் உலரச் செய்வார்கள். அப்பொழுது அது தூய

வெண்ணிற முடையதாயிருக்கும். தண்ணீர் முழுதும் நீங்கியபின் கீழே நெருப்பு மூட்டி கிரேப் இரப்பர் மேல் புகை படும்படி செய்வர். புகை பட்டதும் கிரேப் இரப்பர் சிறிது சிறிதாகப் பழுப்பு நிறமடைந்து, இறுதியில் புகையிலை நிறமாகிவிடும். அதன் பிறகு அதைப் பெரிய பெட்டிகளில் அடைத்துக் கப்பலில் ஏற்றி அயல் நாடுகளுக்கு அனுப்புவார்கள்.

இரப்பரைப் பெரும்பாலும் வேறு பொருள்களோடு கலந்தே உபயோகிக்கின்றனர். அவற்றுள் முக்கியமானது கந்தகம். கந்தகம் கலந்த இரப்பர் இலகுவில் இளகாது. கந்தகம் அதிகம் சேர்ந்த இரப்பர் கறுப்பு நிறமாக மாறிவிடும். அதற்கு வல்கநைட்டு என்பது பெயர். கிராமபோன் இசைத் தட்டுக்களும் ஊற்றுப் பேனுக் குழாய்களும் வல்கநைட்டால் செய்யப்பட்டவைகளே. மின்சாரத்தினுல் ஓடும் இயந்திரங்களுக்கும், மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போவதற்கும் வல்கநைட்டுக் கம்பிகள் உபயோகப்படுகின்றன.

இப்போது இரப்பர் மிக மலிவாக உலக மெங்கும் கிடைக்கின்றது. இயற்கையில் கிடைக்கும் இரப்பர் போதாமையால் செயற்கை இரப்பரை உண்டுபண்ணுகின்றனர். இப்பொழுது அமெரிக்காவில் ஏராளமாகச் செயற்கை இரப்பர் உற்பத்தியாகி வருகிறது. இயற்கை இரப்பரால் எந்தெந்தச் சாதனங்களைச் செய்ய முடியுமோ அவற்றை யெல்லாம் செயற்கை இரப்பராலும் செய்கின்றனர்.

வினுக்கள்

1. இரப்பரினுல் ஏற்படும் பயன்கள் யாவை?
2. இரப்பரின் பயன் யாரால் எப்பொழுது தெரிய வந்தது?
3. இரப்பருக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?
4. இரப்பர் மரங்கள் எங்கெங்குச் செழித்து வளர்கின்றன.
5. இரப்பர்ப் பால் எப்படி எடுக்கப்படுகிறது.
6. 'கிரேப் இரப்பர்' என்பது என்ன? அதன் பயன்கள் யாவை?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக:—

தட்டுமுட்டுப் பொருள், நாளடைவில், உருளை, இறுதி.

2. பிரித்து எழுதுக:—

உயர்ந்தோங்கி, ஏழாண்டு, அவ்வுருளை, வெண்ணிறம்.

---

11. இன்பச் செலவு

அன்பு கெழுமிய நண்ப !

வணக்கம். இன்பச் செலவென்றதும் இளைஞருள்ளம் எல்லையிலா இன்பமுறுவது இயற்கை. எப்பொழுதும் படித்துக்கொண்டிருப்பதாலும் பழகிய பொருள்களையே மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டிருப்பதாலும் உள்ளமும் உடலும் சோர்வடைவதுடன் ஊக்கமும் குறைகிறது. இன்பச் செலவு இந்நிலையை நீக்கி புத்துணர்ச்சி பெறவும் மனப்பண்பு விரிவடைதற்கும் ஏதுவாகிறது.

இன்பச் செலவென்றால் பொருளைக் கொண்டு இன்பமாகச் செலவு செய்தல் என்பதன்று. செலவு என்பது செல்லுதல் எனப் பொருள்படும். 'செங்கோன் தரைச் செலவு' என்று பெயருள்ள ஒரு தமிழ் நூலும் உண்டு. இயற்கையின்பமும் அறிவின்பமும் பெறச் செல்லும் பிரயாணமே இன்பச் செலவு எனப்படும்.

ஏட்டில் படித்ததை எதிரே காணுங்கால் மாணவருள்ளத்துப் பசுமரத்தாணியெனப் பதியுமாதலின் தற்காலத்தில் பள்ளிகள் யாவும் இன்பச் செலவை மேற்கொள்கின்றன. இன்பச் செலவுக் கேற்ற இடங்கள் புராணப் புகழும், வரலாற்றுச் சிறப்பும் கைத்தொழில் வளமும் இயற்கை செயற்கை விந்தைகளும் அமைந்த இடங்களே யாகும். இன்பச் செலவை மேற்கொள்வோர் அவ்வவ்விடங்களிற் காண்பனவற்றை குறித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

இன்பச் செலவை முடித்து ஊர் திரும்பிய பிறகு அதனைக் குறித்து ஒரு கட்டுரை எழுத வேண்டும். அண்மையில் நான் கலந்து கொண்ட ஓர் இன்பச் செலவு குறித்து, எனது ஆசிரியர் கட்டளைக் கிணங்கி ஒரு கட்டுரை எழுதி யுள்ளேன். அது உனக்கும் பயன் தருமென்றெண்ணி இங்கே தருகின்றேன். படித்துப் பயன் பெறுக.

என் பள்ளியிலிருந்து யானும் என்னுடன் பயிலும் மாணவ நண்பர்கள் இருபதின்மரும் ஆசிரியப் பெருமக்கள் இருவரது துணையுடன் இந்தியாவின் தென்முனையாகிய கன்னியாகுமரிக்குச் சென்றோம். அங்குள்ள இயற்கைக் காட்சிகள் பலவற்றைக்கண்டு இன்புற்றோம். அங்கே இரண்டு நாட்கள் தங்கினோம். பார்க்க வேண்டிய முக்கிய மான இடங்களையெல்லாம் கண்டு களித்துத் திரும்பினோம். இவ்வின்பச் செலவு எங்களுக்கு எல்லையற்ற மகிழ்வை யூட்டியது. இச்செலவு என் வாழ்வில் என்றும் மறக்க முடியாததொன்றாகும்.

பார் புகழும் நமது பாரத நாட்டிற்கும் பைந்தமிழ் நாட்டிற்கும் தெற்கெல்லையாக அமைந்து இலங்குவது குமரி முனை. இந்து மாக்கடலும், வங்கப் பெருங்கடலும், அரபிக் கடலும் கைகோத்துக்கொண்டு களி நடம் புரியும் காட்சி கண்ணிற்கும் கருத்துக்கும் பெரு விருந்தாகும். அவண் கதிரவன் கீழ்த்திசையில் தோன்றி மேற்றிசையில் மறையும் காட்சி கடலில் தோன்றி திரும்பவும் கடலிலேயே மூழ்குவதுபோல் காணப்படும். அக்காட்சி கண்டோருள் ளத்தைக் களிப்புக் கடலில் ஆழ்த்தும். இவ்வினிய காட்சி யைக் கண்டு மகிழும் பொருட்டு பாரத நாட்டின் பல பாகங் களிலிருந்தும் மக்கள் நாடோறும் வந்த வண்ணமாயிருக் கின்றனர்.

நீலத்திரைக் கடலோரத்தில் பகவதி அம்மன் கோயில் அமைந்துளது. கன்னியாகுமரியின் மேற்றிசையில் பதின்மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் சுசீந்திரம் என்னும் சொலற்கரிய வனப்பு வாய்ந்த சிற்றூர் ஒன்று இருக்கிறது. அங்குச் செல்வோரை இயற்கையன்னை இன்முகங்காட்டி

வரவேற்பாள். தென்னைகள் காய்களைச் சுமந்து "இளநீர் பருக வாரும் வாரும்" என்று தலையாட்டும். வாழைகள் பழங்களைத் தாங்கிக் கைகளை நீட்டி அழைக்கும். மாமரங்கள் காய்கனிகளை ஏந்தி இறைஞ்சும். செஞ்சாலிக் கதிர்கள் சாமரை இரட்டும். இத்தகைய எழில்மிக்க இச்சிற்றூர் நாஞ்சில் நாட்டுக்கே ஒரு தனிச் சிறப்பை அளிக்கின்றது. வானளாவும் கோபுரத்தையுடைய இவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் தாணுமாலயன் என்பதாகும். ஒரு சமயம் தாணுமாலயனுக்கும் பகவதி அம்மனுக்கும் திருமணம் நடக்க ஏற்பாடாகியிருந்ததாம். அத்திருமணத்திற்குத் தாணுமாலயன் மணக்கோலத்துடன் சுசீந்திரத்திலிருந்து புறப்பட்டுக் கன்னியாகுமரிக்கு வருவதற்குள் திருமணத்திற்குக் குறித்த நேரம் கடந்துவிட்டபடியால், பகவதி அம்மன் கோபங்கொண்டு தனக்குத் திருமணம் வேண்டாவென்றும், தான் என்றும் கன்னியாகவே இருக்கப் போவதாகவும் கூறிவிட்டனளாம். ஆகவே அவ்வூருக்குக் கன்னியாகுமரி என்ற பெயர் வந்ததென்பர் சிலர்.

இவண் நடைபெறும் இன்றியமையாத தொழில்கள் வாணிகம், பயிர்த்தொழில், மீன் பிடித்தல் முதலியவையாகும். இத் தொழில்களுக்கேற்ற வாய்ப்பும் வசதியும் இங்கு நன்கு அமைந்துள்ளன. பண்டைக் காலத்தில் கடல் வழியாக வாணிகம் நடைபெற்று வந்ததென்பதற்கு ஆதாரமாகக் குமரிமுனைக்குக் கிழக்கில் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் ஓர் உடைந்த கப்பல் கிடப்பதை இன்றும் காணலாம். மேலும் இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலிருந்து கப்பல் மார்க்கம் இக் குமரிமுனையின் ஓரமாகவே இன்றளவும் செல்கின்றது. குமரிக் கடலில் சிறு சிறு பாறைகள் இருப்பதால் கப்பல்கள் இக்குமரிமுனையில் வந்து நிற்பதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது.

வாழ்க்கையில் நிகழ்ந்த பழிபாவத்தைப் போக்குவதற்காக மக்கள் குமரி முனைக்கு வந்து நீராடிச் செல்வர் என்று மணிமேகலை முதலான நூல்கள் கூறுவதற்கேற்ப

தற்போதும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் பெரும் பாலோர் திரள் திரளாக வந்து இக்கடலில் நீராடுகிறார்கள். மக்கள் நீராடுவதற்குக் கடலில் பாதுகாப்புச் சங்கிலிகள் கட்டப்பட்டுள்ளன. மற்றொரு பக்கத்தில் 'நீச்சற் குளம்' ஒன்று கடற்கரையில் கட்டப்பட்டுள்ளது. இது நீந்திக் குளிப்பதற்கும் விளையாடுவதற்கும் ஏற்ற சாதனங்களுடன் மதிற் சுவரால் பாதுகாக்கப்பட்டுள்ளது. எங்களில் சிலர்



கன்னியாகுமரி

நீச்சற் குளத்தில் பாய்ந்து நீந்திக் குளித்தனர். நானும் என் நண்பர்களிற் சிலரும் கடற்கரை மணலில் ஓடி விளையாடினோம். பின்னர், கடற் கரையில் அமர்ந்து நீல நிற அலைகள் பொங்கி வருவதைக் கண்டு சிறிது நேரம் இன்புற்று இருந்தோம். இத்தகைய பெரிய கடற் காட்சி எங்களுக்கு மிகுந்த வியப்பை அளித்தது.

குமரிமுனைக்கு ஒவ்வொரு நாளும் கூட்டம் கூட்டமாக வரும் யாத்திரிகர், பார்வையாளர் முதலியோர் தங்குவதற்கும் உண்டு களிப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் அரசாங்கத்தார் பல சத்திரங்களையும் மாளிகைகளையும்

கட்டியுள்ளனர். திருவாங்கூர், கொச்சி, அரசப்பிரமுகரின் அரண்மனை ஒன்றும் இங்கு இருக்கின்றது. இங்கு வாழும் மக்களில் அநேகர் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்கள். எஞ்சியோர் இந்துக்களும் முகம்மதியர்களுமாவர்.

கன்னியாகுமரிக்கு மேற்கில் நாலரை கிலோ மீட்டர் தூரத்தில் மருந்துவாழ்மலை அமைந்து இருக்கிறது. அதனைச் சஞ்சீவி பருவதம் என்றும் சொல்வர். இராம இராவண யுத்தத்தில் அனுமான் இராம இலக்குவரைக் காப்பாற்றும் பொருட்டு இம் மலையையே தூக்கிக்கொண்டு வந்ததாக இராமாயணம் இயம்புகின்றது. இங்குப் பல முனிவர்கள் குகைகளில் வாழ்ந்து வருகின்றனர். இம்மலை மீது ஏறிச் சுற்றிப்பார்த்து மகிழ்ந்தோம்.

இப் பயணத்தால் நான்பெற்ற படிப்பினைகள் ஏராளம். அவற்றோடு புதிய உணர்வையும் ஐம்புல இன்பங்களையும் பெற்றேனாதலின் வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் பல இடங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள இயற்கை செயற்கை விந்தைகளைக் கண்டறிய விரும்பியுள்ளேன். நீயும், உனக்கு வாய்ப்பு ஏற்படும்பொழுது உன் நண்பர்களுடன் கன்னியாகுமரிக்குச் சென்று கண்டு களிக்கவேண்டும் என்று உன்னைத் தூண்டுவதற்காக இம் முடங்கல் எழுதினேன்.

உனதன்புள்ள,
இளங்கோ.

முகவரி:—
திரு. கலைவாணன்,
எட்டாம் வகுப்பு, அ-பிரிவு,
வள்ளலார் பள்ளி,
மாயூரம் (மயிலாடுதுறை).

வினாக்கள்

1. கன்னியாகுமரி எவ்விடத்தே அமைந்துள்ளது?
2. கன்னியாகுமரியில் காணத்தக்க அரிய காட்சி எது?
3. கன்னியாகுமரிக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?
4. இங்கு நடைபெறும் முக்கிய தொழில்கள் எவை?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகு:—

(1) மீண்டும் மீண்டும் (3) ஆதாரமாக
(2) இன்றியமையாதது (4) திரள் திரளாக

2. பிரித்து எழுதுக:—

மனப்பண்பு, பைந்தமிழ், கீழ்த்திசை,
மணக்கோலம், கண்டறிய.

---

12. ஜேம்ஸ் குக்

உலகில் மிகப்பெரிய சமுத்திரம் பசிபிக் சமுத்திரம். அதில் பல தீவுகள் உள. பதினாறும் நூற்றாண்டு வரை அவற்றைப்பற்றி ஐரோப்பியர் ஒன்றும் அறியார். பதினெட்டாம் நூற்றாண்டிலே ஜேம்ஸ் குக் என்பவர் அவற்றைக் கண்டுபிடித்தார். அவரது கப்பற் பிரயாணத்தால் ஆங்கில நாடு பெரும் புகழ் பெற்றது. நாட்டின் நன்மை கருதி அவர் மும்முறை கப்பற் பிரயாணம் செய்தார். அப்பிரயாண வரலாறு மகிழ்ச்சி தரத்தக்கதாகும். அதனை ஈண்டுப் பார்ப்போம்.

ஜேம்ஸ் குக் ஓர் எளிய குடும்பத்தினர். அவர் கி. பி. 1728-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தார். தந்தையார் ஏழைக் குடியானவராகையால் கல்வி கற்க முடியாது போயிற்று. ஆகவே தமது பதின்மூன்றாவது வயதிலேயே ஒரு சிறிய கடையில் வேலை பார்த்து வந்தார். அக்காலத்தில் கடல் கடந்து நெடுந் தூரம் சென்று திரும்பி வரும் கப்பல் தலைவர்களைக் காணுந்தோறும் அவர்களைப்போல் தாமும் மாலுமியாக வேண்டுமென்று விரும்பினார். அவர் கடையிலிருந்து விலகிக் கடற்படையில் சேர்ந்தார். நாளடைவில் அவர் தமது இடைவிடா முயற்சியால் உயர்ந்த பதவிகள் பல பெற்று இறுதியில் கடற்படைத் தலைவரானார்.

கடற்படைத் தலைவரான குக் என்பவரைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பசிபிக் பெருங் கடலிலுள்ள தீவுகளைப்

பற்றிய செய்திகளை அறிந்து வரவும் அத்தீவுகளிலிருந்து கொண்டு வானமண்டலத்தில் நிகழும் இயற்கைக் காட்சிகளைப்பற்றிக் குறிப்புகள் எடுத்து வரவும் அனுப்பினர். தலைவர் குக் 1769ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் நாள் விஞ்ஞான அறிஞரான பாங்ஸ் என்பவரோடும், தாவர நூல் வல்லுநரான டாக்டர் சோலன்டர் என்பவரோடும்,

ஜேம்ஸ் குக்

பல வேலையாட்களோடும் எண்டவர் என்னும் கப்பலில் புறப்பட்டார். அவர்கள் பதினெட்டு மாத காலத்துக்குப் போதுமான உணவுப் பொருள்களைக் கப்பலில் எடுத்துச் சென்றனர்.

இரண்டரை மாதங்கள் கடலில் பிரயாணம் செய்த பின், கப்பல் தென்னமெரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள ரியோடிஜனீரோ என்னும் துறைமுகத்தை அடைந்தது. பின்னர் அங்கிருந்து கப்பலைத் தெற்கு நோக்கிச் செலுத்தி தென்னமெரிக்காவின் தென்கோடியிலுள்ள டியோரா

டெல்பியூகோ என்னும் தீவை அடைந்தனர். பின்னர் அக்குழுவினர் அத்தீவிலிருந்து புறப்பட்டு அமெரிக்காவின் தென்முனையைச் சுற்றிக்கொண்டு 1769ஆம் ஆண்டு டஹிட்டித் தீவை அடைந்தனர். அவர்களது கப்பல் கரையை அணுகியதும் அத்தீவு வாசிகள் அவர்களை அன்புடன் வரவேற்றனர். தலைவர் குக் மாலுமிகள் சிலருடன் கரை சேர்ந்தார். அத்தீவுத் தலைவன் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான்.

டஹிட்டித் தீவின் மக்கள் வனப்புமிக்க தோற்றமும், பழுப்பு நிறமும், உயர்ந்த உருவமும் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களது பற்கள் மிகவும் வெண்மையாகவும் வரிசையாகவும் இருந்தன. அவர்கள் தினந்தோறும் மும்முறை குளித்து உடலைச் சுத்தமாக வைத்திருந்தனர். அவர்கள் உடல் முழுதும் கூர்மையான எலும்பினுல் பச்சை குத்திக்கொண்டனர். ஒருவகை முரட்டுத் துணி நெய்யவும், கோரைகளினுல் கூடை முடையவும் அவர்களுக்குத் தெரியும்.

தலைவர் குக் தமது கூட்டத்தினருடன் அத்தீவில் மூன்று மாத காலம் தங்கி, அந்நாட்டு மக்கள் நல்வாழ்க்கை நடத்த உதவிகள் செய்தார். அத்தீவு செழிப்பு மிகுந்ததாக இருந்தபோதிலும் அங்கு உணவுப் பொருள்கள் அதிகமாகப் பயிரிடப்படவில்லை. ஆதலால், குக் தாம் தென்னமெரிக்காவிலிருந்து கொண்டு வந்திருந்த கிச்சிலி, எலுமிச்சை, நாரத்தை முதலிய பழ மரங்களின் விதைகளை அங்கு நட்டார். அதனுல் தீவின் மக்கள் அவருக்கு மிகவும் நன்றி பாராட்டினுர்கள்.

குக் குழுவினர் டஹிட்டித் தீவில் கண்டறிய வேண்டிய விஞ்ஞானச் செய்திகளை எல்லாம் அறிந்து கொண்டதும், அங்கிருந்து புறப்பட்டு நியூசிலாந்து தீவின் வடகிழக்குக் கரையை அடைந்தனர். குக் தம் ஆட்களோடு கரையில் இறங்கினுர். அத்தீவிலுள்ள மக்கள் அவர்கள் அங்கு செல்வதைத் தடுத்தனர். ஆகையால் குக் குழுவினர் தற்காப்புக்காகத் தம் துப்பாக்கியை உபயோகிக்க நேர்ந்தது. அதன்

பின்னர்தான் அம்மக்கள் வழிக்கு வந்தனர். குக் குழுவினர் அத்தீவுகளைச் சுற்றிப் பார்த்தனர். நியூசிலாந்தில் இரண்டு தீவுகள் உள. தென்தீவிலுள்ள ஒரு மலையுச்சிக்கு குக் மலைமுடி எனப்பெயரிட்டனர். பின்னர் அவர்கள் தென் தீவிலிருந்து வடதீவுக்குச் சென்றனர். அவ்விரண்டு தீவுகளுக்கும் இடையே ஒரு நீர்ப்பிரிவு இருக்கிறது. அவர்கள் அதைக் குக் நீர்ச்சந்தி என்று அழைத்தனர். நியூசிலாந்து தீவுகளை விட்டு குக்கும் அவரது நண்பர்களும் மேற்கு நோக்கிச் சென்றனர். அப்பொழுது அவர்கள் அதுவரை ஒருவரும் அறியாத ஒரு நிலப்பரப்பைக் கண்டனர். அது தான் ஆஸ்திரேலியாக் கண்டம். அவர்கள் அக்கண்டத்தின் முழுப்பரப்பையும் அறிய ஆவல் கொண்டு கடற்கரையைச் சுற்றித் தம் கப்பலைச் செலுத்தினர். ஓரிடத்தில் அவர்கள் அதுவரை பார்த்திராத பல அழகிய செடி கொடிகளும் மலர்களும் காணப்பட்டன. அதனால் அக்குழுவினர் அவ்விடத்திற்குத் தாவர விரிகுடா எனப் பொருட்படும் பாடலி பே என்று பெயரிட்டனர்.

பின் தலைவர் குக் தம் துணைவர்களுடன் ஆஸ்திரேலியாவின் கடற்கரை யோரமாக ஆராய்ச்சிகள் செய்து கொண்டு சென்றனர். அங்கு அவர்கள் அதுவரை கண்டிராத பலவகைச் செடி கொடிகளையும், புல் வெளிகளையும், டக்பில், கங்காரு முதலிய விநோதமான விலங்குகளையும் ஈமு, காஸொவாரி, லயர் முதலிய வியத்தகு புள் இனங்களையும் கண்டு களித்தனர்.

பின்னர், குக் குழுவினர் ஆஸ்திரேலியாவின் வட கிழக்கு முனையைச் சுற்றிக் கப்பலைச் செலுத்தி கிழக்கு இந்தியத் தீவுகளை ஒவ்வொன்ருய்க் கடந்து, ஆப்பிரிக்காவின் தென் கோடியாகிய நன்னம்பிக்கை முனை வழியாக 1771-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12-ஆம் நாள் இங்கிலாந்து வந்தடைந்தனர். பதினெட்டு மாதங்களுக்குத் திட்டம் வகுத்த இப்பிரயாணம் முப்பத்து நான்கு மாதங்களில் முடிந்தது. இப்பிரயாணத்தில் இக் குழுவினர் பல இன்னல்களை அனுபவித்தனர்.

ஆங்கிலேயர் ஆஸ்திரேலியாவுக்கு அப்பாலும் பூ பாகங்கள் இருக்கின்றனவாவென அறிய ஆவல் கொண்டு 1772இல் அவரை மீண்டும் அனுப்பினர். அவரும் அவரது சகாக்களும் நன்னம்பிக்கை முனையைக் கடந்து தென் துருவக் கடல்களை அடைந்தனர். அங்குக் குளிர், பனி, மழை முதலியவற்றால் பல இன்னல்களும் அனுபவித்துப் பூ பாகம் எதுவும் இல்லை எனக் கண்டனர். பின்பு நியூசிலாந்துக் கருகில் பசிபிக் சமுத்திரத்தில் பல தீவுகளைக் கண்டு பிடித்தனர். இதற்குள் அவரது பெயரும் புகழும் எங்கும் பரவின.

1776 இல் இங்கிலாந்தின் அரசராயிருந்த மூன்றாம் ஜார்ஜ் என்பார் அவரை மூன்றாம் முறை வடதுருவ சமுத்திரத்தின் குறுக்கே அமெரிக்காவின் கிழக்கிலிருந்து மேற்கே போக ஒரு வழி காணுமாறு அனுப்பினார். வழியில் மிகப்பெரிய பனிக்கட்டிகள் நிறைந்து கிடந்ததனால் அவர் அம்முயற்சியில் வெற்றிபெறவில்லை. பின் பசிபிக் சமுத்திரத்தின் மத்தியிலுள்ள ஹவாய்த் தீவை அடைந்தார். அத்தீவு வாசிகள் இரவு நேரத்தில் தந்திரமாகச் சிறிய படகுகளில் வந்து கப்பலிற் புகுந்து சில பொருள்களைக் கொள்ளையிட்டனர். இதனை உணர்ந்த குக் அவர்களை எச்சரிக்கை செய்யக் கரையில் இறங்கி, அத்தீவுக்குள்ளே சென்றார். அப்போது ஒரு சிறு சண்டை ஏற்பட்டது. அம்மக்கள் அவரை அடித்து வீழ்த்தி அவரது உடம்பைக் குத்திக் கிழித்து கடலில் உருட்டினர். இவ்விதம் கடலரசராகிய குக் என்பவர் 1779 ஆம் ஆண்டு கோரமரணம் அடைந்தார். அவரது கப்பலோட்டிகள் மிகவும் வருந்தித் தம்நாடு போய்ச் சேர்ந்தனர்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய இடங்களுக்கு முதலில் சென்று, அவற்றைப்பற்றிய செய்திகளை ஆராய்ந்து வெளியிட்டவர் குக் ஆவர். ஆங்கிலேயர் ஆஸ்திரேலியாவில் குடியேறி அதைத் தம் வசம் செய்து கொள்ள இவரே காரணமாகையால் இவரது புகழ் என்றும் அழியாததாக விளங்குகின்றது.

வினாக்கள்

1. ஜேம்ஸ் குக்கின் இளமைப் பருவம் குறித்து நீவிர் அறிந்ததைக் கூறு.

2. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் குக் அவர்களுக்கு இட்ட பணி யாது?

3. டஹிட்டித் தீவு வாசிகளின் தோற்றம், வாழ்க்கை, குண நலன் முதலியவற்றைக் கூறு.

4. குக் நீர்ச்சந்தி எங்குள்ளது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

5. குக் குழுவினர் ஆஸ்திரேலியாவில் கண்ட காட்சிகள் யாவை?

6. பாடனி பே-க்கு அப்பெயர் ஏற்படக் காரணம் என்ன?

7. குக் ஆரம்பித்த முதற் கப்பற் பிரயாணம் எப்பொழுது முடிவடைந்தது? அப் பிரயாணத்தில் அவர் கண்ட பூ பாகங்கள் யாவை?

8. குக் இரண்டாவது முறை கப்பற் பிரயாணம் செய்யக் காரணம் யாது? அதன் பயன் என்ன?

9. 1776-இல் மூன்றும் ஜார்ஜ் குக்கை வேண்டிக் கொண்டது என்ன?

10. குக் எவ்வாறு மரணமடைந்தார்?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக :—

வடகிழக்கு, துறைமுகம், நெடுந்தூரம், செடிகொடி.

2. பிரித்து எழுதுக :—

மும்முறை, அத்தீவு, அங்கிருந்து, கடற்கரை.

13. செய்ந்நன்றி மறவாச் செம்மல்

'நன்றி மறவேல்' என்னும் முதுமொழிக்கேற்ப நடப்பவர்கள் உலகில் ஒருசிலரேயாவர். அத்தகையார் அனைவருள்ளத்தும் அழியா இடத்தைப் பெறுவர். அவ்வாறிடம் பெற்றவர்களுள் குந்திதேவியின் மகன் கன்னனும் ஒருவனுவான். நமது நாட்டுப் பழைமையான இதிகாசங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று வான்மீகி முனிவர் இயற்றிய வடமொழி இராமாயணம். மற்றென்று வியாசர் என்னும் முனிவர் வடமொழியில் இயற்றிய மகாபாரதம். பாரத வரலாற்றைத் தமிழிற் பாடினேர் பலர். அவர்களுள் வில்லிப் புத்தூராழ்வாரும் ஒருவர். அவரியற்றிய நூல் வில்லி பாரதம் என்று வழங்கப்படுகிறது. பாரத நூலில் வீரர்கள் பலருடைய வரலாறுகள் காணப்படுகின்றன. அவற்றுள் கன்னன் வரலாறும் ஒன்ருகும்.

பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவி இளம் பருவத்திலேயே கன்னனைப் பெற்று பெட்டியில் வைத்துப் பூட்டிக் கங்கையாற்றில் விட்டனள். துரியோதனன் தந்தையாகிய திருதராட்டினனுடைய தேர்ப்பாகன் அப் பெட்டியைக் கண்டு அதனுள்ளிருந்த கன்னனை எடுத்து வளர்த்துவந்தான். கன்னனும் "வளர்பிறை மதியைப் போல்" புகழொளியுடன் வளர்ந்து வந்தான். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதைப் போல் கன்னன் பள்ளியிற் பயிலும்போதே நுட்ப அறிவுடையவனுகவும், அனைவரும் வியக்கும் வீரமுடையவனுகவும், ஈகைக் குணமுடையவனுகவும் விளங்கினுன்.

கன்னனின் அருங்குணங்களைக் கண்டு ஆசிரியர் உட்பட அனைவரும் வியப்புற்றனர். அரவக்கொடியோனுகிய துரியோதனன் அதனை அறிந்தான். கன்னனைத் தன் உயிர்த் தோழனுகக் கொண்டான். இவனுக்கு வேண்டிய உதவியனைத்தையும் துரியோதனனே செய்து வந்தான். அதோடு நில்லாமல் தன் தம்பியர், உறவினர் முதலியவரும் கன்னனை வணங்கும்படி துரியோதனன் செய்வித்தான்.

என்ருல், அவனுடைய பெருந்தன்மை இருந்தவா றென்னே? கன்னனுக்கு அங்கநாட்டினை ஈந்து, அதற்கு அவனைத் தலைவனுகவும் ஆக்கினுன் துரியோதனன். கன்னனுடைய குலங்கோத்திரமொன்றும் தெரியாம லிருந்தும், துரியோதனன் உழுவலன்புகொண்டு, வேண்டிய சிறப்புக்கள் செய்வதற்குக் காரணங்கள் அவனுடைய அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் வில்லாண்மையுமன்ருே? இஃது இவ்வாறிருக்க,

பாரதப் போர் நடப்பதற்கு முன்பு கண்ணபிரான் குந்தி தேவியிடம் "உங்கள் எதிர்ப்பக்கமிருக்கும் கன்னன் உமது மகனுவான். அவனை உங்கள் பக்கத்தில் சேர்த்துக் கொண்டால் நடக்க விருக்கும் போர் மிக எளிதில் முடியும். ஆதலால், நீர் அவனிடம் சென்று கன்னனைப் பாண்ட வருடன் சேரும்படி உறுதிமொழி வாங்கிவாரும்" என்று கூறினுன். அவ்வாறே குந்திதேவி கன்னனிடம் சென்று கன்னன் தனது மகன் என்று ஒப்புக்கொள்ளும்படி செய்தாள். அங்கநாட்டதிபதி அகமகிழ்ந்து தன் தாயாகிய குந்தியை வணங்கி உபசரித்து இருக்கை தந்து, "தாயே, உமக்கு யாது வேண்டும்?" என்ருன். உடனே குந்தி, "கன்ன! உன் இளவல்களாகிய பாண்டவர்களோடு சேர்ந்து வாழும்படி வேண்டுகிறேன் என்ருள்.

அதனைச் செவியுற்ற கன்னன் மனம் வருந்திப் பின் வருமாறு கூறலுற்ருன். அன்னையே! நீர் கூறுவது முற்றிலும் சரியே. எனது தம்பிமார் ஐவரும் வலிமை மிகுந்தவர்கள் என்பதையறிந்து நான் பெரிதும் மகிழ் கிறேன். எனது இளையவர்களோடு சேர்ந்தால் யான் பேரரசனுகலாம் என்பதையும் உணர்வேன். ஆனல் யான், இன்னர் குழந்தையென்று தெரியாதிருந்த காலத்தில் அடியேனை அன்பு பாராட்டி நண்பனுகக் கொண்டு ஆதரவு செய்த அரவக் கொடியோனை விட்டு எங்ஙனம் பிரிவேன்? பிரிவேனுயின் என்னுயிரும் என்னுடலை விட்டுப் பிரியும்.

என்னை அங்க நாட்டிற்கதிபதியாக்கினுன். தன் தம்பியர் முதலிய அனைவரும் நாள்தோறும் வந்து எனக்குப்

பணிவிடை செய்துபோகும்படி துரியோதனன் கட்டளை பிறப்பித்துள்ளான். அவனது தண்ணளியையும் என்மீது வைத்துள்ள நட்பையும் மறத்தற்கு இயலுமோ? ஒரு நன்றி செய்தவரை உள்ள நாள் வரையிலும் மறக்கலாமா? செய்த நன்றியை மறந்தவர்களுக்கு உய்வில்லை என்று ஆன்றோர் கூறிப்போந்தனரன்றோ!

மேலும் துரியோதனன் என்னிடம் கொண்டுள்ள நம்பிக்கையை என்னவென்று சொல்வேன்? ஒருநாள் யானும் அவன் மனைவி பானுமதியும் அந்தப்புரத்தில் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தோம். அந்த வேளையில் துரியோதனன் அவண் வந்தான். அவன் வரவை நான் கவனிக்கவில்லை. பானுமதி அவனைக் கண்டு மரியாதைக்காக விளையாட்டை விட்டு எழுந்தாள். அதனை அறியாத நான் அவளை உட்காரும்படி செய்ய அவளது ஆடையைப் பற்றி இழுத்தேன். அப்போது அவள் இடையில் அணிந்திருந்த மேகலை அறுந்து முத்துக்கள் கீழே சிதறின. துரியோதனன் என் முன் தோன்றினன். அவன் புன்சிரிப்புடன் "அண்ணா! இம்மணிகளை எடுக்கவோ? கோக்கவோ?" என்று அன்புடன் கேட்டான். அவன் என்ன நினைப்பானோ என்னை யாது செய்வானோ என்று அஞ்சி நெஞ்சம் பதைத்தேன். உடலும் உள்ளமும் நடுங்கின. எனது நிலையறிந்த துரியோதனன், "அண்ணா! அஞ்சற்க" என்று ஆறுதல் கூறினன். என்மீது அவன் சிறிதும் ஐயுறவில்லை. அதனை எண்ணுந்தோறும் வெண்ணெய்க் குன்றெரியுற்றாற்போல் என் நெஞ்சம் நெக்குருகுகின்றது. இவ்வாறு அளவற்ற அன்பும் நம்பிக்கையும் உடைய துரியோதனனை விட்டுப் பிரிந்து பாண்டவர்களோடு சேர்ந்து வாழ்வது அறமாகுமா? என்றான்.

கன்னனது வார்த்தைகளைச் செவியுற்ற குந்திதேவி பின்பு நடக்க இருக்கும் போரை எண்ணிப் புலம்பினாள். அப்போது கன்னன் "தாயே! தாங்கள் என்னைப் பெற்ற நாளில் பழிக்கஞ்சி ஆற்றில் விட்டீர்கள். இப்பொழுது வருந்துவதால் யாது பயன்? வேறேதேனும் வேண்டுமாயின் கேளுங்கள்; தருகிறேன்" என்றான். அது கேட்ட

குந்தி, "மகனே! நடக்கவிருக்கும் பாரதப் போரில் உன் தம்பியர் ஐவருள் அருச்சுனனைத் தவிர மற்றவரிடம் உன் வலிமையைக் காட்டலாகாது. அருச்சுனனுடன் போர் புரியும்போது உன்னிடம் இருக்கும் நாகாஸ்திரத்தை அவன் மீது ஒரு முறைக்குமேல் செலுத்தலாகாது. இவ்விரண்டு வரங்களையும் எனக்கு நீ தர வேண்டும்" என்று வேண்டினாள். கன்னன் அவ்வாறே செய்வதாக வாக்களித்தான்.

பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் கடுமையாகப் போர் நடந்து கொண்டிருந்தது. பதினேழாம் நாள் நடைபெற்ற போரில் கன்னன் படைத்தலைமை தாங்கி அருச்சுனனுடன் போராடினான். அவனது வில்லம்புகள் கன்னன் உடம்பெல்லாம் தைத்துப் புண்ணாக்கின.

கன்னன் மிகவும் களைப்படைந்தான். தருமம் தலை காக்குமாதலின் அவன் செய்த புண்ணியம் அவனது உயிர் நீங்காதவாறு காத்து நின்றது. அதனை அறிந்த கண்ணபிரான் அருச்சுனனைப் போரை நிறுத்துமாறு சொன்னான். வயது முதிர்ந்த முனிவனாக வேடங் கொண்டான். களைப்பால் தேர்ச் சக்கரத்தின்மேல் சாய்ந்து கொண்டிருந்த கன்னனிடம் வந்தான்.

கன்னனை நோக்கி "வள்ளலே! யான் மேரு மலையில் தவம் செய்யும் தவசியாவேன். வறுமை நோயால் அல்லலுற்றேன். நீ ஏழைகளுக்கிரங்கி வேண்டியவற்றைக் கொடுக்கிறாய் என்று கேள்வியுற்று இவண் வந்துள்ளேன். இக்கணமே ஏதேனும் கொடுப்பாய்" என்றான். அதனைக் கேட்ட கன்னன் நன்று என நகைத்து, "இங்குத் தரத் தகுந்த பொருளை நீ கேள்" என்றான். உடனே கண்ணபிரான் "வள்ளலே நீ இதுகாறும் சேகரித்து வைத்துள்ள புண்ணிய மனைத்தையும் கொடு" என்று கேட்டதும் கன்னன் மிகவும் உள மகிழ்ந்து,

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெல்லாம் நயக்கும்
பக்குவந் தன்னில் வந்திலையால்

ஒவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன்; கொள்க நீ; உனக்குப்
பூவில்வா ழயனும் நிகரல னென்ருற்
புண்ணியம் இதனினும் பெரிதோ"

என்று கூறி இறைஞ்சினன்.

அதனைக் கேட்ட கண்ணபிரான் கன்னனிடம் தாரை வார்த்துக் கொடுக்கும்படி கூறினன். அதுகேட்டு மகிழ்ந்த கன்னன் போர்க்களத்து நீரில்லாமையால் தன் மார்பில் தைத்திருந்த அம்பொன்றைப் பறித்தான். அது தைத்திருந்த புண்ணின் வழியே குருதி பெருகிற்று. அந்த இரத்தமாகிய செந்நீரால் முனிவன் கையில் தாரை வார்த்துக் கொடுத்தான். முன்னமோர் அவுணன் செங்கை நீரைப் பெற்று அவனை அழித்த கண்ணபிரான் அங்கையில் ஏற்று "கன்ன! உனக்கு யாது வரம் வேண்டும்? செப்புவாய் என்ருன்"

அதற்குக் கன்னன், "மாதவ! இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையாத இதயத்தை எனக்கு அளித்தருள்க" என, கண்ணபிரானும் அவ்வாறே யாகுக என்று கூறி விடைபெற்ருன்.

வினுக்கள்

1. கன்னன் யாரிடம் வளர்ந்து வந்தான்?
2. துரியோதனன் கன்னனை ஆதரிக்கக் காரணம் யாது?
3. கண்ணபிரான் குந்திதேவியிடம் கூறிய உபாயம் யாது?
4. குந்திதேவியிடம் கன்னன் கூறிய மறுமொழி யாது?
5. குந்தி கன்னனிடம் கேட்ட உறுதிமொழி யாது?
6. கன்னனது உயிர்போக கண்ணபிரான் செய்த சூழ்ச்சி யாது?
7. கன்னன் தனது புண்ணியமனைத்தையும் கண்ணபிரானுக்கு எவ்வாறு கொடுத்தான்?
8. கன்னன் கண்ணபிரானிடம் கேட்ட வரம் யரது?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்து எழுதுக:—

முற்றிலும், கட்டளை, உறுதிமொழி, தருமம் தலை காக்கும்.

2. பிரித்தெழுதுக:—

அரவக்கொடி, பேரரசன், குற்றுயிர், இரப்புரை.

---

14. தைரியநாதரும் தமிழ்த் தொண்டும்

தமிழன்னைக்குப் பல்வேறு சமயங்களில் பல்வேறு மதத்தினரும், பல்வேறு நாட்டினரும் அருந்தொண்டுகள் பல புரிந்து வந்துள்ளனர். சீவக சிந்தாமணி என்னும் சீரிய நூலை இயற்றியவர் சைனமதப் புலவராகிய திருத்தக்க தேவராவர். மணிமேகலை என்னும் சுவை மிகு நூலை எழுதியவர் மற்றொரு சைனமதப் புலவராகிய கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். புத்த மதத்தைச் சேர்ந்த புத்த மித்திரன் என்னும் பெரியார் இலக்கண நூலாகிய வீரசோழியத்தைச் செய்தார்.

இதுபோலவே மேலை நாட்டு நல்லறிஞர் பலர் தமிழகத்திற்கு வந்து தமிழ்ப்பணி செய்துள்ளார்கள். அவர்களுள் இத்தாலிய தேசத்து வித்தகராகிய கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் பெரியார் குறிப்பிடத்தக்கவராவார். இவரைத் தமிழ் உலகம் வீரமாமுனிவர் என்று போற்றுகின்றது. இவர் இத்தாலிய நாட்டில் காஸ்திக்கிலியோனே என்னும் ஊரில் கி. பி. 1680ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் பிறந்தார். இப்பெரியார் இளமையிலேயே தெய்வ பக்தியிற் சிறந்து விளங்கினர்.

இத்தாலிய தேசத்தின் தலைநகராகிய உரோமாபுரியில் உரோமானியர் கல்லூரியில் பயின்று தேர்ச்சியுற்றார். பெஸ்கியார் துறவற நிலையை விழைந்து சேசு சபையிற் சேர்ந்தார். பரிசுத்த பாப்பானவர் இவரையும், ஆர்நால்டு

என்ற மற்றெருு துறவியையும் தேர்ந்தெடுத்து மத போதனையின் பொருட்டுப் பரத கண்டத்திற்கு அனுப்பி வைத்தனர்.

துறவியரிருவரும் கி. பி. 1700ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசியரின் தலைநகரும், நம் நாட்டின் மேற்குக் கடற்கரையிலுள்ளதுமாகிய கோவா என்னும் பட்டினத்தில் வந்திறங்கினார்கள். இருவரும் அந்நகரில் சில நாட்கள் தங்கியிருந்து, சில திட்டங்களை வகுத்துக்கொண்டு, ஆர்நால்டு என்ற துறவியார் மலையாள நாட்டிற்கும், பெஸ்கியார் தமிழ் நாட்டிற்கும் போந்தனர்.

வீரமாமுனிவர்

இவர் தமிழ் நாட்டிலுள்ள பல பெரிய நகரங்களையும் சுற்றிப் பார்த்து இறுதியில் மதுரைமாநகரைத் தாம் வதியுமிடமாகக் கொண்டனர். தென்னாட்டிலுள்ள மொழிகளைப் பயின்றாலன்றி மக்களுடன் சேர்ந்து உரையாடி வாழ முடியாதென்பதை அறிந்தார். இவர் சுப்பிர தீபக் கவிராயரைத் தம் தமிழாசிரியராகக் கொண்டு தமிழிலுள்ள

ஐந்திலக்கணங்களையும், சங்க நூற்கள் முதலான இலக்கியங்களையும், தனிப் பாடல்களையும் படித்துத் தமிழ் மொழியில் பெரும் புலவரானார். திருக்குறளின் தெள்ளிய நயமும், சிந்தாமணியின் செழுஞ் சுவையும், கம்ப ராமாயணத்தின் கல்வி யின்பமும் அவர் மனத்தைக் கவர்ந்தன. சிந்தாமணியைப் போல் கிருஸ்து மதச் சார்பாக ஒரு பெருங் காவியம் செய்ய அவர் ஆசைப்பட்டார். அவ்வாசையின் பயனே தேம்பாவணி என்னும் தீந்தமிழ்க் காவியம்.

இவருக்கு முன்னரே மேல் நாட்டிலிருந்து தமிழகம் வந்து, கிறிஸ்தவ மதக் கொள்கைகளைப் போதித்தும் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்தும் வந்த அறிஞர் பெருமக்கள் தமிழ் மொழியையும், வடமொழியையும் பயின்று பெரும் புலவர்களாக விளங்கினார்கள். தமிழ்நாட்டு மக்களைத் தம்முடைய மதத்திற் சேர்ப்பதற்காகத் தமிழ்நாட்டுத் துறவியைப் போன்று உடுத்தியும், தமிழர் உணவைக் கைக்கொண்டும் தமிழரை ஒப்பத் தமிழ் மொழியே பேசியும் வந்தார்கள்.

அவர்களுடைய நடையுடை பாவனைகளால் தமிழ் நாட்டில் கிறிஸ்தவ மதம் எளிதில் பரவியது. அதனையறிந்த பெஸ்கியாரும் தம்முடைய மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களைத் துறந்து, தமிழருடைய பழக்க வழக்கங்களை மேற்கொண்டார். "ஒரு பொழுது உண்பவர் யோகியே" என்ற முதுமொழிக் கிணங்க நாடோறும் ஒரு வேளை மட்டும் உணவருந்தினார். ஊனுணவை வெறுத்துத் தள்ளினார். இந்து மதத் துறவிகள் போல் இடையில் காவித்துணியை உடுத்திக் கொண்டார். இவர் வெளியில் புறப்படும்போது தலைப்பாகையையும் உடலில் காவி நனைத்த அங்கியையும் அணிந்து கொள்வார்.

நமது நாட்டு ஆதீனத் துறவிகள் போல் காதுகளில் விலை மிகுந்த முத்துக்களும் சிவந்த கற்களும் பதித்துச் செய்யப்பட்ட கடுக்கன்களை அணிந்திருப்பார். சுட்டுவிரலில் மாற்றுயர்ந்த பசும் பொன்னாலாகிய கணையாழி இலங்கும். வெள்ளியினால் செய்த சிங்கமுகப் பூண் அணிந்துள்ள ஒரு

நீளத் தடியைக் கையில் வைத்திருப்பார். இத் தோற்றம் தமிழ் மக்கள் மனத்தை எளிதில் கவர்ந்தது.

கிறிஸ்து மத சேவையில் ஆர்வம் மிக்க பெஸ்கி அவர்கள் கொள்ளிடத்திற்கு வடகரையிலிருக்கும் திருக்காவலூர் என்னும் ஏலாக்குறிச்சியில் ஒரு சிறந்த கோயிலைக் கட்டி முடித்தார். அக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் மாதாவுக்கு அடைக்கலமாதா என்று பெயர். அவ்வூரின் பெருமையை பக்தர்கள் அறிந்து இன்புறும் வண்ணம் "திருக்காவலூர்க் கலம்பகம்" என்னும் பிரபந்தம் பாடினர். இவர் ஒவ்வொருநாளும் தமிழ் நூல்களை ஆர்வத்துடன் கற்று புதிய புதிய தமிழ் நூல்களை இயற்றுவதையும் மத போதனை புரிவதையும் தமது கடமையாகக் கொண்டவர். தமிழில் வீரம்பொருந்திய பல சொற்பொழிவுகளை ஆற்றி வந்தாராதலின் நம் நாட்டினர் இவரைத் தைரியநாத சுவாமி என்று அழைத்தனர். அப்பெயரே பின்னர், வீரமா முனிவரெனத் தமிழ்ப் பெயராயிற்று. அடைக்கலமாதாவின் திருவடிகளில் வீரமாமுனிவர் அணிந்த கலம்பகப் பாமாலை சிறந்த தமிழ் மணம் கமழ்வதாகும்.

திருக்காவலூரில் வீரமாமுனிவர்க்கு இருந்த அன்பு குலசேகராழ்வாருக்குத் திருவேங்கட மலையில் இருந்த அன்பிற்குச் சமமாகும். மன்னர் மரபிலுதித்த குலசேகராழ்வார் மண்ணரசையோ விண்ணரசையோ விரும்பினாரில்லை. திருமால் எழுந்தருளியுள்ள திருவேங்கடத்தில் மரமாக நிற்கவும், படியாகக் கிடக்கவும், ஆறாகப் பாயவும் மீனாகத் துள்ளித் திரியவும் ஆசைப்படுகிறார். இத்தகைய ஆவல் வீரமாமுனிவரது பாடலிலும் காணப்படுகின்றது. திருக்காவலூர்ச் சோலையில் புல்லாக நிற்கவும், வண்டாகத் திரிந்து தேன் உண்டு தெள்ளிய கீதம் பாடவும் ஆவல் கொள்கின்றார் வீரமா முனிவர். ஆகவே ஆழ்வாரும் முனிவரும் அவரவரது சமய வழிபாட்டில் ஆழ்ந்த அன்புள்ளவர்கள் என்பது அவர்களது அருந்தமிழ்ப் பாடல்களால் புலனாகின்றது.

"தேனார் பூஞ்சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

என்பது குலசேகரர் வாக்கு.

"கேள் அணிந்த காவல்நலூர்க் கிளர்புனத்துப்
பசும்புல்லாய்க் கிடவேன் நானே"

என்பது வீரமாமுனிவரது வாக்கு.

வீரமாமுனிவர் தமிழ்த்தாய்க்கு வாடாத மாலையாகப் பாடித்தந்தது முன் குறிப்பிட்ட தேம்பாவணியாகும். அது யேசுநாதரைக் கைத்தாதையாக வளர்த்த சூசையப்பர் வரலாற்றைத் தெற்றென விளக்குவது. மேலும் முனிவர் அடைக்கல மாலை, அன்னையழுங்கலந்தாதி முதலிய செய்யுள் நூல்களையும், வேதியரொழுக்கம், வேதவிளக்கம், பேதகமறுத்தல், திருச்சபைக் கணிதம் முதலிய உரைநடை நூல்களையும், கொடுந்தமிழிலக்கணம், தொன்னூல் விளக்கம் முதலிய இலக்கண நூல்களையும் தமிழர் அனைவர்க்கும் பயன் தரக்கூடிய பரமார்த்த குரு கதை, சதுரகராதி முதலிய நூல்களையும் இயற்றினார்.

நமது நாட்டில் முனிவரியற்றிய அகராதி வருவதற்கு முன் சேந்தன் திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகள் செய்யுள் முறையிலிருந்தன. ஆதலால் முனிவரது அகராதி நூலே தமிழ் நாட்டிற்கு முதலகராதி ஆகும். பிற்காலத்தில் தமிழர்கள் தமிழ் அகராதி எழுதுவதற்கும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களின் சாரத்தைத் திரட்டி சிறு இலக்கண நூல் உரை நடையில் எழுதுவதற்கும் வீரமாமுனிவரே வழிகாட்டியவராவர்.

பண்டைய நாட்களில் குற்றெழுத்திற்கும் நெட்டெழுத்திற்கும் வேறுபாடின்றி எழுதி வந்தார்கள். அவ்வாறு எழுதுங்கால் குற்றெழுத்துக்களுக்கு மேல் புள்ளியைப் பெய்து எழுதுவர். அக்காலத்தில் காகிதங்களும், அச்சியந்திரங்களும் இன்மையால் பனை யோலைகளில் எழுத்தாணியால் எழுதிப்படித்து வந்தார்கள். பனையோலை

களில் எழுத்தாணியால் எழுதும்போது, குற்றெழுத்துக் களுக்கு மேலே புள்ளிவைத்தால், ஓலை கிழிந்துவிடும். அதனால், அக்குற்றெழுத்துக்களுக்கு மேலே புள்ளியை வைக்காமல் எழுதினர்கள். ஆதலால், படிக்கும் மக்கள் குற்றெழுத்துக்கும் நெட்டெழுத்துக்கும் வேறுபாடு தெரியாமல் இடர்ப்பட்டுப் படித்து வந்தனர். இக்குறை பாட்டை நீக்குவதற்காக, தற்காலத்தில் குற்றெழுத்துக் களையும் நெட்டெழுத்துக்களையும் நாம் எழுதுமாறு போல முதன் முதல் எழுதியவர் நம் முனிவரேயாவார்.

இவ்வாறு பல வகையில் தமிழ்த் தொண்டு ஆற்றிய முனிவர் தமது அறுபதாம் வயதில் அம்பலக் காட்டிலுள்ள கிருஸ்தவ மடத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அப் பெரியாரைப் போல் நாமும் இறைவழி நின்று பிறர் நலம் நாடலே நாம் அவருக்குக் காட்டும் நன்றியாகும்.

வினாக்கள்

1. தமிழன்னைக்குப் பல்வேறு மதத்தினரும் செய்துள்ள அருந்தொண்டுகள் யாவை?
2. தைரியநாதரின் இயற்பெயர் யாது? அவர் எங்கு எப்பொழுது பிறந்தார்?
3. தைரியநாதர் தமிழ் நாட்டில் எவ்வித வாழ்க்கை நடத்தி வந்தார்.
4. தைரியநாதர் தமிழுக்குச் செய்த அரும்பணிகள் யாவை?
5. தைரியநாதரது மற்றொரு பெயர் என்ன?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக:—

நடையுடைபாவனை, பழக்கவழக்கம்.

2. பிரித்து எழுது:— தமிழ்ப்பணி, மாற்றுயர்ந்த, அவரவர், வடகரை.

15. ஆதிரை

முற்காலத்தில் சோழநாட்டின் தலைநகராய் விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திலே சாதுவன் என்ெருரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி ஆதிரை என்பவள். அவள் கற்பிலும் பொற்பிலும் சிறந்திருந்தாள். இருவரும் மலரும் மணமும்போல மனமொத்து இல்லறம் நடத்தி இன்புற்றனர்.

சிறிது காலத்தில் சாதுவன் தீய நடத்தையுடையவனுனன். அதனல், அவன் தன் மனைவியைவிட்டு அகன்ருன். சிலநாட்களில் தன்னிடமுள்ள பொருள்களை எல்லாம் இழந்து வறியவனுனன். அப்பொழுது தான் அவன் நல்லறிவுபெற்ருன். இழந்த பொருளைத் தேட நினைத்தனன்; தன் மனைவி ஆதிரையிடம்,“நான் திரைகடல் ஓடித் திரவியம் தேட எண்ணியுள்ளேன், சின்னுளில் திரும்பி வருவேன்” என்று கூறி, அவ்வூரிலிருந்து புறப்பட்ட வணிகர் கூட்டத்தோடு கப்பலேறிச் சென்ருன். ஆதிரையும் மனந்தேறித் தன் கணவன் மீண்டுவரும் நாளை எதிர்பார்த்து இருந்தாள்.

சாதுவன் ஏறிச்சென்ற மரக்கலம் காரிருள் சூழ்ந்த இடையாமத்துச் சூருவளியினல் அலைப்புண்டு, நடுக்கடலில் உடைபட்டது. அக்கப்பல் உடைந்து சிதறிய பாய்மரத் துண்டைப்பற்றிக்கொண்டு சாதுவன் அலைகளால் நாக நாட்டின் கரையில் ஒதுக்கப்பட்டான். நீரில் நீந்திய களைப்பால் அவன் அங்கே ஒரு மர நிழலிற் படுத்து அயர்ந்து உறங்கிவிட்டான்.

உடைந்த மரக்கலத்தினின்றும் சாதுவனைப் போலவே தப்பிப் பிழைத்த வணிகர் சிலர், காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தனர். காரிருளில் கப்பல் உடைந்தது. ஆதலின், சாதுவன் உயிர்தப்பிய செய்தியை மற்றவர் அறியார். உடைந்த கப்பலுடன் உயிரிழந்தவர் பலர். அவரோடு சாதுவனும் இறந்தான் என்ற செய்தியை ஊரில் உரைத்தனர். இதனைக் கேள்வியுற்ற ஆதிரை அழுதாள்;

அலறினுள்; "ஐயோ! பொருள்தேடச் சென்று உம் ஆருயிரைப் பறி கொடுத்தீரே! நான் இனி ஒரு கணமும் உயிர்வாழேன்! உம்மை வந்து அடைவேன்!" என்றுகூறித் தீப்புகத் துணிந்தனள். ஊரார் எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவள் தீக்குளிக்க முனைந்து நின்ருள்.

ஆதலால், அவள் வெறிகொண்டவள் போலச் சுடலைக்கு ஓடினுள்; விறகினை அடுக்கித் தீ மூட்டி ஊரவர் எல்லாரும் கூடியிருக்க அதில் பாய்ந்தாள். தீ, கொழுந்து விட்டு எரிந்தது. ஆனல், அத்தீ அவளை எரிக்கவில்லை. அவள் உடுத்த கூறையும், பூசிய சந்தனமும், முடித்த கூந்தலிற் செருகியிருந்த மலரும் தீப்புகுமுன் இருந்தவாறே இருந்தன. ஆதிரை, 'தீயும் சுடாத தீவினையேன்!' என்று தன்னையே நொந்துகொண்டு அழுதாள். அவ்வமயம் ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது. அது, "ஆதிரையே, கேள்: உன் கணவன் இறந்திலன்; என்று கூறிற்று. அதுகேட்ட ஆதிரையும் அழுதுயர் நீங்கிப் பொய்கையில் நீராடிச் செல்வதுபோலத் தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனள். இவ்வதிசயம் எல்லாம் கண்ட ஊரிலுள்ள பெண்டிரனைவரும் அவளது கற்பின் திறத்தை வியந்து கொண்டாடினர்.

அவள் செய்தி இவ்வாறு இருக்க, உறங்கிக்கொண்டிருந்த சாதுவன் என்ன ஆனுன் என்பதைப் பார்ப்போம்: அம்மலையிலுள்ள நாகர் சிலர் தமக்கு நல்ல உணவாவனென்றெண்ணி அவனை எழுப்பினர். அந்நாகர் நாகரிகம் அற்றவர். ஊனையும் கள்ளையும் உணவாகக் கொண்டு வாழ்பவர். அவர்கள் அவனிடம் ஏதேதோ சொன்னுர்கள். சாதுவன் அவர்களுடைய மொழியைக் கசடறக் கற்றிருந்ததால், அவர்கள் பேசியதைஅறிந்து கொண்டான். அவர்கள் தங்கள் தலைவனிடம் வரும்படி சாதுவனை அழைத்தார்கள். அவர்களுடைய அழைப்பிற் கிணங்கி அவன் சென்ருன்.

அந்நாகர் தலைவன் இழிந்த வாழ்வு வாழ்வதைச் சாதுவன் கண்டான். அத் தலைவனுக்கு வாழ்க்கையின் நிலையாமையையும், அறத்தின் அவசியத்தையும் உபதேசித்

தான்; வேறு சில ஐயங்களேயும் தீர்த்துத் தன் நாடு செல்ல விடை பெற்றுக்கொண்டான். தங்கள் தாய்மொழியிலே நல்ல அறிவுரைகளேச் சாதுவன் சொல்லக் கேட்ட அத் தலேவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லே. அவன் சாதுவனுக்கு சந்தனம், அகில், துகில் முதலியன கொடுத்து அனுப்பினுன். சாதுவன் பல பரிசுகளுடன் வங்கத்தில் ஏறித் தன் நாட்டை அடைந்தான். நகரத்தாரும் ஆதிரையும் அவனே எதிர்கொண்டு உபசரித்து அழைத்துச் சென்றனர். சாதுவன் ஆதிரையோடு பல தானங்களேச் செய்து இல்லறம் இனிது நடத்தி வந்தான்.

விஞக்கள்

1. ஆதிரை என்பவள் யார்?

2. சாதுவன் கப்பலேறிச் சென்ற பொழுது ஏற்பட்ட விபத்து யாது?

3. தன் கணவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்ட ஆதிரை என்ன செய்தாள்?

4. ஆதிரையை ஊரார் தெய்வமெனக் கொண்டாடக் காரணமென்ன?

5. சாதுவன் நாகர் தலேவனே எவ்வாறு வசப்படுத்தினுன்?

6. இப்பாடத்தால் நீ அறியும் நீதி யாது?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்துப் பழகுக :—
   மலரும் மணமும் போல, சூருவளி, எதிர் கொண்டு, வியந்தனர்.

2. பிரித்து எழுதுக :— அந்நாகர், மரத்துண்டு, கசடற, அழைப்பிற்கிணங்கி.

16. வாஞெலி

மக்கள் அறிவு திருந்திய காலந்தொட்டு வாழ்வினை ஒழுங்குபடுத்தி வந்திருக்கிருர்கள். வாழ்க்கையில் நேரும் இன்னல்களை தமது அறிவின் வன்மையால் பல வழிகளில் மாற்றி யிருக்கிருர்கள். வாழ்வுக்கு வேண்டும் பொருள்களை இயற்கைச் சக்திகளின் துணையைக் கொண்டு அவ்வப் போது புதிது புதிதாகச் செய்து வருகின்றனர். இவ்விதம் நித்தம் புத்தம் புதிய பொருள்களை ஆராய்ச்சியாளர் தோற் றுவிப்பதற்கு முதற் காரணமாயிருப்பது மின்சாரம் என்னும் இயற்கைச் சக்தியாகும். மின்சார சக்தியால் அமைக்கப் பட்ட அரும் பொருள்களுள் வாஞெலி எனப்படும் ரேடியோ ஒன்ருகும்.

பதினெரும் நூற்ருண்டின் தொடக்கத்தில் மின்சார அறிஞர்கள் பலர் தந்தி அனுப்புவதற்கு மின்சாரக் காந்தம் இன்றியமையாதது எனக் கண்டுபிடித்தனர். மின்சார சக்தி யின் உதவியால் அவசரச் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குக் குறிப்பிட்ட ஓசைகளின் மூலம் செப்புக் கம்பிகளின் வாயிலாக அனுப்பும் முறையை மோர்ஸ் என்னும் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி கண்டுபிடித்தார்.

மார்க்கோனீ

நிலத்தில் தூண்கள் நட்டுக் கம்பிகள் போடுவது எளிது. ஆனல், பெருங்கடலைத் தாண்டிச் செய்திகள்

அனுப்புவதற்கு இம்முறை ஏற்றதல்ல. ஆகவே, மார்க் கோனி என்னும் விஞ்ஞானி இரண்டு ஆண்டுகள் இரவும் பகலும் ஆராய்ந்து 1896இல் மின்சார அலைகளால் செய்தி அனுப்பும் கருவியைக் கண்டுபிடித்தார். இக்கருவியே வானொலி எனப்படும் ரேடியோ ஆகும்.

இக்கருவி பல்லாயிரங் கிலோ மீட்டர்களுக்கப்பால் பேசப்படுவதை இங்கு நமக்கு எவ்வாறு அறிவிக்கின்றது என்பதை ஆராய நமக்கு வியப்பாகத்தானிருக்கும். நாம் ஒரு குளத்தினருகே இருந்து கொண்டு கல் ஒன்றை எடுத்து அந்நீரில் போட்டால், அக்கல் விழுந்த இடத்தி லிருந்து வட்டமான சிறு அலைகள் உண்டாகின்றன அல்லவா? அவை வட்டமாக அகன்று கொண்டே போய்க் கரையை அடைந்ததும் தடைப்பட்டு மறைந்துவிடுகின்றன. அதுபோலவே காற்றிலும் அலைகள் உண்டாகின்றன.

காற்று, ஒலி அலைகளை நாலா பக்கங்களிலும் பரவச் செய்கின்றது. இந்த ஒலி அலைகள் ஒரு வகையான கருவி யின் மேல் தாக்குகின்றன. அக்கருவியானது அவற்றைத்



வானொலி

தன்பால் இழுத்துக் கொண்டு பன்மடங்கு அதிகமாகவே வெளிப்படுத்துகிறது. இவ்வாறு வெளிப்படுத்துவதை நாம்

எப்படிக் கேட்பது என்று நீங்கள் கேட்கலாம். நாம் பேசு கின்ற குரல்கள் எல்லாம் ஒரே வகையாக இருப்பதில்லை. அதுபோலவே அவ்வொலிகள் யாவும் ஒரே மாதிரியாக இரா. ஆகையால் அந்தந்த ஒலியின் தன்மைக்குத் தக்கபடி அதை ஏற்றுக்கொள்ளும் கருவியும் அமைக்கப்பட்டிருக்கும். இந்தக் கருவிதான் நாம் கேட்கும் ஒலியை வெளிப்படுத்து கிறது. ஆனால் இவ்வொலியை நாம் நேரே காண முடியாது. இத்தகைய ஒலிகள் ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர் களுக் கப்பாலிருந்தும் சமீபத்திலிருந்தும் வருவதுண்டு. எப்படிப்பட்ட ஒலியையும் இந்தக் கருவி கிரகித்து, நாம் கிராமபோனில் கேட்பதுபோலக் கேட்கும்படிச் செய் கின்றது.

ஆகவே, ஒலி பரப்பும் செயலில் "ஒலியைக் கிரகிக் கும் கருவி" என்றும், "ஒலியை நாம் கேட்கும் வண்ணம் வெளியாக்கும் கருவி" என்றும் இரண்டு கருவிகள் இருக் கும். இந்த இரண்டும் இருந்தாலொழிய நாம் ஒலியைக் கேட்க இயலாது.

அரசியலார் சென்னை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் அகில இந்திய வானொலி நிலையங்கள் ஏற்படுத்தி யுள்ளனர். இவ்விடங்களிலிருந்து ஒலி பரப்பப்படுகிறது. இது எவ்வாறு அனுப்பப்படுகிறது என்றால், இவ்வொலியைப் பரப்பும் கருவி ஓர் அறையில் வைக்கப்பட்டிருக்கும். அவ்வறை நன்றாக மூடப்பட்டிருக்கும். பாடகர்கள் அந்தக் கருவியின் எதிரிலே அமர்ந்து பாடுவர்; பேசுபவர்கள் பேசு வார்கள்; வாத்தியங்கள் முழங்கும். அந்தக் கருவி இவைகளை எல்லாம் கிரகித்து வெளியே அனுப்பும். அந்த ஒலியைப் பன்மடங்கு பெருக்கி எல்லோரும் கேட்கும்படி செய்வதுதான் ஒலி பரப்பி என்பதாகும். அரசாங்கத்தார் பொதுமக்கள் கேட்டு இன்புறுமாறு இக் கருவிகளைப் பொது இடங்களிலும் அமைத்துள்ளார்கள்.

வானொலியால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பல வாகும். நடுக்கடலில் செல்லும் மரக்கலங்களுக்கும், வானத் தில் செல்லும் விமானங்களுக்கும் செய்திகள் அனுப்பலாம்.

கப்பலோ விமானமோ ஆபத்துக்குள்ளாகும் நேரத்தில் அதில் உள்ளவர்கள் வானொலி வாயிலாகத் தம் நாடுகட்குத் தெரிவித்து உதவி பெற்றுக்கொள்ளலாம். உலகத்தில் அன்றாடம் நடக்கும் செய்திகளை வானொலி விரைவில் பரப்புகிறது; கால நிலைகளையும், பொருள்களின் விலை விவரங்களையும் அறிவிக்கின்றது. உலக மக்களின் இன்பத்தைப் பெருக்குவதற்கும் வானொலி ஏற்ற கருவியாய் இருக்கிறது. கதைகள், நாடகங்கள், இன்னிசைகள், சொற்பொழிவுகள், அறிவுரைகள் முதலியவற்றையும் எல்லா மக்களும் ஒரே சமயத்தில் கேட்டுப் பயனடையலாம். இக்காலத்தில் வானொலி உலகத்துக்குப் பற்பல நன்மைகளைப் புரிந்து வருகின்றது. பள்ளிக் கல்விக்குங் கூட வானொலி பேருதவியாக இருப்பதை உங்களில் சிலர் அறிந்திருக்கக் கூடும். தொடக்கநிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி முதலியவற்றிற்கு ஏற்ற வகையில் கல்வி பற்றிய செய்திகளும் வாரந்தோறும் ஒலி பரப்பப்படுகிறது. இன்னும் அதிகமாக வருங்காலத்தில் வானொலி நமது கல்விக்குப் பேருதவி செய்யக்கூடும் என்று நாம் உறுதியாய்க் கூறலாம்.

வினாக்கள்

1. மக்கள் தம் வாழ்வுக்கு வேண்டும் பொருள்களை எவ்விதம் செய்து வருகின்றனர்?
2. ஆராய்ச்சியாளர் புதிய பொருள்களைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாயிருப்பது எது?
3. மோர்ஸ் என்னும் அறிஞர் கண்டு பிடித்ததென்ன?
4. ரேடியோ யாரால் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?
5. காற்றிலும் அலைகள் உண்டு என்பதை விளக்குக.
6. வானொலியில் அமைக்கப்பட்டுள்ள கருவிகள் யாவை? அவற்றின் வேலைகள் யாவை?
7. ஒலி எவ்வாறு பரப்பப்படுகிறது.
8. வானொலியால் உண்டாகும் பயன்கள் யாவை?

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்துப் பழகுக:—

   வாராவாரம், சொற்பொழிவு, அறிவுரை.

2. பிரித்து எழுது: —

   செப்புக்கம்பி, அவ்வொலி, மரக்கலம்.

17. ஒளவையார் தூது — (சிறு நாடகம்)

காட்சி — 1.

உறுப்பினர் :— ஒளவையார், அதியமான்

இடம் :— அதியமான் அரண்மனை

பொழுது :— மாலை நேரம்

அதியமான் :— அம்மையே! வருக! வருக! இதோ! இந்த ஆசனத்தில் அமர்க! மிகுந்த களைப்புடன் வருகிறீர்களே! எங்கேனும் நீண்டதூரம் நடந்து போனீர்களா?

ஒளவையார் :— வள்ளலே! வணக்கம். நீ நீடூழி வாழ்க! காஞ்சித் தொண்டைமானைப்பற்றி ஏதோ என் காதில் விழுந்தது. அதன் உண்மையை அறிய ஊரெங்கும் சுற்றி வந்தேன். சிறிது களைப்பாக இருக்கிறது.

அதியமான் :— தாயே! தாங்கள் இந்தத் தள்ளாத வயதில் இப்படி அலைய வேண்டுமா? அந்தச் செய்திகளை அறிந்துவர நம் நாட்டில் எத்தனை ஒற்றர்கள் திரிந்து கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் அவன் நிலையைப் பற்றித் தெரிந்து வந்து தெரிவிக்க மாட்டார்களா?

ஒளவையார் :— உண்மைதான் அவர்கள் தங்கள் கடமையைக் கட்டாயம் செய்வார்கள். இருந்தாலும் எனக்கும் அந்தக் கடமை உண்டல்லவா?

அதியமான் :— அன்னையே! இந்த நெல்லிக் கனியை முதலில் உண்ணுங்கள்! தங்கள் களைப்பை உடனே மாற்றும்.

(ஒளவையார் அக்கனியை வாங்கி உண்ணுதல்)

ஒளவையார் :— வள்ளலே! இக்கனி எவ்வளவு இனிமையாக இருக்கிறது! தேவாமுதம் என்று சொல்லத்தான் கேட்டிருக்கிறேன். இந்த நெல்லிக் கனியைத் தின்றதும் இப்படித்தான் தேவாமுதம் இருக்குமோ என்று நினைக்குமாறு மிகுந்த சுவையாக இருக்கிறதே! இத்தகைய நெல்லிக்கனியை நான் கண்டதும் இல்லை, உண்டதும் இல்லை.

அதியமான்:— அப்படியா! இதன் உண்மையை நன்ருக உணர்ந்து விட்டீர்கள். இது மிகவும் அருமையான நெல்லிக் கனிதான். அமுதக் கனி என்றே சொல்ல வேண்டும். இது பொதிகை மலையிடத்தே கிடைத்தது. மக்கள் ஏற முடியாத மிக உயரமான மலைப் பிளவில் நிற்கும் நெல்லி மரத்தில் தோன்றியது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு கனியே தோன்றுவது. இதனை உண்டவர்கள் பல்லாண்டு நலமுடன் வாழ்வர். இத்தகைய அரிய கனியை முனிவர் ஒருவர் எனக்கு அன்புடன் அளித்தார். நான் அதனைத் தங்கட்குக் கொடுத்தேன்.

ஔவையார்:- அதியர் குலத் தோன்றலே! நின் அன்பை எவ்வாறு பாராட்டுவேன்! வரையாது கொடுக்கும் வள்ளலாகிய நீ, அதனை உண்டு இந்த வையகத்தில் பல்லாண்டு வாழ வேண்டும். நீ வாழ்ந்தால் தமிழ் வாழும், தமிழ்ப் புலவர்கள் வாழ்வர்; இரவலர் இன்பம் பெறுவர். வயது முதிர்ந்த யான் வாழ்ந்து என்ன பயன்?

அதியமான்:— தமிழன்னையே! தாங்கள் அவ்வாறு கூறலாகாது. என்னைவிடத் தாங்களே இவ்வுலகிற்குப் பெரிதும் வேண்டியவர்கள். நீங்கள் நீடூழி வாழ்ந்தால் என் நாடு பொன்னுடாகப் பொலியும். இந்த உலகமே இன்ப உலகமாக விளங்கும். கருத்து நிறைந்த தங்கள் கவிதைகள் என்னைப் போன்றவர்களுக்கு நன்னெறி காட்டும். நான் வாழ்ந்தால் பலரோடு போராடுவேன்; வெற்றி பெறுவேன்; போரில் எண்ணில்லாத உயிர்களை அழிப்பேன் இந்தச் செயலுக்காக நான் பல்லாண்டு வாழ வேண்டுமா? எல்லோருக்கும் நல்வழி காட்டும் தாங்களே நீடூழி வாழ நான் விரும்புகிறேன்.

ஔவையார்:— போரில் வெற்றிமாலை புனையும் வீரனே! பால் போன்ற வெண்ணிறமுடைய பிறை மதியைச் சடையில் அணிந்த சிவபெருமானைப் போல, நீ எந்

நாளும் நிலைத்து வாழ்வாயாக! பெரிய மலையில் அரிய பிளவில் தோன்றிய நெல்லிமரத்தில் பல்லாண்டு களுக்கு ஒரு முறை பழுக்கும் கனியின் சிறப்பைக் குறிப்பிடாமல் எனக்கு அருளோடு கொடுத்தாயே! உனது உயர்ந்த பண்பையும் நீ என்பால் கொண்ட அன்பையும் எவ்வாறு போற்றுவேன்? நீ பல்லாண்டு வாழ்க!

அதியமான்:— தாயே! நீண்டகாலம் வாழ்வதனால் விளை யும் பயனை யான் அறிவேன். அதனாலேயே அமுதக் கனியைத் தாங்கள் அருந்த வேண்டுமென விரும்பி னேன். அதன் அருமையை நான் முதலிலேயே தங் களுக்குக் கூறியிருந்தால் அதனைத் தாங்கள் உண்பீர் களோ? என்னிடம் அன்றோ கொடுத்து உண்ணச் செய்வீர்கள்! தமிழ் வாழவும் தமிழ்நாடு வாழவும், உலகம் வாழவுமே தங்களுக்கு அதனைத் தந்தேன்.

ஔவையார்:— வள்ளலே! உனது உயர்ந்த உள்ளத்தை மனம் உவந்து பாராட்டுகிறேன். காஞ்சிமா நகரில் வாழும் தொண்டைமான் சிறிது செருக்குடன் மீசையை முறுக்குகின்றானும், நம் நாட்டின்மீது படையெடுப் பதற்குப் படைகளைத் திரட்டிக்கொண்டிருக்கின்றானும். உன் போர் வீரத்தையும் படை வலிமையையும் அவ னுக்கு உணர்த்த வேண்டும்.

அதியமான்:— ஆம், அன்னையே! உடனே தாங்கள் தொண்டைமானிடத்துத் தூது செல்ல வேண்டும். அவனுக்கு நம் ஆற்றலை உணர்த்தி, அவன் செருக்கை அடக்கியாக வேண்டும். இதனை நானே தங்களிடம் சொல்ல எண்ணினேன். நுண்ணறிவுடைய தாங்கள் என் குறிப்பறிந்து கூறிவிட்டீர்கள். தங்கள் தூது, நாட்டிற்கு நன்மை விளைப்பதாக; சென்று வருக.

காட்சி — 2

உறுப்பினர்:— தொண்டைமான், ஔவையார்.

இடம்:— காஞ்சிமாநகர் – தொண்டைமான் அரண்மனே.

பொழுது:— காலைநேரம்.

(தொண்டைமான், ஔவையார் வருகையறிந்து
எதிர்கொண்டு வரவேற்றல்)

தொண்டைமான்:– அமுதனைய கவிபாடும் தமிழன்னேயே! வருக! வருக! தமிழ்ப் புலவராகிய தங்கள் வருகையால் நான் பெரிதும் மகிழ்கிறேன். என் அரண்மனேக்குப் புலவர் வாராதநாளேப் பயனற்ற நாளாக எண்ணுவேன். இன்று தாங்கள் வந்தமையால் இந்நாள் என் வாழ்வில் பொன்னுளாகும்.

ஔவையார்:— தண்டமிழ் வளர்க்கும் தொண்டைமானே! வணக்கம். நீ பல்லாண்டு வாழ்க! நின்னே நீண்ட நாளாகக் காண வேண்டுமெனக் கருதியிருந்தேன். இன்றுதான் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது. "அடுத்து முயன்ருலும் ஆகுநாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா" அல்லவா?

தொண்டைமான் : நான் செய்த நல்ல தவத்தின் பயனுகத் தாங்கள் இங்கு வந்தீர்கள். இப்போது தாங்கள் தகடூரிலிருந்து தானே நேரே வருகிறீர்கள் ?

ஔவையார் :— ஆம், அரசே! நான் நேரே தகடூரிலிருந்துதான் வருகிறேன். இன்றியமையாத காரியம் ஒன்றிற்காகவே நின்னேக் காண வந்தேன். எனக்கு நல்வரவு அளித்த நினக்கு மிக்க நன்றியுடையேன்.

தொண்டைமான் :— தமிழ் மூதாட்டியே! தங்கள் வருகை எதற்காக என்பதை நான் இப்போது உணர்ந்து கொண்டேன். தங்கள் தகடூர் நாட்டில் என்னே எதிர்த்து வெற்றி கொள்ளும் வீரர்கள் உள்ளனரோ !

ஔவையார் :— போர்ப் படை மிகுந்த வேந்தே! அடிக்கும் கோலுக்கு அஞ்சாமல் சீறி எதிர்த்து வரும் பாம்பைப் போல, வலிமை பெற்ற இளமையான வீரர்கள் பலர், எங்கள் நாட்டில் உளர். இன்னும் பொது

மன்றத்தில் கொட்டுவார் இல்லாமல் தொங்கிக் கொண்டிருக்கும் முழவம் காற்றின் அசைவால் சிறு ஓசையை எழுப்பினாலும் போர்ப் பறையின் முழக்கமோ என்று எண்ணும் எங்கள் தலைவனும் இருக்கின்றான்.

தொண்டைமான் :— நன்று, தங்கள் நாட்டில் வீரர்கள் இருக்கலாம்; வீரத் தலைவனும் இருக்கலாம். ஆனால்,

தாங்கள் என்னுடைய படைகளைப் பார்த்திருக்க மாட்டீர்கள்; ஆயுதச் சாலையைப்பற்றி அறிந்திருக்க மாட்டீர்கள்.

ஔவையார்:— புலவரைப் போற்றும் தலைவனே! நான் இக் காஞ்சிமாநகரில் புகுந்ததும் முதலிற் செய்தவேலை அதுவே. நின் படைப் பரப்பையும் படைக்கலச் சிறப்பையுமே கண்டு களித்தேன். உன் படைக் கலங்கள் எல்லாம் படைக்கலக் கொட்டிலில் அணி அணியாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் காம்புகள் திருத்தப்பெற்று, நெய் பூசப்பெற்று அழகாக இருக்கின்றன. அவை மாலையாலும், மயில் தோகையாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவற்றை மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்துள்ளாய். ஆனால் எங்கள் தலைவனாகிய அதியமான் படைக்கலங்களோ, பகைவருடன் போராடி, முறிந்தும் சிதைந்தும் முனை மழுங்கியும், கொல்லன் உலைக் களத்தில் செப்பனிடுவதற்காகக் கிடக்கின்றன.

தொண்டைமான் :— தமிழன்னையே! அப்படியானால் அதியமான் என்னை எதிர்த்து வெல்ல முடியுமோ?

ஔவையார் :— போரில் வல்ல வீரனே! நான் கூறுவதைச் சிறிது கூர்ந்து கேட்பாய். குறைந்த நீரே உள்ள குளத்தில் வாழும் முதலை, அந்த நீருள்ளே வந்த வலிமை வாய்ந்த யானையைக் கொன்றுவிடும் என்ற உண்மையை நீ அறிய மாட்டாயா? அம் முதலையைப் போன்றவன் எங்கள் முதல்வனாகிய அதியமான். அவன் போர்த் திறமையை ஆராயாது, இளையன் என்று இகழ்ந்தால் அவனை வெல்லுவது அரிதாகும்.

தொண்டைமான் :— அறவுரை கூறும் அன்னையே! அதியமான் என்னைக் காட்டிலும் வல்லவன் என்பது தங்கள் எண்ணமா? அல்லது அவன் என்னிலும் அதிகமான படை வலிமையுடையவன் என்று கூறுகிறீர்களா?

ஔவையார்:— அன்பிற் சிறந்த அரசே! நான் கூறுவதைத் தவருக எண்ணி இகழ்ந்து விடாதே. நான் உங்கள் இருவருடைய வலிமையையும் நன்ருக அறிவேன். நீவிர் இருவரும் ஒத்த நலனும் வலியும் உடையவர்களே. உங்களில் எவர் வலியர் என்பதைக் காண விரும்பவில்லை. நாட்டின் நலத்தைக் கருதியே உன்னை நாடி ஓடோடி வந்தேன். அதியமான் நின்னைப் போலவே புலவர் பாடும் புகழுடையவன்; இரவலர்க்கு இல்லை யென்னுது கொடுத்து உவக்கும் வள்ளல்; நின்னைப்போல் அன்பிலும் பண்பிலும் சிறந்தவன். அவன் நின் பகைமையை விரும்பாது நட்பை நாடுகின்ருன். நீவீர் இருவரும் நண்பர்களாக வாழ்வதை நான் காண விரும்புகிறேன். நுங்கள் நட்பு, நாட்டிற்கும் நற்றமிழுக்கும் வெற்றியையும் நன்மையையும் விளைவிக்கும். இதுவே எனது உண்மையான விருப்பம்.

தொண்டைமான் :— தமிழ்ச் செல்வியே! தக்க சமயத்தில் வந்து தகுந்த அறவுரையைக் கூறினீர்கள். எங்கள் இருவருடைய நட்பால் நாடும் மொழியும் நலம்பெறுமாயின் இன்றே நான் அதியமானை நண்பனுகப் பெறுவேன். தங்கள் அன்பு நிறைந்த வாழ்த்தையும் பெற்று மகிழ்வேன்.

ஔவையார்:— மக்கள் நலம் பேணும் மன்னவ! என் உள்ளம் எல்லையில்லாத மகிழ்ச்சியுற்றது. நீயும் நின் நாடும் சிறப்புற்று வாழ்க! நான் இன்றே தகடூர்க்குப் புறப்படுகிறேன். அதியமானுக்கு விரைவில் இந்த நற்செய்தியை அறிவிப்பேன்.

வினுக்கள்

1. அதியமான் கொடுத்த நெல்லிக் கனியின் சிறப்பு யாது?

2. அதியமான் நெல்லிக் கனியை ஔவையாருக்கு அளித்தது ஏன்?

3. நெல்லிக் கனியுண்ட ஔவையார் அதியமானை வாழ்த்தியது எங்ஙனம்?

4. ஔவையார் தொண்டைமான் செருக்கை எங்ஙனம் அடக்கினர்?

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்துப் பழகுக:—
   ஓடோடி, இன்றியமையாமை, அறவுரை, தண்டமிழ்.

2. பிரித்து எழுதுக:...
   நற்றமிழ், பல்லாண்டு, தண்டமிழ், தேவாமுதம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
145947
TB
0-,6(8)
N66

RTR
8-41